# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2016

# மதிப்பீட்டு அறிக்கை

## 33 - கணக்கீடு

Curriculum
Assessment & Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2016

# மதிப்பீட்டு அறிக்கை

# 33 - கணக்கீடு


**ஆய்வு அபிவிருத்திக் கிளை**
**தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

**முழுப் பதிப்புரிமையுடையது.**

**கணக்கீடு**

**மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2016**


## நிதி அனுசரணை

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP-WB)

# அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப் பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2016 ஆம் ஆண்டில் 210340 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 44851 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சி செய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிர்யரிமார், அதிபர்மார், ஆசிரியர் ஆலோசகர்கள், பாடப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள் பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) கணக்கியல் பாடத்தின் நோக்கம் பாட அடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளது. இப்பகுதியில் பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ள விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம் வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் கணக்கியல் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2016 பரீட்சையில் கணக்கியல் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. அதில் வினாத்தாள் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள், பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபு ரீதியான சோதனைக் கோட்பாடு (Classical Testing Theory) மற்றும் உருப்படித் துலங்கள் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையில் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணை புரியும் என நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக்கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள், ஊக்கத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் இத்தொகுப்புக்கான நிதி அனுசரணை வழங்கி எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை முறைமையை மீளமைக்கும் செயற்றிட்டத்துக்கும் (TSEP - WB) எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

2017 டிசம்பர் 01
ஆய்வு அபிவிருத்திக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| **வழிகாட்டல்** | : | பீ. சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| **ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும்** | : | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு / அபிவிருத்தி மற்றும் மதிப்பீடு) |
| **இணைப்பாக்கம்** | : | புத்திகா பெரேரா<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| **தொகுப்பு** | : | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| | | கலாநிதி டபிள்யூ.வீ.ஏ.டீ. கருணாரத்ன<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>கணக்கியல் கல்விப் பிரிவு<br>களனி பல்கலைக்கழகம் |
| | | கலாநிதி ஹரேந்திர காரியவசம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், கணக்கியல் பிரிவு<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| | | ரங்கஜீன ஹேரத்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், கணக்கியல் பிரிவு<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| **ஆக்கக் குழு** | : | சந்திராணி ரூபசிங்ஹ<br>இராஜசிங்க ம.ம.வி, ஹங்வெல்ல |
| | | பிரேமனி பெர்ணாந்து<br>சாந்த பீட்டர் வித்தியாலயம், கொழும்பு - 04 |
| | | நளின் ருவன் குமார<br>அனுராதபுரம் மத்திய கல்லூரி, அனுராதபுரம் |
| | | பீ.எம். ஹதரசிங்க<br>விசாகா உயர் பெண்கள் பாடசாலை, பதுளை |
| | | பத்மினி ஹேவாகீகன<br>விசாகா கல்லூரி, கொழும்பு - 05 |
| | | ஈ.எம். நவரத்ன<br>குளி/குளியாபிட்டி மத்திய கல்லூரி, குளியாபிட்டிய |
| **மொழிப்பெயர்ப்பு** | : | சி.எல்.எம் நவாஸ்<br>ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை<br>இப்பாகமுவ |
| **கணினிப் பக்க வடிவமைப்பு** | : | காஞ்சனா சுப்ரமணியம்<br>கணினித் தரவுப் பதிவாளர் |
| **முகப்பு அட்டை வடிவமைப்பு** | : | வை.எஸ். அனுராதி<br>அபிவிருத்தி அதிகாரி |

## உள்ளடக்கம்


பக்க எண்

### பகுதி I

1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1 பாடக் குறிக்கோள்கள் 1

1.2 பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2
1.2.2 பரீட்சார்த்திகளினால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் 2
1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் 3
1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 4

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு
1.3.1 வினாத்தாள் I இன் அடைவு 5
1.3.2 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 6
1.3.3 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 6
1.3.4 வினாத்தாள் II இன் அடைவு 7

### பகுதி II

2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்
2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

2.1.1 வினாத்தாள் I இன் கட்டமைப்பு 8
2.1.2 வினாத்தாள் I இன் வினா இல. 1 - 30 வரையான வினாக்கள் 9
2.1.3 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 16
2.1.4 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 17
2.1.5 வினாத்தாள் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய முழுமையான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 25
2.1.6 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்குரிய விடைத் தெரிவுக்கான துலங்கல்கள் (வீதங்களில்) 27
2.1.7 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ள விதம் 30

2.2 வினாத்தாள் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தெடர்பான தகவல்களும்
2.2.1 வினாத்தாள் II இன் கட்டமைப்பு 32
2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 33
2.2.3 வினாத்தாள் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 73

### பகுதி III

3 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்
3.1 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் 74
3.2 கற்றல் - கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும் 76

# பகுதி I

## 1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 கணக்கீட்டுப் பாடக் குறிக்கோள்கள்

இப்பாடத்திட்டத்தினைப் பின்பற்றுவதனால் மாணவர்,

* கணக்கீட்டின் எண்ணக்கரு ரீதியான சட்டகம் தொடர்பிலான அடிப்படை விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வார்.
* கணக்கியல் நுட்ப முறைகள் தொடர்பில் பெற்ற அடிப்படை அறிவினைப் பயன்படுத்துவார்.
* கணக்கீட்டுப் பாடத்துறையில் வெளிப்படையாகக் காணப்படும் புத்தாக்கங்களை விளங்கிக் கொள்வார்.
* கணக்கீட்டுப் பாடத்துறையின் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் அறிவினை பல்வேறு தொழில் தேவைகளுக்குப் பயன்படுத்துவார்.
* சமூகப் பொருளாதார சூழலொன்றில் வினைத்திறனாகச் செயற்படக் கூடிய முகாமைத்துவத் திறனைப் பெற்றுக்கொள்வார்.
* பல்வேறுபட்ட வணிக அமைப்புக்களின் கணக்கு வைப்பு தொடர்பிலான திறனைப் பெற்றுக் கொள்வார்.
* பாடத்துறையில் தேடியறிதல்களை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கும் அனுபவத்தினை எதிர்கால ஆய்வு அபிவிருத்திக் கருமங்களுக்கு பயன்படுத்திக் கொள்வார்.
* வளங்களை ஆக்கபூர்வமாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கான தேர்ச்சியினை விருத்தி செய்து கொள்வார்.

## 1.2 பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

### 1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழிமூலம் | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 41764 | 4230 | 45994 |
| தமிழ் | 7504 | 948 | 8452 |
| ஆங்கிலம் | 1997 | 797 | 2794 |
| **மொத்தம்** | **51265** | **5975** | **57240** |

அட்டவணை 1

### 1.2.2 பரீட்சார்த்திகளினால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 7775 | 15.17 | 603 | 10.09 | 8378 | 14.64 |
| B | 5692 | 11.10 | 448 | 7.50 | 6140 | 10.73 |
| C | 9965 | 19.44 | 735 | 12.30 | 10700 | 18.69 |
| S | 14811 | 28.89 | 1581 | 26.46 | 16392 | 28.64 |
| F | 13022 | 25.40 | 2608 | 43.65 | 15630 | 27.31 |
| மொத்தம் | **51265** | **89.56** | **5975** | **10.44** | **57240** | **100.00** |

அட்டவணை 2

பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளில் ஏறக்குறைய 75% மானோர் கணக்கீடு பாடத்தில் சித்தியடைந்திருந்தாலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் ஏறக்குறைய 54% மானோர் மாத்திரமே இப்பாடத்தில் சித்தியடைந்துள்ளது மேலுள்ள புள்ளி விபரங்களினூடாக தெளிவாகின்றது. பொதுவாக ப்பார்க்கும்போதும் பரீட்சார்த்திகளில் ஏறக்குறைய 73% மானோர் இப்பாடத்தில் சித்தியடைந்துள்ளமையை மேலுள்ள அட்டவணை எமக்கு புலப்படுத்துகின்றது.

### 1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

| மாவட்டம் | தோற்றியோரின் எண்ணிக்கை | அதி சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதோர் (F) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 8293 | 1490 | 17.97 | 953 | 11.49 | 1614 | 19.46 | 2494 | 30.07 | 6551 | 78.99 | 1742 | 21.01 |
| 2. கம்பஹா | 4899 | 598 | 12.21 | 465 | 9.49 | 872 | 17.80 | 1511 | 30.84 | 3446 | 70.34 | 1453 | 29.66 |
| 3. களுத்துறை | 2338 | 357 | 15.27 | 252 | 10.78 | 441 | 18.86 | 675 | 28.87 | 1725 | 73.78 | 613 | 26.22 |
| 4. கண்டி | 2755 | 285 | 10.34 | 275 | 9.98 | 456 | 16.55 | 866 | 31.43 | 1882 | 68.31 | 873 | 31.69 |
| 5. மாத்தளை | 726 | 72 | 9.92 | 68 | 9.37 | 138 | 19.01 | 216 | 29.75 | 494 | 68.04 | 232 | 31.96 |
| 6. நுவரெலியா | 1108 | 104 | 9.39 | 105 | 9.48 | 252 | 22.74 | 312 | 28.16 | 773 | 69.77 | 335 | 30.23 |
| 7. காலி | 2159 | 325 | 15.05 | 231 | 10.70 | 398 | 18.43 | 562 | 26.03 | 1516 | 70.22 | 643 | 29.78 |
| 8. மாத்தறை | 1276 | 194 | 15.20 | 152 | 11.91 | 275 | 21.55 | 362 | 28.37 | 983 | 77.04 | 293 | 22.96 |
| 9. அம்பாந்தோட்டை | 780 | 96 | 12.31 | 75 | 9.62 | 144 | 18.46 | 234 | 30.00 | 549 | 70.38 | 231 | 29.62 |
| 10. யாழ்ப்பாணம் | 877 | 121 | 13.80 | 104 | 11.86 | 193 | 22.01 | 243 | 27.71 | 661 | 75.37 | 216 | 24.63 |
| 11. கிளிநொச்சி | 152 | 11 | 7.24 | 12 | 7.89 | 22 | 14.47 | 59 | 38.82 | 104 | 68.42 | 48 | 31.58 |
| 12. மன்னார் | 197 | 18 | 9.14 | 16 | 8.12 | 46 | 23.35 | 65 | 32.99 | 145 | 73.60 | 52 | 26.40 |
| 13. வவுனியா | 330 | 46 | 13.94 | 28 | 8.48 | 71 | 21.52 | 90 | 27.27 | 235 | 71.21 | 95 | 28.79 |
| 14. முல்லைத்தீவு | 142 | 13 | 9.15 | 18 | 12.68 | 32 | 22.54 | 49 | 34.51 | 112 | 78.87 | 30 | 21.13 |
| 15. மட்டக்களப்பு | 641 | 119 | 18.56 | 93 | 14.51 | 120 | 18.72 | 161 | 25.12 | 493 | 76.91 | 148 | 23.09 |
| 16. அம்பாறை | 858 | 102 | 11.89 | 79 | 9.21 | 144 | 16.78 | 247 | 28.79 | 572 | 66.67 | 286 | 33.33 |
| 17. திருகோணமலை | 613 | 61 | 9.95 | 72 | 11.75 | 90 | 14.68 | 190 | 31.00 | 413 | 67.37 | 200 | 32.63 |
| 18. குருநாகல் | 2223 | 280 | 12.60 | 210 | 9.45 | 405 | 18.22 | 615 | 27.67 | 1510 | 67.93 | 713 | 32.07 |
| 19. புத்தளம் | 1229 | 165 | 13.43 | 121 | 9.85 | 265 | 21.56 | 329 | 26.77 | 880 | 71.60 | 349 | 28.40 |
| 20. அனுராதபுரம் | 1224 | 119 | 9.72 | 118 | 9.64 | 210 | 17.16 | 389 | 31.78 | 836 | 68.30 | 388 | 31.70 |
| 21. பொலன்னறுவை | 531 | 75 | 14.12 | 49 | 9.23 | 99 | 18.64 | 142 | 26.74 | 365 | 68.74 | 166 | 31.26 |
| 22. பதுளை | 1292 | 84 | 6.50 | 85 | 6.58 | 206 | 15.94 | 422 | 32.66 | 797 | 61.69 | 495 | 38.31 |
| 23. மொனராகலை | 632 | 91 | 14.40 | 55 | 8.70 | 122 | 19.30 | 186 | 29.43 | 454 | 71.84 | 178 | 28.16 |
| 24. இரத்தினபுரி | 1756 | 318 | 18.11 | 196 | 11.16 | 342 | 19.48 | 447 | 25.46 | 1303 | 74.20 | 453 | 25.80 |
| 25. கேகாலை | 1280 | 176 | 13.75 | 118 | 9.22 | 242 | 18.91 | 364 | 28.44 | 900 | 70.31 | 380 | 29.69 |
| **நாடு முழுவதும்** | **38311** | **5320** | **13.89** | **3950** | **10.31** | **7199** | **18.79** | **11230** | **29.31** | **27699** | **72.30** | **10612** | **27.70** |

**அட்டவணை** 3

### 1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | மீடிறன் சதவீதம் | திரள் மீடிறன் | திரள் மீடிறன் சதவீதம் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 722 | 1.26 | 57240 | 100 |
| 81 - 90 | 3755 | 6.56 | 56518 | 98.74 |
| 71 - 80 | 5536 | 9.67 | 52763 | 92.18 |
| 61 - 70 | 6541 | 11.43 | 47227 | 82.51 |
| 51 - 60 | 7624 | 13.32 | 40686 | 71.08 |
| 41 - 50 | 8895 | 15.54 | 33062 | 57.76 |
| 31 - 40 | 9423 | 16.46 | 24167 | 42.22 |
| 21 - 30 | 8203 | 14.33 | 14744 | 25.76 |
| 11 - 20 | 5593 | 9.77 | 6541 | 11.43 |
| 01 - 10 | 936 | 1.64 | 948 | 1.66 |
| 00 - 00 | 12 | 0.02 | 12 | 0.02 |

**அட்டவணை 4**

இந்தப் பாடத்திற்குப் பரீட்சார்த்திகள் புள்ளிகள் பெற்ற விதம் வகுப்பாயிடைகளுக்கேற்ப மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாக மேலுள்ள அட்டவணையின்படி இப்பாடத்திற்கு தோற்றிய 57240 பேர்களில் 31-40 வகுப்பாயிடையினுள் புள்ளிகள் பெற்றோரின் எண்ணிக்கை 9423 ஆகும். அது வீதத்தில் 16.46% ஆகும். 40 புள்ளிகள் அல்லது அதனிலும் குறைந்த புள்ளிகள் பெற்றோரின் எண்ணிக்கை 24167 ஆக இருந்ததுடன், அதன் வீதம் 42.22% ஆகும்.

### 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

#### 1.3.1 வினாத்தாள் I இன் அடைவு




**வரைபு1** (RD/16/05/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

1 ஆம் வினாத்தாளின் ஒவ்வொரு வினாவிற்கும் விண்ணப்பதாரிகள் சரியாக விடையளித்த வீதமானது மேலுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக : மேலுள்ள வரைபிற்கேற்ப விண்ணப்பதாரிகளின் பெரும்பாலானோர் 01 வது வினாவிற்கே சரியாக விடையளித்துள்ளனர். அது 94% ஆகும். வினா இலக்கம் 43 இற்கே குறைந்த தொகையினர் சரியான விடையளித்துள்ளனர். அது 22% ஆகும்.

### 1.3.2 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்




வினாத்தாள் II இல் ஒவ்வொரு வினாக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ள முறையானது இவ்வரைபின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது. அதற்கேற்ப கட்டாய வினாவாகிய 1ம் 2ம் வினாக்களுக்கு மிகச் சிறிய தொகையினர் தவிர்ந்த ஏனைய சகல விண்ணப்பதாரர்களும் விடையளித்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது. ஏனைய வினாக்களில் விண்ணப்பதாரிகளில் கூடுதலானோர் வினாத்தாள் II இன் 3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளதுடன் அதன் அளவு 95% ஆகும். ஏனைய வினாக்களில் விண்ணப்பதாரிகள் குறைவாக தெரிவு செய்துள்ளது 06 ஆம் வினா என்பதுடன் அது 51% ஆகும்.

**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.3 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




வினாத்தாள் II இல் ஒவ்வொரு வினாவிற்கும் புள்ளிகள் பெற்றுள்ள முறை இவ்வரைபின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது. உதாரணமாக 1 ஆம் வினாவிற்கு இங்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 20 ஆகும். அப்புள்ளிகளில் 76%-100% (16-20 புள்ளிகள்) வகுப்பாயிடையில் புள்ளிகள் பெற்ற வீதம் 23% மாத்திரமேயாகும். எனினும் விண்ணப்பதாரிகளில் கூடுதலானோர் அதாவது 30% த்தினர் இவ்வினாவிற்கு 0%-25% (0-5) வரையான வகுப்பாயிடைக்குரிய புள்ளி அளவினையே பெற்றுள்ளனர்.

**வரைபு 3** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.4 வினாத்தாள் II இன் அடைவு




வரைபு 4 (RD/16/04/AL) படிவத்திலிருந்து பெற்ற தகவல்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.)

# பகுதி II

## 2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாத்தாள் I இன் கட்டமைப்பு

* நேரம் 02 மணித்தியாலங்களாகும்.
* 30 பல்தேர்வு வினாக்களும், சுருக்க விடையளித்தல் வினாக்கள் 20 உம் காணப்படுகின்றன.
* சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
* ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.
* விடைத்தாள் மதிப்பீட்டின் போது ஒவ்வொரு வினாவிற்கும் 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். அதற்கேற்ப மொத்தப்புள்ளிகள் 200 ஆகும்.
* பக்கம் 25 இல் இறுதிப் புள்ளி மதிப்பிடும் முறை தொடர்பாக காட்டப்பட்டுள்ளது.

## 2.1.2 வினாத்தாள் I இன் வினா இல. 1 - 30 வரையான வினாக்கள்

**1.** பின்வரும் கூற்றுகளில் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை **மிகச் சிறப்பாக** விபரிக்கின்றது ?
(1) நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பப் பதிவேடுகளில் பதிதல்
(2) நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களை நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்குப் பதிதல்
(3) கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதி அறிக்கைகளைத் தயாரித்தல்
(4) முகாமையாளர்களின் பாவனைக்காக நிறுவனம் பற்றிய தகவல்களை வழங்குதல்
(5) நிறுவனத்தின் அக்கறையுடையோர்களின் தீர்மானம் எடுத்தலுக்காக தகவல்களை வழங்குதல் (……)

**2.** பின்வரும் எண்ணக்கருக்களில் எது நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துகள் என வகைப்படுத்துவதற்கான அடிப்படையை வழங்குகிறது ?
(1) அட்டுறு (2) தொடர்ந்து இயங்குதல் (3) வரலாற்றுக் கிரயம்
(4) கணக்கீட்டுக் காலம் (5) முன்னெச்சரிக்கை (……)

**3.** பின்வரும் எண்ணக்கருக்களில் எது வருட முடிவிலுள்ள சரக்கிருப்பை கிரயத்தினதும் தேறிய தேறத்தக்க பெறுமதியினதும் ஆகக் குறைந்த பெறுமதியில் இனங்காண்பதற்கான அடிப்படையை வழங்குகிறது ?
(1) அட்டுறு
(2) கணக்கீட்டுக் காலம்
(3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
(4) தேறல்
(5) முன்னெச்சரிக்கை (……)

**4.** இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் 'நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின்படி' பின்வருவனவற்றுள் எது நிதித் தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணாதிசயங்களில் ஒன்று **அல்ல** ?
(1) ஒப்பீட்டுத் தன்மை (2) உண்மையான பிரதிநிதித்துவம்
(3) மெய்மையாக்கும் தன்மை (4) காலம் தவறாமை
(5) விளங்கிக்கொள்ளும் தன்மை (……)

**5.** நிறுவனமொன்றின் கணக்கீட்டுச் செய்முறை தொடர்பில், பின்வரும் கூற்றுகளில் எது **சரியானதாகும்** ?
(1) சில்லறைக் காசுப் புத்தகம் நிறுவனத்தின் பேரேட்டுக் கணக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.
(2) எல்லா மூல ஆவணங்களும் நிறுவனமொன்றின் கணக்காளரால் தயாரிக்கப்படுகிறது.
(3) கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் எல்லாச் சொத்துகளையும் பதிவதற்கு கொள்வனவு நாளேடு பயன்படுத்தப்படுகிறது.
(4) நிறுவனமொன்றின் பரீட்சைமீதியின் இணக்கமானது கணக்கீட்டுச் செய்முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துகிறது.
(5) பொருட்களின் கடன் விற்பனைகள் தொடர்பான சுருக்கமான தகவல்களானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படுகிறது. (……)

**6.** பின்வரும் தகவல்கள் வரையறுத்த தயாளன் பொதுக்கம்பனியுடன் தொடர்பானவைகளாகும்.

| | 31.03.2016 இலுள்ளபடி (ரூ.) | 31.03.2015 இலுள்ளபடி (ரூ.) |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வாடகை | – | 60 000 |
| செலுத்த வேண்டிய பழுதுபார்த்தல் செலவுகள் | 40 000 | 80 000 |

- கம்பனியானது 01.04.2014 இல் கட்டடமொன்றை ரூ. 30 000 மாதாந்த வாடகைக்கு எடுத்துள்ளது.
- 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்குச் செலுத்திய வாடகை, பழுதுபார்த்தல் செலவுகள் முறையே ரூ. 480 000, ரூ. 380 000 ஆகும்.

கம்பனியின் 31.03.2016 இலுள்ளவாறான முற்பண வாடகை மற்றும் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பழுதுபார்த்தல் செலவுகள்:

| | முற்பண வாடகை (ரூ.) | பழுதுபார்த்தல் செலவுகள் (ரூ.) |
|---|---|---|
| (1) | 60 000 | 340 000 |
| (2) | 60 000 | 420 000 |
| (3) | 120 000 | 340 000 |
| (4) | 480 000 | 420 000 |
| (5) | 480 000 | 300 000 |

(……)

**7.** நிறுவனமொன்றினால் 31.03.2016 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறிய சம்பளமாக ரூ. 900 000 செலுத்தப்பட்டது. ஊழியர் சேமலாப நிதி (ஊ. சே. நி.) இற்கான ஊழியர்களினதும் தொழில் தருனர்களினதும் பங்களிப்புகள் முறையே 10%, 15% ஆகும். 2016 மார்ச் மாதத்திற்கான இப்பங்களிப்புகள் இதுவரை செலுத்தப்படவில்லை. ஊழியர் சம்பளத்திலிருந்து ஊ. சே. நிதிக்கான பங்களிப்பு மாத்திரமே கழிக்கப்படுகிறது. இக் கொடுக்கல்வாங்கல்களின் **விளைவானது** கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் எதனால் காட்டப்படுகிறது ?

| | சொத்துகள் | பொறுப்புகள் | உரிமையாண்மை |
|---|---|---|---|
| (1) | ரூ. 900 000 குறைவு | ரூ. 150 000 அதிகரிப்பு | ரூ. 1 050 000 குறைவு |
| (2) | ரூ. 900 000 குறைவு | ரூ. 100 000 அதிகரிப்பு | ரூ. 1 000 000 குறைவு |
| (3) | ரூ. 900 000 குறைவு | ரூ. 250 000 அதிகரிப்பு | ரூ. 1 150 000 குறைவு |
| (4) | ரூ. 1 000 000 குறைவு | ரூ. 150 000 அதிகரிப்பு | ரூ. 1 150 000 குறைவு |
| (5) | ரூ. 1 000 000 குறைவு | – | ரூ. 1 000 000 குறைவு |

(……)

**8.** வரையறுத்த ரேனுகா பொதுக்கம்பனியின் 31.03.2016 இலுள்ளவாறான பரீட்சைமீதியானது சமப்படவில்லை. இவ் வேறுபாடானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையானது பின்வருவனவற்றை வெளிக்கொணர்ந்தது.

A - மின்சார செலவினங்களுக்காக செலுத்தப்பட்ட ரூ. 200 000 ஆனது காசுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது.

B - கொள்வனவு நாளேடானது ரூ. 60 000 இனால் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.

C - கடன்பட்டோரிடமிருந்து பெற்ற ரூ. 50 000 ஆனது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் காசுக் கொடுப்பனவாக பதியப்பட்டிருந்தது.

D - ரூ. 40 000 விற்பனை விலைப்பட்டியலானது கடன்பட்டோர் பேரேட்டில் மாத்திரமே பதியப்பட்டுள்ளது.

மேலே தரப்பட்டுள்ள வழுக்கல்களில் எவை தொங்கல் கணக்கிலுள்ள மீதியிற்குப் பங்களித்துள்ளன ?

(1) A, C ஆகியன மாத்திரம்
(2) B, D ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம் (……)

**9.** திருமண மண்டபமொன்றை வாடகைக்கு விடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றில் 2016 ஏப்ரல் மாதத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. இம் மண்டபம் ரூ. 400 000 வாடகைக்கு விடப்படுகிறது. இவ் வாடகையில் 25% ஆனது மண்டபத்தை முன்பதிவு செய்யும்போது செலுத்த வேண்டியுள்ளதுடன் மீதிப் பணமானது திருமண வரவேற்பு முடிவடைந்து ஒரு வார காலத்தினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

| திகதி | கொடுக்கல்வாங்கல் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 02.04.2016 | 28.03.2016 இல் நடைபெற்ற திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட மீதித் தொகை | 300 000 |
| 05.04.2016 | 27.04.2016 இல் நடைபெறவிருக்கும் திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட முற்பணம் | 100 000 |
| 15.04.2016 | 10.05.2016 இல் நடைபெறவிருக்கும் திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட முற்பணம் | 100 000 |
| 30.04.2016 | 2016 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் | 330 000 |

2016 ஏப்ரல் மாதத்திற்கான வருமானம், இலாபம்/(நட்டம்) மற்றும் 30.04.2016 இலுள்ளவாறான வருமதிகள் எவை ?

| | வருமானம் (ரூ.) | இலாபம்/(நட்டம்) (ரூ.) | வருமதிகள் (ரூ.) |
|---|---|---|---|
| (1) | 200 000 | (130 000) | 600 000 |
| (2) | 400 000 | 70 000 | 300 000 |
| (3) | 500 000 | 170 000 | 600 000 |
| (4) | 700 000 | 370 000 | 300 000 |
| (5) | 800 000 | 470 000 | 600 000 |

(……)

- **10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் பாடசாலையொன்றின் பழைய மாணவர் சங்கத்தின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

| **விபரம்** | **தொகை (ரூ.'000)** |
|---|---|
| பெற்ற சந்தா (இதில் 1/4 பங்கானது 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானது) | 360 |
| விளையாட்டு உபகரண கொள்வனவுக்காகப் பெறப்பட்ட நன்கொடைகள் | 500 |
| நிலையான வைப்பினால் உழைத்த வட்டி வருமானம் | 50 |
| மொத்தச் செலவுகள் | 300 |

**மேலதிக தகவல்கள்:**

- அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ. 4 000 ஆகும். 31.03.2016 இலுள்ளவாறு இக் கழகத்தில் 100 அங்கத்தவர்கள் இருந்துள்ளனர்.
- நன்கொடைகளைப் பெற்றுக்கொண்ட வருடத்திலிருந்து தொடர்ந்துவரும் 5 வருட காலத்திற்கு அவற்றை வருமானமாக இனங்காண்பது இக் கழகத்தின் கொள்கையாகும்.
- நிலையான வைப்பு வட்டியானது 31.05.2016 இல் முதிர்ச்சியடையும்போது பெறப்படும்.
- எல்லாச் செலவுகளும் காசு மூலம் செலுத்தப்பட்டுள்ளது.
- 31.03.2015 இல் காசு மீதியானது ரூ. 150 000 ஆக இருந்தது.

**10.** 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மிகை எது ?
(1) ரூ. 120 000 (2) ரூ. 210 000 (3) ரூ. 250 000 (4) ரூ. 520 000 (5) ரூ. 650 000 (……)

**11.** 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசு மீதியின் **தேறிய அதிகரிப்பு** எது ?
(1) ரூ. 470 000 (2) ரூ. 520 000 (3) ரூ. 560 000 (4) ரூ. 610 000 (5) ரூ. 860 000 (……)

**12.** பெறுமதி சேர் வரி (VAT) பதிவினைக் கொண்டுள்ள வரையறுத்த அஜித் பொதுக்கம்பனியானது 01.04.2015 இல் இயந்திரமொன்றை ரூ. 4 140 000 இற்கு வாங்கியது. இத்தொகையில் VAT இற்காகச் செலுத்திய ரூ. 540 000 உம் உள்ளடங்கியுள்ளது. இந்த இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். இதற்கு எஞ்சிய பெறுமதி எதுவும் இல்லை.
LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி 31.03.2016 இலுள்ளவாறான இயந்திரத்தின் கொண்டுசெல் தொகை யாது ?
(1) ரூ. 2 448 000 (2) ரூ. 2 880 000 (3) ரூ. 3 312 000 (4) ரூ. 3 600 000 (5) ரூ. 4 140 000 (……)

**13.** பங்குடைமையொன்று தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது **சரியானது** ?
(1) பங்குடைமையொன்றின் உரிமையாண்மையானது பங்காளர்களின் மூலதனத்தையும் நடைமுறைக் கணக்கு மீதிகளையும் ஏனைய ஒதுக்கங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கிய மொத்தத் தொகையினைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
(2) 1890 ஆம் ஆண்டு பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி பங்காளரொருவர் அப்பங்குடைமைக்குத் தனது சேவையை வழங்கும்போது மாத்திரமே அவர் சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவராவர்.
(3) 1890 பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி பங்குடைமையின் இலாப நட்டங்களானது பங்காளர்களின் மூலதனப் பங்களிப்புகளுக்கு ஏற்ப அவர்களுக்கிடையே பகிரப்படுகிறது.
(4) பங்குடைமையொன்றின் நன்மதிப்பானது பங்காளர் ஒருவரை அனுமதிக்கும்போது அல்லது அவர் இளைப்பாறும்போது மாத்திரமே மதிப்பீடு செய்யப்படும்.
(5) நிதி வருடமொன்றின் முதல் நாளில் அல்லது இறுதி நாளில் மாத்திரமே பங்காளரொருவரைச் சேர்க்கவோ அல்லது பங்காளரொருவர் இளைப்பாறவோ முடியும். (……)

**14.** பின்வருவனவற்றுள் எதை/எவற்றை LKAS 2 (சரக்கிருப்பு) இன் வரைவிலக்கணத்தின்படி சரக்கிருப்பு என அடையாளப்படுத்த முடியும் ?
A - வழமையான வியாபார நடவடிக்கைகளின்போது விற்பனைக்காக வைத்திருக்கும் பொருட்கள்
B - வழமையான வியாபார நடவடிக்கைகளின்போது விற்பனை செய்வதற்கான உற்பத்திச் செய்முறையிலுள்ள உருப்படிகள்
C - உற்பத்திச் செயன்முறையில் அல்லது சேவை வழங்குவதில் நுகரப்படும் பொருட்கள் மற்றும் வழங்கல்கள் (supplies)
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம் (……)

**15.** கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் வரையறுத்த ராதிகா பொதுக்கம்பனியின் மோட்டார் வாகனங்கள் தொடர்பானவையாகும்.

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| 01.04.2015 இலுள்ளவாறான கொண்டுசெல் தொகை | 6 500 |
| 30.09.2015 இல் அகற்றப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் மீதான நட்டம் | 150 |
| 01.01.2016 இல் பெறப்பட்ட புதிய மோட்டார் வாகனம் | 4 000 |

வருட ஆரம்பத்தில் காணப்படும் எல்லா மோட்டார் வாகனங்களும் 01.04.2010 இல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். இவ்வருடத்தில் அகற்றப்பட்ட மோட்டார் வாகனமானது ரூ. 3 000 000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இம்மோட்டார் வாகனங்களானது நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.
31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மோட்டார் வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வும் மற்றும் அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் விற்பனையிலிருந்து பெற்ற தொகையும் பின்வருவனவற்றுள் எவை ?

| | **பெறுமானத்தேய்வு (ரூ.'000)** | **விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகை (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 650 | 1 500 |
| (2) | 1 000 | 1 350 |
| (3) | 1 100 | 1 350 |
| (4) | 1 100 | 1 200 |
| (5) | 1 250 | 1 200 |

(……)

**16.** வரையறுத்த மஞ்சுளா பொதுக்கம்பனியின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான சுருக்கிய வருமானக் கூற்று பின்வருமாறு:

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| மொத்த இலாபம் | 280 |
| செலவுகள் (பெறுமானத்தேய்வு ரூ. 20 000 மற்றும் அலுவலக உபகரண விற்பனை மீதான நட்டம் ரூ. 10 000 உள்ளடங்களாக) | 100 |
| வருமானவரிச் செலவு | 80 |
| வருடத்திற்கான இலாபம் | 100 |

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தில் கீழே தரப்பட்டுள்ள உருப்படிகளின் மீதிகள் பின்வருமாறு **அதிகரித்துள்ளன**.

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| சரக்கிருப்பு | 80 |
| வியாபார வருமதிகள் | 120 |
| வியாபார செல்மதிகள் | 130 |

இவ்வருடத்தில் செலுத்தப்பட்ட வருமானவரி ரூ. 50 000 ஆகும்.

LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் யாது ?

(1) ரூ. 10 000 (2) ரூ. 90 000 (3) ரூ. 150 000 (4) ரூ. 180 000 (5) ரூ. 230 000 (……)

**17.** வரையறுத்த இந்திரா பொதுக்கம்பனியின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகள் 15.06.2016 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன. 31.03.2016 இலிருந்து 15.06.2016 வரையான காலப்பகுதிக்குள் கம்பனியில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

A - 15.04.2016 இலிருந்து வியாபாரத்தின் ஒரு பகுதியை நிறுத்தும் திட்டத்திற்கான அறிவிப்பினை விடுத்தல். இதனால் வருடாந்தம் ரூ. 600 000 ஐ சேமிப்பதற்கு எதிர்பாக்கப்படுகிறது.

B - 20.04.2016 இல் பிரதான உற்பத்தி பொறி தீயினால் அழிக்கப்பட்டுள்ளது. அதனால் ரூ. 1 000 000 நட்டம் ஏற்பட்டது

C - 30.04.2016 இல் மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனையினால் எழுந்த ரூ. 750 000 மீதியைக் கொண்ட கடன்பட்டோரொருவர் 30.05.2016 இல் முறிவடைந்துள்ளார்.

D - 15.06.2016 இல் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூ. 300 000 இறுதி பங்கிலாபமாகப் பிரகடனப்படுத்தப்படல்.

LKAS 10 (அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்) இன்படி மேலே கூறப்பட்டுள்ள நிகழ்வுகளில் எவை 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தில் **சீராக்கம் செய்யத் தேவையற்ற நிகழ்வுகள்** எனக் கருதப்படும் ?

(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம் (3) A, C, D ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (……)

● **18, 19, 20 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுத்த நடேந்தினி பொதுக்கம்பனியுடன் தொடர்பானவையாகும்.

| **விபரம்** | **(ரூ.'000)** |
|---|---|
| விற்பனைகள் | 1 200 |
| விற்பனைக் கிரயம் | 600 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 300 |
| மோட்டார் வாகனமொன்றின் விற்பனை மீதான ஆதாயம் | 80 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 100 |
| மீள் மதிப்பீட்டு பற்றாக்குறை - அலுவலக உபகரணங்கள் | 120 |
| மீள் மதிப்பீட்டு மிகை - கட்டடங்கள் | 180 |

31.03.2015 இல் முடிவடைந்த வருடத்தில் அலுவலக உபகரணத்தை மீள் மதிப்பீடு செய்ததில் ரூ. 90 000 மிகையொன்று இனங்காணப்பட்டுள்ளது. 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தில் கட்டடங்களானது முதல் தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

**18.** இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான இனங்காணப்பட்ட மொத்த வருமானம், மொத்தச் செலவுகள் எவை ?

| | **மொத்த வருமானம் (ரூ.'000)** | **மொத்தச் செலவுகள் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 1 280 | 900 |
| (2) | 1 340 | 900 |
| (3) | 1 380 | 1 020 |
| (4) | 1 460 | 1 020 |
| (5) | 1 460 | 1 120 |

(……)

**19.** LKAS 1 (நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எவை ?

| | **இலாபம் (ரூ.'000)** | **ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 160 | 180 |
| (2) | 250 | 90 |
| (3) | 260 | 180 |
| (4) | 350 | 90 |
| (5) | 380 | 60 |

(……)

**20.** LKAS 1 (நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய்கள் எவை ?

| | **மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000)** | **நிறுத்திவைத்த வருவாய் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 340 | 160 |
| (2) | 340 | 250 |
| (3) | 440 | 250 |
| (4) | 440 | 260 |
| (5) | 440 | 280 |

(……)

**21.** வியாபாரக் கம்பனியொன்றின் மொத்த இலாப விகிதம் மாறாதிருக்கையில் பின்வருவனவற்றுள் எது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது நடைமுறையாண்டின் தேறிய இலாப விகிதத்தைக் **குறைவடையச்** செய்கிறது ?

A - நடைமுறை வருடத்தின் முடிவிலுள்ள சரக்கிருப்பின் தேறிய தேறத்தக்க பெறுமதியானது அதன் கிரயத்தை விடக் குறைவாய் இருத்தல்

B - வட்டி வருமானத்தில் குறைவு

C - கட்டடங்கள் முதல் தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டபோது ஏற்பட்ட பற்றாக்குறை

D - சாதாரண பங்குதாரர்களுக்கான இடைக்காலப் பங்கிலாபக் கொடுப்பனவு

(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) A, B, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்

(……)

**22.** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| விற்பனைகள் | ரூ. | 4 000 000 |
| வருடத்திற்கான இலாபம் | ரூ. | 200 000 |
| வட்டிச் செலவுகள் | ரூ. | 60 000 |
| வருமானவரிச் செலவுகள் | ரூ. | 40 000 |

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாப விகிதம் மற்றும் வட்டிக்காப்பு விகிதம் என்பன யாவை ?

| | **தேறிய இலாப விகிதம் (%)** | **வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்)** |
|---|---|---|
| (1) | 5 | 3.3 |
| (2) | 5 | 5 |
| (3) | 6 | 4 |
| (4) | 6 | 5 |
| (5) | 7.5 | 4 |

(……)

**23.** கிரயங்களை வகைப்படுத்துதல் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது **சரியானது** ?
(1) பொருள் கிரயமானது நேர்க் கிரயங்களை மாத்திரமே உள்ளடக்கியுள்ளது.
(2) எல்லா நேர்க் கிரயங்களும் மாறும் கிரயங்களாகும்.
(3) இயந்திரத்தின் பெறுமானத்தேய்வானது கட்டுப்படுத்தக்கூடிய கிரயமொன்றாகக் கருதப்படும்.
(4) கிரயங்களானது அவற்றின் நடத்தையின் அடிப்படையில் பிரதானமாக மாறும் கிரயம், நிலையான கிரயம் என வகைப்படுத்தப்படும்.
(5) கிரயங்களானது சரக்கிருப்பு மதிப்பீட்டுக்காக 'தொடர்புடைய' மற்றும் 'தொடர்பற்ற' கிரயங்கள் என வகைப்படுத்தப்படுகிறது. (……)

● **24ஆம் 25ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

கம்பனியொன்று பொருட்களை உற்பத்தி செய்வதற்கு 'A' எனும் மூலப்பொருளைப் பயன்படுத்துகிறது. இப்பொருளின் கட்டளையொன்றுக்கான கிரயம் ரூ. 250 ஆகும். அதன் அலகொன்றுக்கான வருடாந்த இருப்பு வைத்திருத்தல் கிரயம் ரூ. 100 ஆகும். இக் கம்பனி 'A' மூலப்பொருட்களின் மீள் கட்டளைத் தொகையைத் தீர்மானிப்பதற்கு சிக்கன கட்டளைத் தொகை (EOQ) மாதிரியைப் பயன்படுத்துகிறது. பின்வரும் தகவல்கள் 'A' மூலப்பொருட்களுடன் தொடர்பானவை.

| | |
|---|---|
| ஆகக் கூடிய பாவனை வாரமொன்றுக்கு | 750 அலகுகள் |
| ஆகக் குறைந்த பாவனை வாரமொன்றுக்கு | 250 அலகுகள் |
| சிக்கன கட்டளைத் தொகை | 1 000 அலகுகள் |
| விநியோகக் காலம் | 3 வாரங்கள் (ஆகக் குறைந்தது) - 5 வாரங்கள் (ஆகக் கூடியது) |

**24.** மூலப்பொருள் 'A' இன் ஆகக் கூடிய இருப்பு மட்டம் எது ?
(1) 1 750 அலகுகள் (2) 2 750 அலகுகள் (3) 3 500 அலகுகள்
(4) 3 750 அலகுகள் (5) 4 000 அலகுகள் (……)

**25.** மூலப்பொருள் 'A' இன் வருடாந்தக் கேள்வி எது ?
(1) 200 000 அலகுகள் (2) 400 000 அலகுகள் (3) 500 000 அலகுகள்
(4) 1 250 000 அலகுகள் (5) 2 500 000 அலகுகள் (……)

● **26ஆம் 27ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் இயந்திரம், முடிவுறுத்தல் ஆகிய இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் சேவைத் திணைக்களத்தையும் (களஞ்சியம்) கொண்டுள்ள கம்பனியொன்றுடன் தொடர்பானவையாகும்.

| **விபரம்** | **இயந்திரம்** | **முடிவுறுத்தல்** | **களஞ்சியம்** |
|---|---|---|---|
| பாதிடப்பட்ட மேந்தலைகள் | ரூ. 175 000 | ரூ. 125 000 | ரூ. 50 000 |
| மேந்தலை உறுஞ்சல் வீதம் | இயந்திர மணித்தியாலமொன்றுக்கு ரூ. 20 | ஊழிய மணித்தியாலமொன்றுக்கு ரூ. 10 | – |

களஞ்சியத்தின் மொத்த மேந்தலையானது உற்பத்தித் திணைக்களங்கள் இரண்டுக்குமிடையில் சமமாக மீள் பகிரப்படுகின்றது. இக் கம்பனியில் 'X' பொருளின் அலகொன்றை உற்பத்திச் செய்வதற்கு 2 இயந்திர மணித்தியாலங்களும் 5 ஊழிய மணித்தியாலங்களும் தேவைப்படுகின்றன.

**26.** இயந்திரம், முடிவுறுத்தல் திணைக்களங்களில் முறையே பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் இயந்திர மணித்தியாலங்கள் ஊழிய மணித்தியாலங்கள் எவை ?

| | **இயந்திர மணித்தியாலங்கள்** | **ஊழிய மணித்தியாலங்கள்** |
|---|---|---|
| (1) | 8 750 | 12 500 |
| (2) | 10 000 | 15 000 |
| (3) | 10 000 | 10 000 |
| (4) | 17 500 | 6 250 |
| (5) | 20 000 | 7 500 |

(……)

**27.** உற்பத்தி பொருள் 'X' இன் மதிப்பிடப்பட்ட மூலக்கிரயம் ரூ. 120 எனின், இப்பொருளின் அலகிற்கான உற்பத்திக் கிரயம் எது ?

(1) ரூ. 140 (2) ரூ. 150 (3) ரூ. 160 (4) ரூ. 170 (5) ரூ. 210 (……)

**28.** கிரயம்–அளவு–இலாபம் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எவை **சரியானவை** ?

A - சமப்பாட்டுப் புள்ளிக்கு மேல் ஈட்டப்படும் பங்களிப்பானது இலாபத்தினைக் கொடுக்கும்.

B - சமப்பாட்டுப் புள்ளியில் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்திற்குச் சமமானதாகும்.

C - சமப்பாட்டுப் புள்ளிக்கு மேல் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்தினதும் இலாபத்தினதும் கூட்டுத்தொகைக்குச் சமமானதாகும்.

D - சமப்பாட்டுப் புள்ளிக்குக் கீழ் நிலையான கிரயமானது மொத்தப் பங்களிப்பினை விட அதிகமானதாகும்.

(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம் (3) A, C, D ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (……)

**29.** கம்பனியொன்று தனிப் பொருளொன்றை உற்பத்திச் செய்கிறது. இப்பொருளின் உற்பத்திக் கிரயம் அலகொன்றிற்கு ரூ. 200 ஆகும். இதில் 75% மாறும் கிரயமாகும். இக் கம்பனி தற்போது 14 000 அலகுகளை உற்பத்தி செய்கின்றது. இதன் பங்களிப்பு–விற்பனை வீதம் 50% ஆகும். தற்போதைய செயற்பாட்டு மட்டமானது 16 000 அலகுகளாக அதிகரிக்குமாயின் கம்பனியானது மேலதிக உற்பத்தி நிலையான மேந்தலைக் கிரயமாக ரூ. 260 000 ஐ ஏற்க வேண்டியிருக்கும்.

தற்போதுள்ள செயற்பாட்டு மட்டத்தில் சமப்பாட்டுப் புள்ளி (ரூபாவில்) மற்றும் செயற்பாட்டு மட்டம் 16 000 அலகுகளில் அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம்:

| | **சமப்பாட்டுப் புள்ளி (ரூ. '000)** | **அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம் (ரூ.)** |
|---|---|---|
| (1) | 1 400 | 200.00 |
| (2) | 1 400 | 210.00 |
| (3) | 14 00 | 216.25 |
| (4) | 4 200 | 140.00 |
| (5) | 4 200 | 210.00 |

(……)

**30.** ஏனைய காரணிகள் மாறாதிருக்கும்போது பின்வருவனவற்றுள் எவை செயற்றிட்டமொன்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியில் **அதிகரிப்பினை** ஏற்படுத்தும் ?

A - எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களில் அதிகரிப்பு
B - ஆரம்ப முதலீட்டு கிரயத்தில் குறைவு
C - சொத்தின் எஞ்சிய பெறுமதியில் அதிகரிப்பு
D - தேவைப்படும் திரும்பல் வீதத்தில் அதிகரிப்பு

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) B, D ஆகியன மாத்திரம்
(4) A, B, C மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (……)

**2.1.3 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|
| 01. | 5 | 16. | 2 |
| 02. | 2 | 17. | 5 |
| 03. | 5 | 18. | 4 |
| 04. | 2 | 19. | 4 |
| 05. | 1/5 | 20. | 3 |
| 06. | 1 | 21. | 3 |
| 07. | 3 | 22. | 2 |
| 08. | 1 | 23. | 4 |
| 09. | 2 | 24. | 5 |
| 10. | 3 | 25. | 1 |
| 11. | 3 | 26. | 2 |
| 12. | 2 | 27. | 5 |
| 13. | 1 | 28. | 5 |
| 14. | 5 | 29. | 2 |
| 15. | 5 | 30. | 4 |

**சரியான ஒரு விடைக்கு 04 புள்ளி வீதம் மொத்தம் 120 புள்ளிகள்**

## 2.1.4 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையினைப் புள்ளிக் கோடுகளில் எழுதுக.**

**31.** பின்வரும் செயற்பாடுகள் முகாமைக் கணக்கீட்டு எல்லைக்குள் உள்ளடங்குமா என்பதை குறிப்பிடுக.

| செயற்பாடு | ஆம்/இல்லை |
|---|---|
| A - பொருட்களின் விலையிடலுக்கான கிரயத் தகவல்களை வழங்குதல் | :............................ |
| B - பொது நோக்கத்திற்கான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் | :............................ |
| C - நீண்டகால மூலதன முதலீட்டு செயற்திட்டங்களுக்கான மதிப்பீடு | :............................ |
| D - கணக்கீட்டு விகிதங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் இலாபத்தன்மை பகுப்பாய்வு | :............................ |

**விடை**

31. A - ஆம் (01)
    B - இல்லை (01)
    C - ஆம் (01)
    D - ஆம் (01)

**32.** விஷ்ணு 01.01.2016 இல் மூலதனமாக ரூ. 1 000 000 ஐ முதலீடு செய்து வியாபாரமொன்றை ஆரம்பித்தார். இவர் இத்தொகையில் 90% ஐப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவழித்துள்ளதுடன் இப் பொருட்களைக் கிரயத்தில் 30% ஐக் கூட்டி விற்பனை செய்துள்ளார். இவ் வியாபாரத்தின் தேறிய சொத்துகள் 31.03.2016 இல் ரூ. 1 200 000 ஆகும். இக்காலப்பகுதியில் எதுவித மேலதிக மூலதனமோ அல்லது பற்றுகளோ மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2016 இல் முடிவடைந்த காலத்திற்கான பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) இலாபம் ரூ. ..................... (ஆ) செயற்பாட்டுச் செலவினங்கள் ரூ. ...........................

**விடை**

32. (அ) இலாபம் - ரூ. 200 000 (02)

(ஆ) செயற்பாட்டுச் செலவினங்கள் ரூ. 70 000 (02)

**33.** சர்மிளா கடனுக்குப் பொருட்களை 01.04.2016 இல் ரூ. 100 000 இற்கு கொள்வனவு செய்தார். அதே தினத்தில் இப் பொருட்கள் ரூ. 5 000 விற்பனைச் செலவுடன் காசுக்கு ரூ. 120 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் இக் கொடுக்கல் வாங்கல்களின் **தேறிய தாக்கத்தினைக்** காட்டுக.

**சொத்துகள் (ரூ.)** ............... = **பொறுப்புகள் (ரூ.)** ............... + **உரிமையாண்மை (ரூ.)** ...............

**விடை**

33. சொத்துக்கள் (ரூ)115 000 (01) = பொறுப்புக்கள் (ரூ) 100 000 (01) + உரிமையாண்மை (02) (ரூ) 15 000

**34.** உற்பத்தி நிறுவனமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியை கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களானவை **அதிகரிக்குமா** அல்லது **குறைக்குமா** அல்லது **மாற்றமின்மையா** என்பதைக் குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல்** | **அதிகரிக்கும்/ குறைக்கும்/ மாற்றமின்மை** |
|---|---|
| A - பாவித்த இயந்திரத்தை கடனுக்கு விற்பனை செய்தல் | :.............................. |
| B - கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் திரும்ப வருதல் | :.............................. |
| C - வருட காலத்தினுள் அறவிடமுடியாக் கடன்களைப் பதிவழித்தல் | :.............................. |
| D - வருட முடிவில் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டைச் செய்தல் | :.............................. |

**விடை**

34. A - மாற்றமில்லை (01)
    B - குறைக்கும் (01)
    C - குறைக்கும் (01)
    D - மாற்றமில்லை (01)

**35.** கம்பனியொன்று 01.01.2016 இல் பட்டியல் விலையில் ரூ. 500 000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. வழங்குனர் கொள்வனவு விலையில் வியாபாரக் கழிவாக 10% ஐயும் செலுத்த வேண்டிய தொகை 30 நாட்களுக்குள் செலுத்தப்படுமாயின் காசுக் கழிவாக 5% ஐயும் வழங்க சம்மதித்துள்ளார். கம்பனியானது செலுத்த வேண்டிய பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தியுள்ளது.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) பெற்றுக்கொண்ட இயந்திரத்தின் கிரயம் ரூ. :..............................

(ஆ) 31.01.2016 இல் முடிவடைந்த மாதத்திற்கான பெற்ற கழிவினை பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவு:

..........................................................................................................................

..........................................................................................................................

**விடை**

35. (அ) இயந்திரத்தின் பெறுமதி ரூ. 450 000 (02)

(ஆ) நாட்குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| இயந்திர வழங்குநர் கணக்கு | வரவு | ரூ. 22 500 | (02) |
| பெற்ற கழிவுக் கணக்கு | செலவு | ரூ. 22 500 | |

**36.** கம்பனியொன்றின் வங்கி மீதியாக 31.03.2016 இல் ரூ. 450 000 இருந்தது. இத்தினத்தில் இம் மீதியானது வங்கிக்கூற்று மீதியுடன் ஒத்திருக்கவில்லை. இம் மீதிகளை இணைக்கும்போது பின்வருவன வெளிக்கொணரப்பட்டன.

- கடன்பட்டோர் ஒருவர் ரூ. 80 000 காசோலையை நேரடியாக வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.
- வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் ரூ. 40 000 ஆகும்.
- வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 60 000 காசோலை மறுக்கப்பட்டுள்ளது.
- வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 20 000 காசோலை இன்னும் வசூலிக்கப்படவில்லை.
- வழங்கப்பட்ட ரூ. 30 000 காசோலைகள் இன்னும் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

பின்வருவனவற்றை 31.03.2016 இலுள்ளபடி கணிப்பிடுக:

(அ) சீராக்கிய வங்கி மீதி ரூ. ..............................

(ஆ) வங்கிக் கூற்று மீதி ரூ. ..............................

**விடை**

36. (அ) - சீராக்கிய வங்கி மீதி ரூ. 430 000 (02)
    (ஆ) - வங்கிக்கூற்று மீதி ரூ 440 000 (02)

**37.** கம்பனியொன்று தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் எந்த கணக்கீட்டுக் எண்ணக்கருவை **மிகச் சிறப்பாக** விபரிக்கிறது என்பதைக் குறிப்பிடுக.

| **சந்தர்ப்பம்** | **கணக்கீட்டு எண்ணக்கரு** |
|---|---|
| A - காணியின் நியாய பெறுமதி கூடுதலாக இருந்தபோதும் அதனைப் பெற்றுக்கொண்ட விலையில் அறிக்கையிடல் | :………………………………. |
| B - இயந்திரத்தைப் பயன்படுத்த எதிர்பார்க்கும் காலத்திற்கு அதன் பெறுமானத்தேய்வை இனங்காணல் | :………………………………. |
| C - ரூ. 5 000 இற்குக் குறைவான கொள்வனவு விலையுடைய எல்லாச் சொத்துகளும் செலவாக இனங்காணப்படல் | :………………………………. |
| D - சரக்கிருப்பை மதிப்பீடு செய்வதற்காக 'முதல் உள் - முதல் வெளி' விலையிடல் முறையினைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துதல் | :………………………………. |

**விடை**

37. A - வரலாற்றுக் கிரய எண்ணக்கரு (01)
    B - இணைத்தல் எண்ணக்கரு / கால எண்ணக்கரு (01)
    C - பொருண்மை எண்ணக்கரு (01)
    D - கொள்கை மாறாமை எண்ணக்கரு (01)

**38.** பின்வரும் ஒவ்வொரு உருப்படியும் நிதிக் கூற்றுகளிலுள்ள எந்த மூலத்தில் இனங்காணப்படுகிறது என்பதைக் குறிப்பிடுக.

| **உருப்படிகள்** | **மூலம்** |
|---|---|
| A - நிறுத்திவைத்த வருவாய்கள் | :………………………… |
| B - வருமதி வட்டி | :………………………… |
| C - அலுவலக உபகரணமொன்றின் விற்பனை மீதான நட்டம் | :………………………… |
| D - உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | :………………………… |

**விடை**

38. A - உரிமையாண்மை (01)
    B - சொத்து (01)
    C - செலவு (01)
    D - பொறுப்பு (01)

● **39ஆம் 40ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

சக்தி, கலா, பாத்திமா ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து பங்குடைமையொன்றை நடாத்தி வந்தனர். 31.03.2016 இல் பங்குடைமையிலிருந்து பாத்திமா இளைப்பாறினார். இத்தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பு ரூ. 1 000 000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கை பேணுவதில்லை என்பது பங்குடைமையின் கொள்கையாகும். சக்தியும் கலாவும் இலாப நட்டத்தை சமமாகப் பகிர்வு செய்து பங்குடைமையை தொடர்ந்து நடாத்தினர். 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் நடைமுறைக் கணக்கில் பதியப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு:

| விபரம் | சக்தி (ரூ.'000) | கலா (ரூ.'000) | பாத்திமா (ரூ.'000) |
|---|---|---|---|
| இலாபப் பங்கு | 500 | 300 | 200 |
| சம்பளங்கள் | 400 | 400 | 400 |
| மூலதன வட்டி | 300 | 200 | 100 |
| பற்றுகள் | (40) | – | (20) |
| செலுத்திய சம்பளம் | (400) | (400) | (400) |

**39.** பங்காளர்களின் மூலதனக் கணக்குகளில் நன்மதிப்பை சீராக்குவதற்கான நாட்குறிப்புப் பதிவு:

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

**விடை**

39. (அ)

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனக் கணக்கு | கலா | வரவு | 200 000 | |
| மூலதனக் கணக்கு | பாத்திமா | செலவு | | 200 000 |

} (04)

அல்லது

| | | | வரவு(ரூ.) | செலவு(ரூ.) |
|---|---|---|---|---|
| மூலதனக் கணக்கு | சக்தி | வரவு | 500 000 | |
| | கலா | வரவு | 500 000 | |
| மூலதனக் கணக்கு | சக்தி | செலவு | | 500 000 |
| மூலதனக் கணக்கு | கலா | செலவு | | 300 000 |
| மூலதனக் கணக்கு | பாத்திமா | செலவு | | 200 000 |

} (04)

**40.** பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடைமையின் இலாபம் ரூ. ..........................................

(ஆ) பகிரப்பட்ட மொத்த இலாபம் :

சக்தி ரூ. .......................................... பாத்திமா ரூ. ..........................................

**விடை**

40. (அ) பங்குடமையின் இலாபம் ரூ. 2 800 000 (02)

(ஆ) பகிரப்பட்ட மொத்த இலாபம் சக்தி ரூ. 1 200 000 (01)

பாத்திமா ரூ. 700 000 (01)

**41.** LKAS 8 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) இன்படி கணக்கீட்டுக் கொள்கைகளை கம்பனி மாற்றக்கூடிய **இரு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**விடை**

41. (1) கணக்கீட்டு நியமத்தால் வேண்டப்படும் போது (02)

(2) நியாயமான சமர்ப்பித்தலைப் பிரதிபலிப்பதாக முகாமை எண்ணினால் / நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் ஏனைய நிகழ்வுகள் அல்லது நிதி நிலைமை நிதி செயற்றிறன் அல்லது காசுப்பாய்ச்சல் மீதான நிபந்தனைகள் பற்றிய நம்பகமானதும் மிகப் பொருத்தமானதுமான தகவலை வழங்குவதன் மூலம் நிதிக் கூற்றுக்களிலான விளைவுகளை பிரதிபலிக்குமென முகாமை கருதுதல் (02)

**42.** மின்சாரப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்று அதன் வாடிக்கையாளர்களால் பொருட்களில் குறைபாடுகள் உள்ளது எனத் திருப்பிக் கொடுக்கப்படுமாயின் அதற்கான விலையை திருப்பிக் கொடுப்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. எனினும் இது தொடர்பாக சட்டக் கடப்பாடுகள் எதுவுமில்லை. இந்நிலைமையில் LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்) இன்படி, ஏற்பாடொன்றை இனங்காண்பதற்கு திருப்திபடுத்த வேண்டிய **மூன்று** பிரமாணங்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................

**விடை**

42. (1) கடந்த காலக்கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட தற்காலக்கடப்பாடு

(2) தீர்ப்பனவுக்கான பொருளாதார நன்மைகளோடு இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியத் தன்மை காணப்படுமிடத்து

(3) பெறுமதியானது நம்பகமான முறையில் அளவீடு செய்யக் கூடியதாக இருக்குமிடத்து (04)

**43.** LKAS 17 (குத்தகை) இன்படி குத்தகையொன்றை ஒரு நிதிக் குத்தகையாக வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பிரமாணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**விடை**

43. (1) சொத்தின் உடைமை குத்தகைக் காலத்திற்கு பின்பு குத்தகைக்கு எடுத்தவருக்கு மாற்றப்பட்டால்.

(2) நியாயமான விலையில் சொத்துக்கொள்வனவு செய்யக் கூடிய வாய்ப்பு இருந்தால்

(3) குத்தகையானது சொத்தின் பொரளாதாரப்பயன்பாட்டுக் காலத்தின் பெரும் பகுதியாக இருந்தால்

(4) குத்தகைக்கான ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவின் நிகழ்காலப் பெறுமதி சொத்தின் நியாயமான(மெய்) பெறுமதிக்குச்சமமானதாக இருந்தால்

(5) சொத்தானது எந்தவிதமான பெருமளவு சீரமைப்புக்கள் இன்றி குத்தகைக்கு எடுத்தவரால் பயன்படுத்தப்பட்டால்

**(ஏதாவது 2 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)**

**44.** கம்பனியொன்று ரூ. 5 500 000 இற்கு புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. பொருத்தமான நிரல்களின் '√' எனக் குறிப்பிடுவதன் மூலம் LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணம்) இன்படி இவ் இயந்திரக் கொள்வனவு தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கொடுப்பனவுகளானது இயந்திரத்தின் தொடக்கக் கிரயத்திலா அல்லது செலவுகளிலா இனங்காணப்படும் என்பதைக் குறிப்பிடுக.

| விடயம் | தொகை (ரூ.'000) | தொடக்கக் கிரயம் | செலவுகள் |
|---|---|---|---|
| A - இயந்திரத்தை இயக்குபவருக்கான பயிற்சி | 120 | …………………… | ………………… |
| B - பொருத்துதலை உறுதிப்படுத்துவதற்கான பொறியிலாளர் கட்டணம் | 12 | …………………… | ………………… |
| C - இயந்திரத்தைப் பரிசோதித்தல் | 220 | …………………… | ………………… |
| D - இயந்திர திறப்புவிழாச் செலவு | 150 | …………………… | ………………… |

**விடை**

44.

| | தொடக்கக்கிரயம் | செலவுகள் |
|---|---|---|
| A - | - | √ (01) |
| B - | √ (01) | - |
| C - | √ (01) | - |
| D - | - | √ (01) |

**45.** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

- இவ்வருடத்தில் ரூ. 250 000 கிரயம் கொண்ட அலுவலக உபகரணமொன்று ரூ. 50 000 ஆதாயத்தில் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்த தினத்தில் இச்சொத்தின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. 120 000 ஆகும்.
- 01.04.2015 இல் ரூ. 1 500 000 கிரயமான காணியொன்றை ரூ. 500 000 ஐக் காசாகச் செலுத்தியும் மீதித் தொகைக்கு இக்காணியை வங்கியில் அடகு வைத்துப் பெற்றுக்கொண்ட வங்கிக் கடனின் மூலம் செலுத்தியும் வாங்கப்பட்டது. இக் கடனுக்காக 31.03.2016 இல் ரூ. 100 000 வட்டி செலுத்தப்பட்டது.

LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி மேலே கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக ஏற்பட்ட காசுப் பாய்ச்சல்களையும் (பெறுமதிகளுடன்) இக் காசுப் பாய்ச்சல்களின் பொருத்தமான வகைப்படுத்தல்களையும் குறிப்பிடுக.

| | காசுப் பாய்ச்சல் | தொகை (ரூ.) | வகைப்படுத்தல் |
|---|---|---|---|
| A - | ………………………………… | ………………………………… | ………………………………… |
| B - | ………………………………… | ………………………………… | ………………………………… |
| C - | ………………………………… | ………………………………… | ………………………………… |
| D - | ………………………………… | ………………………………… | ………………………………… |

**விடை**

45.

| | காசு பாய்ச்சல் | தொகை (ரூ) | வகைப்படுத்தல் | |
|---|---|---|---|---|
| A | அலுவலக உபகரண விற்பனை | 180 000 | முதலீட்டு நடவடிக்கை | (01) |
| B | காணி வாங்கியது | 1500 000/500 000 | முதலீட்டு நடவடிக்கை | (01) |
| C | வங்கிக் கடன் பெறல் | 1000 000 | நிதியிடல் நடவடிக்கை | (01) |
| D | கடன் வட்டி செலுத்துதல் | 100 000 | நிதியிடல் / செயற்பாட்டு நடவடிக்கை | (01) |

**46.** ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விகிதங்களிலும் ஏற்படும் **அதிகரிப்பானது** கம்பனியொன்றின் திரவத்தன்மையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துமா என்பதைக் குறிப்பிடுக.

| **விகிதம்** | **திரவத்தன்மையில் முன்னேற்றம் (ஆம்/இல்லை)** |
|---|---|
| A - கடன்பட்டோர் புரள்வு | :...................................... |
| B - கடன் சேகரிப்புக் காலம் | :...................................... |
| C - சரக்கிருப்புப் புரள்வு | :...................................... |
| D - சரக்கிருப்பு வைத்திருத்தல் காலம் | :...................................... |

**விடை**

46. A - ஆம் (01)
B - இல்லை (01)
C - ஆம் (01)
D - இல்லை (01)

**47.** கீழே தரப்பட்டுள்ள கிரயங்கள் மேற்சட்டை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றில் ஏற்பட்டதாகும். இக்கிரயங்களை மாறும் கிரயம் (மாறும்) அல்லது நிலையான கிரயம் (நிலையான) என வகைப்படுத்தி, அவை பொருட் கிரயத்தில் உள்ளடக்கப்படுமா என்பதைக் குறிப்பிடுக.

| **கிரயம்** | **மாறும்/நிலையான** | **பொருட் கிரயம் (ஆம்/இல்லை)** |
|---|---|---|
| A - உற்பத்தி செய்யப்பட்ட மேற்சட்டைகளின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் ஊழியர்களுக்கான கூலிகள் | ............... | ........................... |
| B - மேற்சட்டைகளில் தைக்கப்பட்ட பொத்தான்களின் கிரயங்கள் | ............... | ........................... |
| C - தொழிற்சாலைக்கான காப்புறுதிக் கட்டணம் | ............... | ........................... |
| D - உற்பத்தி மேற்பார்வையாளர்களுக்கான சம்பளங்கள் | ............... | ........................... |

**விடை**

| 47. | மாறும் / நிலையான | பொருட் கிரயம் (ஆம்/இல்லை) |
|---|---|---|
| A - | மாறும் | ஆம் |
| B - | மாறும் | ஆம் |
| C - | நிலையான | ஆம் |
| D - | நிலையான | ஆம் (04) |

**ஏதாவது சரியான 2 உருப்படிகளுக்கு 1 பள்ளி வீதம் மொத்தம் 4 புள்ளிகள்**

**48.** கம்பனியொன்று சரக்கிருப்பு வழங்கலை விலையிடுவதற்கு நிறையளித்த சராசரி முறையைப் பயன்படுத்துகிறது. 2016 மார்ச் மாதத்திற்கான சரக்கிருப்பின் உருப்படியொன்று தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| **திகதி** | **விபரம்** | **அளவு (அலகுகள்)** | **விலை (ரூ.)** |
|---|---|---|---|
| 01.03.2016 | மீதி | 1 000 | 10 |
| 07.03.2016 | கொள்வனவுகள் | 2 000 | 15 |
| 14.03.2016 | கொள்வனவுகள் | 4 000 | 11 |
| 20.03.2016 | விற்பனைகள் | 4 000 | ? |

பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) 2016 மார்ச் மாதத்திற்கான விற்பனைக் கிரயம் ரூ. ................

(ஆ) 31.03.2016 இலுள்ளவாறான சரக்கிருப்பு ரூ. .....................

**விடை**

48. (அ) விற்பனைக் கிரயம் ரூ. 48 000 (02) (ஆ) சரக்கிருப்பு ரூ. 36 000 (02)

**49.** கம்பனியொன்று தனிப் பொருளொன்றை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. பின்வரும் விபரங்கள் 10 000 அலகுகள் உற்பத்தி மட்டத்துடன் தொடர்பானவையாகும்.

| | | |
|---|---|---|
| அலகொன்றிற்கான விற்பனை விலை | ரூ. | 90 |
| அலகொன்றுக்கான மாறும் கிரயம் | ரூ. | 60 |
| நிலையான கிரயம் | ரூ. | 180 000 |

சந்தை நிலைமைகளின் மாற்றங்கள் காரணமாக அலகொன்றுக்கான விற்பனை விலையும் மாறும் கிரயமும் ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் முறையே 30% இனாலும் 20% இனாலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

| **நிலைமை** | **சமப்பாட்டுப் புள்ளி (அலகுகள்)** | **பாதுகாப்பு எல்லை (அலகுகள்)** |
|---|---|---|
| (அ) சந்தை நிலைமைகள் மாற்றமடைவதற்கு முன்பு | .............................. | .............................. |
| (ஆ) சந்தை நிலைமைகள் மாற்றமடைந்த பின்பு | .............................. | .............................. |

**விடை**

| 49. | சமப்பாட்டுப் புள்ளி (அலகுகள்) | பாதுகாப்ப எல்லை (அலகுகள்) |
|---|---|---|
| (அ) | 6 000 (01) | 4 000 (01) |
| (ஆ) | 4 000 (01) | 6 000 (01) |

**50.** கம்பனியொன்று இயந்திரமொன்றை ரூ. 2 400 000 இற்குக் கொள்வனவு செய்ய எண்ணியுள்ளது. இதன் பயன்தரு ஆயுட்காலம், எஞ்சிய பெறுமதி என்பன முறையே 5 வருடங்கள், ரூ. 600 000 ஆகும். நேர்கோட்டு முறையானது பெறுமானத்தேய்விடப் பயன்படுத்துகிறது. இவ் இயந்திரத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் ரூ. 600 000 தேறிய காசுப் பாய்ச்சலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) திரும்பப் பெறும் காலம் (வருடங்களில்) .....................

(ஆ) கணக்கீட்டுத் திரும்பல் வீதம் - சராசரி முதலீட்டு அடிப்படையில் (%) ...........................

**விடை**

50. (அ) 4 வருடங்கள் (02)

(ஆ) 16 % (02)

* * *

## 2.1.5 வினாத்தாள் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய முழுமையான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

### வினாத்தாள் I இற்கான விடையளித்தல் தொடர்பான அவதானிப்பு




* நிதிக்கணக்கீடு தொடர்பிலான அடிப்படை அறிவு, கணக்கீட்டு எண்ணக்கருக்கள், கிரய வகைப்படுத்தல், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதிகளை இனங்காணல் தொடர்பில் உள்ளடக்கப்பட்டிருந்த வினா இலக்கங்களாவன முறையே 1, 2, 23, 44 போன்ற வினாக்களுக்கு விண்ணப்பதாரிகளில் 75% த்திற்கும் மேற்பட்ட வீதத்தினர் சரியாக விடையளித்துள்ளமை மேலுள்ள வரைபின் மூலம் தெரியவருகின்றது.

* அதேபோன்று, கணக்கீட்டுச் செயன்முறை, முகாமைத்துவக் கணக்கீட்டுப் பாடத்தின் உள்ளடக்கப்பட்டுள்ள கருமங்கள், கணக்கீட்டுச் சமன்பாடு, கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், நிதிக் கணக்கீட்டு விகிதங்கள், கிரய வகைப்படுத்தல்கள் தொடர்பான அறிவு, விளக்கம் என்பவற்றைப் பரீட்சிப்பதற்காக உள்ளடக்கப்பட்டிருந்த வினா இலக்கங்களாவன 5, 31, 33, 34, 46, 47 போன்ற வினாக்களுக்கு பரீட்சார்த்திகளில் கூடுதலானோர் 65%-74% த்திற்கு இடையிலான தொகையினர் சிறப்பாக விடையளித்திருந்தனர்.

* கணக்கீட்டு எண்ணக்கருக்கள், நிதிக்கணக்கீட்டின் எண்ணக்கரு ரீதியான சட்டகம், அட்டுறு எண்ணக்கருவிற்குரிய சீராக்கம், ஊழியர் சேமலாப நிதிச் சீராக்கம், VAT சீராக்கம், பங்குடமை வணிகம் தொடர்பிலான அடிப்படை அறிவு, LKAS 02 (இருப்பு) பொது மேந்தலைக் கிரய உள்ளடக்க வீதம், வங்கி இணக்கக்கூற்று என்பன தொடர்பிலான அறிவு விளக்கம் என்பவற்றைப் பரீட்சிப்பதற்காக உள்ளடக்கப்பட்டிருந்த 4, 6, 7, 12, 13, 14, 26, 27, 36 போன்ற வினாக்களுக்கு சரியாக விடையளித்துள்ள பரீட்சார்த்திகளில் 50%-64% மானோர் மாத்திரமேயாகும்.

* வினா இலக்கம் 8, 9, 10, 11, 16, 18, 20, 21, 22, 24, 25, 28, 29, 30, 32, 35, 37, 40, 45, 48, 49 போன்ற வினாக்களுக்கு பரீட்சார்த்திகளில் ஒப்பீட்டு ரீதியில் சிறிய அளவினரே சரியாக விடையளித்துள்ளனர். அதன் வீதம் 30%-49% த்திற்கும் இடைப்பட்டதாகும். வழுக்களைத் திருத்துதல், இலாப நோக்கற்ற நிறுவனங்களின் கணக்குகள், LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) LKAS 01 இற்கேற்ப நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், நிதிக் கணக்கீட்டு விகிதங்கள், பொருட்கிரயம், கிரய அளவு, இலாபப் பகுப்பாய்வு மூலதன, முதலீட்டுத் தீர்மானம், தேறிய சொத்துக்களின் அடிப்படையில் இலாபத்தைக் கண்டு பிடித்தல், காசுக்கழிவு மற்றும் வியாபாரக் கழிவு தொடர்பான விளக்கம், கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பயன்படுத்துதல், பங்குடமை வணிகக் கணக்கீடு என்பன தொடர்பிலான அறிவினையும் விளக்கத்தையும் பரீட்சிப்பதற்கான முயற்சியே எடுக்கப்பட்டது.

* வினா இலக்கம் 15, 17, 19, 41, 42, 43, 50 போன்ற வினாக்களுக்கு பரீட்சார்த்திகளின் மிகக் குறைந்த பிரிவினரே சரியாக விடையளித்திருந்ததுடன், அது வீதத்தில் 31% த்தை விடவும் குறைவாகும். ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவும் அகற்றலும் மற்றும் தேய்வு தொடர்பான பிரச்சினைகள், LKAS 10 (அறிக்கைப்படுத்தும் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்) LKAS 01 ற்கேற்ப குறித்த காலப்பகுதிக்கான இலாபம் மற்றும் ஏனைய விரிவான வருமானங்களை இனம்காணல், LKAS 08 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்களும், வழுக்களும்), LKAS 37 (ஒதுக்கங்கள் நிகழத்தக்க பொறுப்புக்களும் நிகழத்தக்க சொத்துக்களும்), LKAS 17 (குத்தகை), மூலதன முதலீட்டு தீர்மானம் என்பன தொடர்பிலான அறிவும் விளக்கமுமே இவ்வினாக்களின் மூலம் பரீட்சிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தது.

அதற்கேற்ப பொதுவாக எடுத்துநோக்கும்போது 1 ஆம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது கணக்கீட்டு நியமங்கள் தொடர்பிலான விளக்கமானது மிகப்பலவீனமான மட்டத்தில் காணப்படுவதுடன், கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது அது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

* கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் மேற்குறிப்பிட்ட வீதங்களைக் கவனத்தில் கொண்டு சரியாக விடையளிப்பதற்கு பலவீனமாகக காணப்பட்ட தலைப்புக்கள் தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டு கற்றல் - கற்பித்தல் செயன்முறையினை விருத்தி செய்துகொள்வது பொருத்தமானது எனவும், செயற்பாட்டு மட்டத்திலான தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய பிரச்சினைகள் மற்றும் விடைகளைக் கலந்துரையாடல் மிகவும் பயனுடையதாக அமையும் எனக் கூறலாம்.

### 2.1.6 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்குரிய விடைத் தெரிவுக்கான துலங்கல்கள் (சதவீதத்தில்)

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவும் செய்யப்பட்ட மாணவர் சதவீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | விடையளிக்காத |
| 1 | 5 | 1.03 | 1.03 | 2.17 | 1.17 | **95.00** | 0.13 |
| 2 | 2 | 5.13 | **78.13** | 2.97 | 12.00 | 2.00 | 0.34 |
| 3 | 5 | 4.80 | 4.80 | 8.00 | 19.03 | 62.77 | 0.60 |
| 4 | 2 | 6.80 | **49.93** | 13.53 | 20.80 | 8.03 | 0.91 |
| 5 | 1 සහ 5 | **25.27** | 3.87 | 10.30 | 14.07 | 6.17 | 0.32 |
| 6 | 1 | **53.20** | 14.00 | 19.50 | 9.40 | 2.83 | 1.07 |
| 7 | 3 | 16.77 | 9.40 | **55.80** | 13.47 | 3.00 | 1.56 |
| 8 | 1 | **44.30** | 8.43 | 12.37 | 7.40 | 26.63 | 0.87 |
| 9 | 2 | 7.53 | **44.50** | 29.53 | 6.53 | 10.77 | 1.14 |
| 10 | 3 | 7.60 | 17.83 | **47.23** | 15.93 | 9.80 | 1.61 |
| 11 | 3 | 14.73 | 15.27 | **35.40** | 24.20 | 8.07 | 2.33 |
| 12 | 2 | 2.43 | **54.57** | 14.57 | 22.47 | 4.97 | 0.99 |
| 13 | 1 | **50.50** | 4.77 | 13.87 | 26.57 | 3.60 | 0.69 |
| 14 | 5 | 6.77 | 18.67 | 12.43 | 4.43 | **57.10** | 0.60 |
| 15 | 5 | 17.67 | 9.47 | 24.37 | 20.30 | **26.47** | 1.72 |
| 16 | 2 | 12.83 | **43.73** | 11.77 | 16.77 | 13.37 | 1.53 |
| 17 | 5 | 16.77 | 18.40 | 22.63 | 12.37 | **28.57** | 1.26 |
| 18 | 4 | 23.93 | 7.07 | 11.47 | **40.20** | 16.40 | 0.93 |
| 19 | 4 | 7.53 | 9.03 | 24.57 | **25.97** | 31.73 | 1.17 |
| 20 | 3 | 10.57 | 11.70 | **35.37** | 18.30 | 22.87 | 1.19 |
| 21 | 3 | 17.50 | 29.03 | **33.03** | 10.57 | 9.00 | 0.87 |
| 22 | 2 | 27.13 | **39.50** | 11.27 | 15.27 | 5.43 | 1.40 |
| 23 | 4 | 2.27 | 10.90 | 2.60 | **79.97** | 3.63 | 0.63 |
| 24 | 5 | 9.70 | 12.10 | 8.83 | 19.60 | **48.37** | 1.40 |
| 25 | 1 | **48.17** | 13.43 | 13.87 | 12.47 | 10.23 | 1.83 |
| 26 | 2 | 20.17 | **52.37** | 6.10 | 10.03 | 10.27 | 1.06 |
| 27 | 5 | 5.90 | 13.50 | 14.20 | 10.53 | **54.27** | 1.60 |
| 28 | 5 | 19.57 | 13.47 | 21.87 | 11.03 | **32.60** | 1.46 |
| 29 | 2 | 9.33 | **44.00** | 20.63 | 11.37 | 11.50 | 3.17 |
| 30 | 4 | 13.60 | 14.30 | 14.30 | **31.73** | 23.30 | 2.77 |

**அட்டவணை** 01

வினா இலக்கம் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு துலங்கல்களாக ஒவ்வொரு தெரிவினையும் தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் சதவீதமானது அட்டவணை இலக்கம் 01 இல் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவுக்குமான சரியான தெரிவினை தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் சதவீதமானது இங்கு நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் விசேடமாக இனம் காணப்பட்ட வினாக்கள் சிலவற்றின் பகுப்பாய்வுகள் கீழே தரப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் வினா இலக்கம் 1, 2, 23 என்பவற்றிற்கு சிறப்பாக விடையளித்துள்ளமை அவதானிப்பின் போது தெரியவந்தது.

கணக்கீட்டின் நோக்கம் தொடர்பிலான அறிவினை வெளிப்படுத்துகின்ற வினாவாகிய 1 ஆவது வினாவிற்கு சரியான விடையாகிய 4 ஆவது தெரிவினை தமது விடையாகக் காட்டிள்ள பரீட்சார்த்திகளின் சதவீதம் 95% ஆகும். கிரய வகைப்படுத்தல் தொடர்பான அறிவினைப் பரீட்சிக்கும் வினாவாகிய வினா இலக்கம் 23 இற்கு 80% மான பரீட்சார்த்திகள் சரியான விடையாக 4 ஆவது தெரிவினைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா இலக்கம் 2 இன் சரியான விடையாகிய 2 ஆவது தெரிவினை தமது விடையாகத் தெரிவுசெய்திருந்த பரீட்சார்த்திகளின் சதவீதம் 78% ஆகும். அது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கேற்ப சொத்துக்களின் வகைப்படுத்தல்களை பரீட்சிக்கும்வினாவாகும்.

வினா இலக்கம் 5 இற்குரிய சரியான விடையாகிய 1 மற்றும் 5 ஆம் தெரிவினை தமது விடையாகத் தெரிவு செய்துள்ள பரீட்சார்த்திகளின் சதவீதம் 71% ஆகும்.

வினா இலக்கம் 15, 19, 17, 30, 21, 28, 11, 20, 22 போன்ற வினாக்களுக்கு பரீட்சார்த்திகளில் 40% த்திற்கும் குறைவான தொகையினரே சரியாக விடையளித்திருந்தனர்.

அவற்றுள் வினா இலக்கம் 15 இற்கு சரியான விடையாகிய 5 ஆவது தெரிவினை தெரிவு செய்திருந்தத சதவீதம் 26% ஆகும். சரியாகப் பிரச்சினையை இனம்காணாமை காரணமாக பரீட்சார்த்திகளில் 24% மானோர் 3 ஆவது தெரிவினையும், 20% மானோர் 4 தெரிவினையும் 18% மானோர் 1 வது தெரிவினையும் தெரிவு செய்திருந்தனர். அதில் 3 ஆவது தெரிவினை தெரிவுசெய்திருந்த பரீட்சார்த்திகள் விற்பனை செய்த மோட்டார் வாகனத்தின் விற்பனை செய்த வருடத்திற்குரிய தேய்வின் பெறுமதியினைக் கவனத்தில் கொள்ளவில்லை என்பதுடன், அதன் தேறிய பெறுமதியினை விற்பனை விலையாக எடுத்திருந்தனர். பொதுவாக எடுத்து நோக்கும்போது தேறிய பெறுமதியில் வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தின் பெறுமதியினை கிரயத்திற்கு மாற்றுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு முடியாமல் போனமையினாலேயே இவ்வினாவிற்கு விடையளிப்பதில் குறைபாடு காணப்பட்டமைக்கான காரணமாகும். அதனால் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மற்றும் சொத்துக்களை அகற்றுதல் என்பவற்றுடன் தொடர்புடைய சீராக்கங்களுடன் கூடிய பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல் மிக முக்கியமானதாகும்.

வினா இலக்கம் 19 இற்குரிய சரியான விடையாகிய 4 ஆவது தெரிவினை பரீட்சார்த்திகளில் 26% மானோர் மாத்திரமே தெரிவு செய்திருந்தனர். அவர்களில் 32% மானோர் 5 ஆவது தெரிவினையே தமது விடையாகத் தெரிவு செய்திருந்தனர். 25% மானோர் தமது விடையாக 3 ஆவது தெரிவினைத் தெரிவு செய்திருந்தனர். காரியாலய உபகரணங்களின் மீள் மதிப்பீட்டுக் குறைவினை செலவொன்றாக இனம் காண்பதில் காணப்பட்ட குறைபாடாகும். மற்றும் காரியாலய உபகரணங்களின் குறைவினை கட்டட மின் மதிப்பீட்டு மிகையிற்கெதிராக ஈடுசெய்து ஏனைய வருமானமாக இனம் கண்டமையுமே 5 ஆவது தெரிவினை தெரிவு செய்தமைக்குரிய காரணமாகும்.

அதற்கேற்ப சொத்துத் தொகுதிகள் இரண்டிற்குரிய குறைவு, மற்றும் மிகையினை ஒன்றுடன் ஒன்று ஈடுசெய்ய முடியாது என்பதை மாணவர்கள் விளங்கியிருக்கவில்லை என்பது தெரியவருகின்றது.
பரீட்சார்த்திகள் தமது விடையாக 3வது தெரிவினை தெரிவு செய்தமைக்குரிய காரணம் மீள்மதிப்பீட்டுக் குறைவினை கடந்த வருடத்தில் இருந்த மிகைக்கு ஈடுசெய்யாது இலாபக் கணிப்பீட்டின்போது முழுமையாக செலவொன்றாக இனம்கண்டிருந்தமையும் மீள்மதிப்பீட்டு மிகையினை மாத்திரம் ஏனைய விரிவான வருமானமாக இனம்கண்டிருந்தமையினாலுமேயாகும். கம்பனிக் கணிப்பீட்டின் மொத்த வருமானம், மொத்தச்செலவு, இலாபம், ஏனைய விரிவான வருமானங்கள், மொத்த விரிவான வருமானங்கள் போன்ற எண்ணக்கருக்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறையானது ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

17 ஆவது வினாவில் சரியான தெரிவாகிய இலக்கம் 5 இனைத் 29% மானோர் மாத்திரமே தெரிவுசெய்திருந்தனர். பரீட்சார்த்திகளில் 23% மானோர் 3 ஆவது தெரிவினையும், 18%மானோர் 2 ஆவது தெரிவினையும் 17% மானோர் 1 வது தெரிவினையும் தமது விடையாகத் தெரிவு செய்திருந்தனர். இவ்வினாவினை சரியாக விளங்காமை காரணமாக பரீட்சார்த்திகள் பெரும்பாலானோர் தமது விடையாக பிழையான தெரிவினையே தெரிவு செய்திருந்தனர். LKAS 10 இற்கேற்ப சீராக்கப்பட்ட, சீராக்கப்படாத நிகழ்வுகளை இனம்காண்பதற்குரிய விளக்கம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, வழங்கப்பட்ட திகதி தொடர்பில் சரியாகக கவனம் செலுத்தமாமை எனபன இதற்குரிய காரணமாகக் குறிப்பிட்டுக் காட்டலாம். இந்நியமம் தொடர்பில் வகுப்பறையினுள் கலந்துரையாடும்போது அறிக்கைப்படுத்தப்படுகின்ற நிதியாண்டின் இறுதித்திகதி, இயக்குநர்களினால் நிதிக்கூற்று அனு மதிக்கப்படுகின்ற திகதி என்பன தொடர்பில் கூடுதல் விளக்கத்தைப் பெற்றுக்கொடுத்தல் பயனுடையதாக அமையும்.

30 ஆவது வினாவிற்கு சரியான விடையாகிய 4 ஆவது தெரிவினை பரீட்சார்த்திகளில் 32% மாணோர் மாத்திரமே தெரிவு செய்திருந்தனர். 23% மாணோர் தமது விடையாக 5 ஆவது தெரிவினை தெரிவு செய்திருந்ததுடன், அதனை விடையாகத் தெரிவு செய்தமைக்கான காரணம் பரீட்சார்த்திகளினால் தேறிய நிகழ்காலப் பெறுமதியினைக் கணிக்கும்போது உள்ளீடாகப் பயன்படுத்த வேண்டிய உருப்படிகள் தொடர்பில் போதுமான விளக்கம் காணப்படாமையே ஆகும். விசேடமாக உத்தேச விளைவு விகிதத்தின் அதிகரிப்பினால் மட்டத்தின் அடைவு உயர்வடைந்தமை காரணமாக தேறிய நிகழ்காலப் பெறுமதி கீழே செல்கின்றது என்பது தொடர்பிலான விளக்கம் குறைவாகவுள்ளது என்பது தெரியவருகின்றது. கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது இது தொடர்பில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

21 ஆவது வினாவிற்கு சரியான விடையாகிய 3 ஆவது தெரிவினை பரீட்சார்த்திகளில் 33% மாணோர் மாத்திரமே தெரிவு செய்திருந்ததுடன், 29% மாணோர் தனது விடையாக 2 ஆவது தெரிவினைத் தெரிவு செய்திருந்தனர். அதற்குக் காரணம் நடப்பாண்டின் இறுதி இருப்பின் தேறிய நிகரப் பெறுமதி குறைவடைதல் இலாபம் குறைவடைதில் தாக்கம் செலுத்தும் என்பதை விளங்கியிருக்காமையேயாகும். தேறிய நிகரப்பெறுமதி குறைவடைதல் மொத்த இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாவிடினும், தேறிய இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது உதாரணங்களுடன் விளக்குதல் பயனுடையதாக அமையும்.

28 ஆவது வினாவிற்கு சரியான விடையாகிய 5 ஆவது தெரிவினை பரீட்சார்த்திகளில் 33% மாணோர் மாத்திரமே தெரிவு செய்திருந்தனர். 22% மாணோர் தமது விடையாக 2 வேது தெரிவினைத் தெரிவு செய்திருந்ததுடன், அதெரிவினைத் தெரிவு செய்யும்போது சமப்பாட்டுப் புள்ளியில் "மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்திற்கு சமமாகும்" என பரீட்சார்த்திகள் விளங்கியிருக்கவில்லை என்பது தெரியவருகின்றது.

11 ஆவது வினாவிற்கு சரியான விடையாகிய 3 ஆவது தெரிவினை பரீட்சார்த்திகளில் 35% மாணோர் தெரிவு செய்திருந்தனர். 24% மாணோர் 4 ஆவது தெரிவினை தமது விடையாகத் தெரிவு செய்திருந்தனர். நிலையான வைப்பின் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானத்தை காசுப் பெறுவனவு எனக் கருதியமையே அதற்கான காரணமாகும். வினாவிற்குரிய அறிவுருத்தல்கள் தகவல்களை நன்றாக வாசித்து பின்னர் விடையளித்தல் முக்கியமானது என்பதை மாணவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

வினா இலக்கம் 20 இற்கான சரியான விடையாகிய 3 ஆவது தெரிவினை பரீட்சார்த்திகளில் 35% மாணோர் தெரிவு செய்திருந்தனர். 23% மாணோர் 5 ஆவது தெரிவினை தமது விடையாகத் தெரிவு செய்திருந்தனர். நிறுத்திவைத்த உழைப்பினைக் கணிக்கும்போது காரியாலய உபகரணங்களின் மீள் மதிப்பீட்டுக் குறைவினை செலவொன்றாகக் கருதாது இலாபத்தைக் கணிப்பிட்டதும், அதனால் பங்கிலாபத்தைக் குறைத்து நிறுத்தி வைத்த உழைப்பினைக் கணிப்பிட்டதுமே இத்தெரிவினைத் தெரிவுசெய்ததுக்குரிய காரணமாகும். இதற்கேற்ப கம்பனிக் கணக்கீட்டின்போது மீள்மதிப்பீட்டு சீராக்கல்கள் தொடர்பில் கூடிய விளக்கத்தைப் பெற்றுக்கொடுத்தல் மிக முக்கியமானது என்பதனால் அதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

வினா இலக்கம் 22 இற்கு சரியான விடையாகிய 2 ஆவது தெரிவினை பரீட்சார்த்திகளில் 40% மாணோர் மாத்திரமே தெரிவு செய்திருந்தனர். பரீட்சார்த்திகளில் 27% மாணோர் தமது விடையாக இலக்கம் 1 இனைத் தெரிவு செய்திருந்தனர். வரி மற்றும் வட்டி என்பவற்றைச் சேர்க்காது நிதியாண்டுக்குரிய இலாபத்தை வட்டியினால் வகுத்திருந்தமையே தெரிவு 01 இனைத் தெரிவு செய்தமைக்கான காரணமாகும். விகிதங்கள் தொடர்பிலான அறிவினையும் விளக்கத்தையும் பெற்றுக் கொடுப்பதற்கு அதன் உள்ளடக்கம் தொடர்பாக தேடியறிந்து கொள்வதில் மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை ஒழுங்கமைத்தல் முக்கியமானது என்பதை இங்கு குறிப்பிட முடியும்.

## 2.1.7 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ள விதம்.

| வினா இலக்கம் | புள்ளிகள் பெற்றுள்ள சதவீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | புள்ளி 0 | புள்ளி 1 | புள்ளி 2 | புள்ளி 3 | புள்ளி 4 | விடையளிக்காத |
| 31 | 0.47 | 8.1 | 17.6 | 39.63 | 33.6 | 0.6 |
| 32 | 40.87 | - | 33.1 | - | 16.5 | 9.53 |
| 33 | 9.17 | 21.27 | 6.27 | 9.27 | 50.5 | 3.53 |
| 34 | 3.6 | 7.67 | 17.9 | 39.2 | 31.17 | 0.47 |
| 35 | 44.63 | - | 25.2 | - | 24.7 | 5.47 |
| 36 | 32.67 | - | 10.73 | - | 49.27 | 7.33 |
| 37 | 18.2 | 28.2 | 22.33 | 15.3 | 12.57 | 3.4 |
| 38 | 31.83 | 6.27 | 9.37 | 16.27 | 28.97 | 7.3 |
| 39 | 43.27 | - | - | - | 45.43 | 11.3 |
| 40 | 38.93 | 1.3 | 23.03 | 3.23 | 20.53 | 12.97 |
| 41 | 43.43 | 4.83 | 14.57 | 10.9 | 12.03 | 14.23 |
| 42 | 41.37 | 9.53 | 15.97 | 0.6 | 13.07 | 19.47 |
| 43 | 48.87 | - | 20.5 | - | 11.17 | 19.47 |
| 44 | 3.97 | 3.57 | 16.83 | 21.67 | 50.93 | 3.03 |
| 45 | 28.33 | 3.6 | 11.5 | 17.03 | 22.97 | 16.57 |
| 46 | 5.93 | 6.37 | 26.9 | 19.43 | 39.7 | 1.67 |
| 47 | 2.1 | 6.3 | 24.07 | 47.43 | 18.47 | 1.63 |
| 48 | 54.53 | - | 6.77 | - | 25.97 | 12.73 |
| 49 | 27.33 | 6.73 | 15.3 | 1.37 | 34.87 | 14.4 |
| 50 | 36.9 | - | 47 | - | 3.6 | 12.5 |

**அட்டவணை 02**

வினா இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள முறை மேலே அட்டவணை 2 காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப வினா இலக்கம் 31, 34, 44 போன்ற வினாக்களுக்கு பரீட்சார்த்திகளில் 70% த்திற்கும் மேற்பட்டோர் சிறப்பாக விடையளித்துள்ளனர். அவற்றின் மூலம் முகாமைத்துவக் கணக்கீடு, வியாபாரக்கழிவு, காசுக்கழிவு, ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களில் கிரயத்தை இனம் காணல் என்பவை தொடர்பான அறிவினைப் பரிசீலிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. வினா இலக்கம் 32, 35, 39, 41, 42, 43, 48 போன்ற வினாக்களுக்கு எந்தவிதப் புள்ளிகளையும் பெறாத பரீட்சகர்களின் வீதம் 60% த்தையும் தாண்டியுள்ளது.

அதற்கேற்ப கோட்பாடு சார்ந்த அறிவினைப் பயன்படுத்துவதில் காணப்படுகின்ற பலவீனம், கணக்கீடு தொடர்பில் இருக்கவேண்டிய அடிப்படை அறிவுகயை கவனிக்காது விடல், கணக்கீட்டு நியமங்கள் தொடர்பிலான அறிவு மற்றும் பாவனை போதுமானளவு காணப்படாமை மற்றும் வினாவை வாசித்து உரியவாறு விளங்கியிருக்காமை போன்றவைகள் குறைவான புள்ளிகளைப் பெறுவதற்கான காரணங்களாயிருக்கலாம்.

வினா இலக்கம் 32 இன் பொதுவான அடைவு மட்டம் 34% மாகும். பரீட்சார்த்திகளில் 41% மானோர் எந்தவொரு புள்ளியினையும் பெற முடியாமல் போயிருந்ததுடன், அதில் 10% த்தினர் எந்தவொரு விடையினையும் அதற்கு எழுதியிருக்கவில்லை. இது இரு பகுதிகளைக் கொண்ட தேறிய சொத்தின் உதவியுடன் இலாபம் மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ள வேண்டிய வினாவாகும்.இங்கு பெரும்பாலான பரீட்சார்த்திக்ள இலாபத்தைக் கண்டுபிடித்திருந்தாலும் அதன் உதவியுடன் செயற்பாட்டுச் செலவுகளை கண்டு பிடிக்கத் தவறியிருந்தனர் எனக் கருதக்கூடியதாக இருந்தது. அதற்கேற்ப 2 புள்ளிகளை மாத்திரம் பெற்ற வீதம் 33% மாகக் காணப்படுகின்றது கோட்பாடுகள் சார்ந்த விடயங்களை பிரயோக நிதியாகப் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை மேற்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும் எனக் கூற முடியும்.

வினா இலக்கம் 35 இற்கு எந்தவிதப் புள்ளிகளையும் பெறாத சதவீதம் 44% என்பதுடன், 4 புள்ளிகளையும் பரீட்சார்த்திகளில் 25% மானோர் மாத்திரமே பெற்றுள்ளனர். வியாபாரக் கழிவு கணக்கீடுகளில் பதிவு செய்யப்படுவதில்லை என்ற கணக்கீட்டு அடிப்படை தொடர்பான விளக்கம் போதாமை இதற்குரிய காரணமாயிருக்கலாம். அதேபோன்று வினாவை உரியவாறு வாசித்து விளங்காமல் உரிய நாட்குறிப்பேட்டுப் பதிவினை எழுதியமையும், இவ்வாறு புள்ளிகள் குறைவதற்கு இன்னொரு காரணமாக இருக்கலாம்.

வினா இலக்கம் 39 இற்கு எந்தவிதப் புள்ளியும் பெறாதவர்கள் 43% என்பதுடன் 11% மானோர் எந்தவொரு விடையினையும் இதற்கு எழுதியிருக்கவில்லை. பங்குடமை வணிகமொன்றின் நன்மதிப்புச் சீராக்கத்தை கணக்குகளில் பதிவது தொடர்பான அடிப்படை விளக்கம் பரீட்சார்த்திகளில் 50% த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இல்லை என்பது இதிலிருந்து தெரியவருகின்றது. எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளில் 46% மானோர் இவ்வினாவிற்குரிய முழுப்புள்ளியையும் பெற்றுள்ளனர்.

கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான அறிவும் அதன் பாவனையும் வினா இலக்கம் 41, 42, 43 போன்ற வினாக்களின் மூலம் பரீட்சிக்கப்பட்டுள்ளது. இவ்வினாக்களுக்கு 0 (பூச்சியம்) புள்ளிகளைப் பெற்ற சதவீதம் முறையே 43%, 41%, 49% ஆகும். மேற்குறிப்பிட்ட வினாவிற்கு எந்தவொரு விடையும் எழுதாத வீதம் முறையே 14%, 20%, 20% ஆகும். கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான அறிவு மற்றும் அவற்றை பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பான விளக்கம் போதியளவு இல்லை என்பது இதிலிருந்து தெரியவருகின்றது.

வினா இலக்கம் 48 இற்கான பொதுவான அடைவு மட்டம் ஏறக்குறைய 30% என்பதுடன், எந்தவிதப் புள்ளியும் பெறாத சதவீதம் 55% என்பதுடன், எந்தவிதமான விடையும் அளிக்காத சதவீதம் 12.5% ஆகும். வினாவிற்குரிய 4 புள்ளிகயையும் பரீட்சார்த்திகளில் 26% மானோர் மாத்திரமே பெற்றுள்ளனர். இந்த வினாவானது இருப்பு வழங்கல் விலையிடல் மூலம் இறுதி இருப்பினையும், விற்பனைக் கிரயத்தையும் கண்டுபிடிக்கின்ற வினாவாகும். நிறையிடப்பட்ட சராசரி விலையிடல் முறை தொடர்பான விளக்கம் போதாமை, இருப்பு விலையிடல் மற்றும் கிரயம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு சம்பந்தமான விளக்கம் போதாமை இதற்குரிய காரணங்களாயிருக்கலாம் எனக்கூற முடியும். அதனால் கோட்பாட்டு ரீதியான அறிவினைப் பிரயோக ரீதியாகப் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

வினா இலக்கம் 40 இற்கு எந்தவிதமான புள்ளிகளும் பெறாத பரீட்சார்த்திகள் 39% ஆகக் காணப்படுவதுடன் 13% மானோர் எந்தவிதமான விடையினையும் அளித்திருக்கவில்லை. இது பங்குமை வணிகத்தின் இலாபப்பகிர்வு தொடர்பிலான இரு பகுதிகளைக் கொண்ட வினாவாகும். பங்குடமை வணிகமொன்றின் இலாபம் என்பது பங்குடமைச் சம்பளம், மூலதன வட்டி மற்றும் இறுப்பங்கிலாபமாக பங்குகளுக்கு பகிர்வு செய்யப்பட்ட மொத்தத்தினது கூட்டுத் தொகை என்பது தொடர்பான விளக்கம் போதாமை இதற்குரிய காரணமாயிருக்கலாம். கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் கூடுதலான பயிற்சிகளை பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட விடயத்தை விளக்குவது முக்கியமானதாகும்.

வினா இலக்கம் 50 இற்கான பொதுவான அடைவு மட்டம் 27% மாகும். (அட்டவணை 05) எந்தவிதமான புள்ளியும் பெறாத பரீட்சார்த்திகள் 37% மாகும். இவ்வினாவினூடாக முதலீடொன்றின் திரும்பல் காலம் மற்றும் கணக்கீட்டு அனுகூல வீதம் என்பனவே பரிட்சிக்கப்பட்டது. இவ்விருபகுதிகளுக்கும் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டதுடன் ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளித்து 2 புள்ளிகள் பெற்ற சதவீதம் 47% மாகும். அதற்கேற்ப கணக்கீட்டு அனுகூல வீதத்தை கணிப்பது தொடர்பிலான அறிவு மற்றும் பயன்பாடு குறைவாகக் காணப்பட்டமை இதற்கு காரணமாக இருக்கும் எனக் கூற முடியும். உயர்தரக் கணக்கீட்டுப் பாடத்தின் பாடத்திட்டத்தின் இறுதித் தலைப்பாகிய மூலதன முதலீட்டுத் தீர்மானம் தொடர்பிலான கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளின்போது பிரயோக ரீதியிலான பயிற்சிகளில் கூடுதலாகக் கவனம் செலுத்தச் செய்வது முக்கியமானதாகும்.

## 2.2 வினாத்தாள் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

### 2.2.1 வினாத்தாள் II இன் கட்டமைப்பு

நேரம் 3 மணித்தியாலம்

இவ்வினாத்தாள் 07 வினாக்களை கொண்டுள்ளது. முதலாம், இரண்டாம் வினாக்கள் கட்டாயமானவை என்பதுடன், ஒரு வினாவிற்கு 20 புள்ளிகள் வீதம் அவற்றிற்கு 40 புள்ளிகளாகும். ஏனைய 05 வினாக்களில் 04 வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன் அவற்றில் ஒரு வினாவிற்கு 15 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகளாகும். மொத்தம் 100 புள்ளிகளாகும்.

இறுதிப் புள்ளியினைக் கணிப்பிடல் :

வினாத்தாள் I = 100 புள்ளிகள்

வினாத்தாள் II = 100 புள்ளிகள்

இறுதிப் புள்ளிகள் 200 ÷ 2 = 100

* விடைத்தாள் மதிப்பீட்டின் போது சகல வினாக்களுக்கும் புள்ளிகள் இரட்டிப்பாக்கி வழங்கப்படும். அதற்கேற்ப இறுதிப் புள்ளியினைக் கணிப்பிடல் :

வினாத்தாள் I = 200 புள்ளிகள்

வினாத்தாள் II = 200 புள்ளிகள்

இறுதிப் புள்ளிகள் 400 ÷ 4 = 100

### 2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

**வினாத்தாள் II இல் ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டமை தொடர்பிலான அவதானிப்புகள், வரைபடம் 2, 3, 4. என்பவற்றின் அடிப்படையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. வினாக்களுக்கு உரிய வரைபடங்கள் ஒவ்வொரு வினாவினதும் அவதானிப்பு, முடிவுகளுடனும் இங்கு தரப்பட்டுள்ளது.**

## வினாப்பத்திரம் II

## வினா இலக்கம் - 01

1. எழுதுபொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வரையறுத்த சுமதி பொதுக் கம்பனியின் 2016.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது. இது பெறுமதி சேர் வரி (VAT) பதிவினைக் கொண்டுள்ள கம்பனியாகும்.

| விபரம் | வரவு (ரூ. '000) | செலவு (ரூ. '000) |
|---|---|---|
| சம்பளங்கள் | 1 000 | |
| வாடகை | 540 | |
| மின்சாரம் | 120 | |
| தொலைபேசி | 75 | |
| கொள்வனவுகள் | 6 000 | |
| VAT கொடுப்பனவுகள் | 600 | |
| 01.04.2015 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 10 000 | |
| 01.04.2015 இல் உள்ளவாறான சரக்கிருப்பு | 1 200 | |
| வியாபார வருமதிகள் | 7 000 | |
| வங்கியிலுள்ள காசு | 730 | |
| நடைமுறை ஆண்டிற்காக செலுத்தப்பட்ட வருமான வரி | 535 | |
| விற்பனைகள் | | 12 000 |
| VAT சேகரிப்புகள் | | 1 320 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 4 000 |
| 01.04.2015 இல் உள்ளவாறான நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 2 327 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் - அலுவலக உபகரணங்கள் | | 600 |
| குத்தகை கடன்கொடுத்தோர் | | 2 353 |
| பொது ஒதுக்கம் | | 1 200 |
| 01.04.2015 இல் திரண்ட பெறுமானத்தேய்வு - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | | 4 000 |
| | **27 800** | **27 800** |

**மேலதிக தகவல்கள்:**

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) வியாபார முகவருக்கு விற்பனையில் 2% செலுத்தப்பட்ட தரகு சம்பளங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ii) 2016 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூ. 15 000 இன்னும் செலுத்தப்படவில்லை.

(iii) 2016 மார்ச் மாதத்திற்கான தொலைபேசிக் கட்டணம் ரூ. 18 000 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மார்ச் மாதத்திற்கான கட்டணம் ரூ. 8 000 ஆகும்.

(iv) கம்பனி சரக்கிருப்பை உருப்படி அடிப்படையில் பெறுமதியிடுகிறது. 31.03.2016 இல் சரக்கிருப்பானது மூன்று வகையான எழுதுகருவி உருப்படிகளைக் கொண்டுள்ளது. இத்தினத்தில் அவற்றின் கிரயம் மற்றும் தேறிய தேறத்தக்க பெறுமதி (தே.தே.பெ) ஆகியன பின்வருமாறு இருந்தது.

| வகை | கிரயம் (ரூ.'000) | தே.தே.பெ. (ரூ.'000) |
|---|---|---|
| A | 520 | 600 |
| B | 300 | 250 |
| C | 280 | 300 |

(v) 31.03.2016 இல் ரூ. 750 000 மீதியைக் கொண்ட கடன்பட்டோர் ஒருவர் 30.04.2016 இல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். கம்பனியின் இயக்குனர்கள் 15.05.2016 இல் நிதிக் கூற்றுகளிற்கு அதிகாரம் அளித்துள்ளனர்.

(vi) 01.04.2015 இலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினதும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வுகளினதும் உள்ளடக்கம் பின்வருமாறு இருந்தது.

| **விபரம்** | **கிரயம்/பெறுமதி (ரூ.'000)** | **திரண்ட பெறுமானதேய்வு (ரூ.'000)** | **கொண்டுசெல் தொகை (ரூ.'000)** |
|---|---|---|---|
| கிரயத்தில் மோட்டார் வாகனங்கள் (குத்தகை அடிப்படையில்) | 6 000 | 2 400 | 3 600 |
| நியாயப் பெறுமதியில் அலுவலக உபகரணங்கள் | 2 500 | 1 000 | 1 500 |
| கிரயத்தில் தளபாடமும் பொருத்துகளும் | 1 500 | 600 | 900 |
| **மொத்தம்** | **10 000** | **4 000** | **6 000** |

எல்லாச் சொத்துகளும் (குத்தகை சொத்துகள் உட்பட) 01.04.2013 இல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இத்தினத்தில் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

(vii) 01.04.2015 இல் தளபாடமும் பொருத்துகளுக்கு எஞ்சியுள்ள பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்கள் என மீளமைக்கப்பட்டுள்ளது. மேலும் 31.03.2016 இல் அலுவலக உபகரணங்கள் ரூ. 1 800 000 சந்தைப் பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

(viii) மோட்டார் வாகனங்கள் பொருட்களை விநியோகம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதுடன் அவற்றின் குத்தகைக் காலம் 5 வருடங்களாகும். வருடாந்த குத்தகைக் கட்டணம் ரூ. 1 583 000 ஆகும்.
நடைமுறையாண்டுக்கான குத்தகைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இவை முழுமையாக குத்தகை கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வேறு எதுவித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை. குத்தகை வட்டி பின்வருமாறு:

| **வருடம்** | **வட்டி (ரூ.'000)** |
|---|---|
| 2013/14 | 600 |
| 2014/15 | 502 |
| 2015/16 | 394 |
| 2016/17 | 275 |
| 2017/18 | 144 |

(ix) 31.03.2016 இல் கம்பனியானது பொது ஒதுக்கங்களை மூலதனமாக்குவதன் மூலம் தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு 40 000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ. 20 வீதம் வழங்கியது. எனினும் இது தொடர்பான எதுவித பதிவும் செய்யப்படவில்லை.

(x) நடைமுறை ஆண்டிற்கான வருமான வரி ரூ. 500 000 என மதிப்பீடு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:**

LKAS 1 (நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பித்தல்) இன்படி வரையறுத்த சுமதி பொதுக் கம்பனியின் பிரசுரிப்பதற்குத் தேவையான பின்வரும் நிதிக் கூற்றுகள் (குறிப்புகள் உட்பட):

(1) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

(3) 31.03.2016 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று **(மொத்தம் 20 புள்ளிகள்)**

**விடை**

**வினா இலக்கம் 01**

(1) வரையறுத்த சுமதி பொதுக்கம்பனி
31.03.2015ல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும்
ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று

| | குறிப்பு | (ரூ.'000) | |
|---|---|---|---|
| விற்பனை | | 12 000 | (01) |
| விற்பனைக் கிரயம் | (01) | (6 100) | (03) |
| மொத்தலாபம் | | (5 900) | (05) |
| விநியோகக் கிரயம் | | (2 190) | (01) |
| நிர்வாகச் செலவுகள் | (01) | (2 150) | (01) |
| ஏனைய செலவுகள் | (01) | (50) | |
| நிதிச் செலவுகள் | | (394) | (01) |
| வரி கழிக்குமுன் இலாபம் | 01 | 1 116 | |
| ஆண்டுக்கான வருமானவரி | (01) | (500) | |
| ஆண்டுக்கான இலாபம் | | 616 | |
| **ஏனைய முற்றும் அடங்கிய வருமானம்** | | | |
| அலுவலக உபகரண மீள்மதிப்பீட்டு மிகை | | 800 | |
| ஆண்டுக்கான மொத்த முற்றும் அடங்கிய வருமானம் | | 1 416 | |

**குறிப்பு 01 : வரிக்கு முன் இலாபம் பின்வரும் செலவுகள் கழித்தபின்**

| | | ரூ.' 000 |
|---|---|---|
| இருப்பு பெறுமதி வீழ்ச்சி நட்டம் | (02) | 50 |
| பெறுமானத் தேய்வு | | 1 850 |
| குத்தகை வட்டி | | 394 |

**(ஏதாவது 2 விடயங்களுக்கு 02 புள்ளிகள்)**

**(20 புள்ளிகள்)**

செய்கை ரூ.' 000

**விற்பனைக் கிரயம்**

| | | |
|---|---|---|
| 2015.04.01 ஆரம்ப இருப்பு | 1 200 | |
| கொள்வனவு | 6 000 | 01 |
| 2016.03.31 இறுதி இருப்பு | (1 100) | |
| | 6 100 | |

**நிர்வாகச் செலவுகள்** 01

| | | |
|---|---|---|
| சம்பளங்கள் | 760 | 01 |
| மின கட்டணம் | 135 | 01 |
| தொலைபேசி | 65 | |
| வாடகை | 540 | 01 |
| தளபாட பெறுமானத்தேய்வு | 150 | 01 |
| அலுவலக உபகரண பெ.தேய்வு | 500 | |
| | 2 150 | |

**விநியோகக் கிரயம்**

| | | |
|---|---|---|
| விற்பனைத் தரகு | 240 | 01 |
| அறவிடமுடியாக்கடன் | 750 | 01 |
| மோட்டார் பெ.தேய்வு | 1 200 | 01 |
| | 2 190 | |

**ஏனைய செலவுகள்** 01

| | |
|---|---|
| இருப்பு பெறுமதி வீழ்ச்சி நட்டம் | 50 |

**நிதிச்செலவு** 01

| | |
|---|---|
| குத்தகை வட்டி | 394 |

(2) வரையறுத்த சுமதி பொதுக்கம்பனியின்

31/3/2016ல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றக் கூற்று ரூ.' 000

| | கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | நிறுத்தி வைத்த வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **2015.04.01 ல் மீதி** | 4 000 | 600 | 1 200 | 2 327 | 8 127 |
| **பொது ஒதுக்கத்தை மூலதனமாக்கல்** | 800 | (01) | (800) | | |
| * **மொத்த முற்றும் அடங்கிய வருமானம்** | | (01) 800 | | (01) 616 | 1 416 |
| **2016.03.31 ல் மீதி** | 4 800 | 1 400 | 400 | 2 943 | 9 543 |

**(03 புள்ளிகள்)**

(3)

## வரையறுத்த சுமதி பொதுக்கம்பனி
## 31/03/2016 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று (01)

| | குறிப்பு | (ரூ.'000) | (ரூ.'000) |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | (01) |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 02 | | 4 950 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | (01) |
| இறுதிச் சரக்கிருப்பு | | 1 050 | (01) |
| வியாபார வருமதிகள் | | 6 250 | (01) |
| முற்பண தொலைபேசிக் கட்டணம் | | 10 | (01) |
| முற்பண வருமான வரி | | 35 | 8 075 |
| காசும் காசுக்கு சமமானவை | | 730 | 13 025 |
| மொத்தச் சொத்துக்கள் | | | |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **கூறப்பட்ட பங்கு மூலதனம்** | | | |
| சாதாரண பங்குகள் | | | 4 800 |
| **ஒதுக்கங்கள்** | | | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 1 400 | |
| பொது ஒதுக்கம் | (02) | 400 | |
| நிறுத்தி வைத்த வருவாய் | | 2 943 | 4 743 (01) |
| மொத்த உரிமையான்மை | | | 9 543 |
| **நடைமுறை அல்லாத பொறுப்பு** | | | (01) |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | | | 1 439 (01) |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | (01) |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | | 1 308 | |
| சென்மதி மின் கட்டணம் | | 15 | |
| சென்மதி VAT | | 720 | 2 043 |
| மொத்த பொறுப்பும் உரிமையும் | | | 13 025 |

குறிப்பு 02 : ஆதனம் பொறி உபகரணம் (ரூ.' 000)

| | மோட்டார் வாகனம் | அலுவலக உபகரணம் | தளபாட பொருத்துக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| செலவு | | | | |
| 2015.04.01 ல் மீதி | 6 000 | 2 500 | 1 500 | 10 000 |
| மீள் மதிப்பீடு | | 800 (01) | | 800 |
| அகற்றல் பெறுமானத் தேய்வு | | (1 500) (01) | | (1 500) |
| 2016.03.31 ல் மீதி | 6 000 | 1 800 | 1 500 | 9 300 |
| திரண்ட பெறுமானத் தேய்வு | | | | |
| 2015.04.01 ல் மீதி | 2 400 | 1 000 | 600 | 4 000 |
| இவ்வாண்டுத் தேய்வு | (02) 1 200 | 500 | 150 | 1 850 |
| அகற்றிய தேய்வு | | (1 500) (01) | | (1 500) |
| 2016.03.31 ல் மீதி | 3 600 | - | 750 | 4 350 |
| 2016.03.31 ல் கொண்டு செல் தொகை | 2 400 | 1 800 | 750 | 4 950 |

அலுவலக உபகரணம் 2016 ல் 1 800 000 மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

(17 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 40)

**1 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




இவ்வினாவிற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அளவு 20 x 2 = 40 ஆகும்.
1 ஆம் வினா கட்டாய வினாவாகும். ஒரு சிறிய தொகையினர் தவிர ஏனைய விண்ணப்பதாரர்கள் இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 40 ஆகும்.
அதில் 00 - 10 புள்ளி வகுப்பாயிடையில் 30% ம்
11 - 20 புள்ளி வகுப்பாயிடையில் 21% ம்
21 - 30 புள்ளி வகுப்பாயிடையில் 27% ம்
31 - 40 புள்ளி வகுப்பாயிடையில் 22% ம்
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 31 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்களின் தொகை 22% என்பதுடன் விண்ணப்பதாரிகளில் 30%மானோர் 10 அல்லது அதனையும் விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். 20 புள்ளிகளை விடக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் சதவீதம் 49% ஆகும்.




இவ்வினாவில் 3 உபபிரிவுகள் காணப்படுவதுடன் அம்மூன்று உபபிரிவுகளினதும் இலகுதன்மை 55% ஐ விடக் கூடுதலாகும். இலகுதன்மை குறைந்த உபபகுதியாக (3) காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 57%மாகும். இலகுதன்மை கூடிய உபபிரிவாக (2) காணப்படுவதுடன், அதன் இலகுதன்மை 63% ஆகும்.

பகுதி (1) இன் இலகுதன்மை 58% மாக இருப்பதுடன், இதன் மூலம் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய வருமானக் கூற்றினைத் தயாரிக்கும் ஆற்றலே பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கேற்ப உருப்படி முறையில் இறுதி இருப்பினைக் கணிப்பிடும் ஆற்றல் பலவீனமாக காணப்படல், கணக்கீட்டு நியமம் இலக்கம் 17 இற்கேற்ப குறித்த நிதியாண்டுக்குரிய குத்தகை வட்டியினை சரியாக இனம்காணாமை, கணக்கீட்டு நியமம் 16 இற்கேற்ப சொத்து மீள் மதிப்பீடு தொடர்பான கணக்கு வைப்பு தொடர்பான விளக்கம் குறைவு போன்ற காரணங்களைச் சுட்டிக் காட்டமுடியும். இவ் விடயங்களில் கவனம் செலுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறையானது ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

பகுதி (2) இவ்வினாவில் கூடுதலான இலகுதன்மையினைக் காட்டியுள்ள பகுதியாகும். அதன் இலகுதன்மை 63% மாகும். இதில் உரிமையாண்மை மாற்றல் கூற்று தயாரிப்பது தொடர்பான விளக்கமே பரீட்சிக்கப்பட்டுள்ளது. இங்கு வருமானக் கூற்றின் நிதியாண்டுக்குரிய இலாபம் மற்றும் மீள் மதிப்பீட்டு மிகை என்பவற்றை உரிமையாண்மை மாற்றல் கூற்றிற்கு மாற்றுவது தொடர்பான விளக்கம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பதைக் கூறமுடியும். இது தொடர்பில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

பகுதி (3) இன் இலகுதன்மை 57% ம் என்பதுடன் இதனூடாக நிதி நிலமைக் கூற்றைத் தயாரிப்பது தொடர்பான விளக்கம் பரீட்சிக்கப்பட்டுள்ளது. வருமான வரியினைச் சீராக்கும்போது முற்பணமாகச் செலுத்திய வருமான வரியானது இனம்காணப்படவில்லை என்பது விளங்குகின்றது. அத்துடன் குத்தகைக் கடன் கொடுத்தோர் நடைமுறை, நடைமுறை அல்லாதது என இனம்கண்டிருந்தாலும் அதன் பெறுமதியினை சரியாக இனம்காண முடியாமல் இருந்தமையினை பலவீனமாக இங்கு சுட்டிக் காட்ட முடியும்ம.

அதேபோன்று VAT, இனை பொறுப்பொன்றான இனம் காணாமை, அதன் பெறுமதியினை சரியாகக் கணிக்காமை போன்ற பலவீனங்களையும் இங்கு காணக்கூடியதாக இருந்தது.

இவ்விடயங்கள் சரியாக விளங்கும் வகையில் கூடுதலான பயிற்சிகளைப் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் ஒழுங்கமைக்கப்படல் மிக முக்கியமானதாகும்.

## 02 ஆம் வினா

**2. (அ)** இலாப நட்டங்களை சமமாகப் பகிரும் ரங்கா, இரந்தி ஆகியோர் ஆலோசனைச் சேவை வழங்கும் நிறுவனமொன்றின் பங்காளராவர். 01.04.2015 இல் உதயன் என்பவர் பங்காளராகச் சேர்க்கப்பட்டுள்ளார். திருத்தியமைக்கப்பட்ட பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறு இருந்தது.

- இலாப நட்டங்கள் ரங்கா, இரந்தி, உதயன் ஆகியோர்களுக்கிடையில் முறையே 2:2:1 என்ற விகிதத்தில் பகிரப்படல்
- பங்குடைமை புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கு பேணப்படுவதில்லை. நன்மதிப்பு தொடர்பான எல்லாச் சீராக்கங்களும் பங்காளர் மூலதனக் கணக்குகள் ஊடாகப் பதிவுசெய்தல்
- பங்காளர்கள் தங்களின் வருட முடிவிலுள்ள மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 10% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்
- இரந்தி, உதயன் ஒவ்வொருவரும் மாதாந்தம் ரூ. 40 000 சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவர்கள்
- பங்காளர்களால் பங்குடைமைக்கு வழங்கப்படும் கடன்களுக்கு வருடாந்தம் 8% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்

31.03.2016 இலுள்ளவாறான பங்குடைமையின் பரீட்சை மீதி பின்வருமாறு இருந்தது.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆலோசனை வழங்கல் வருமானம் | | 8 600 |
| ஆலோசனை வழங்கல் செலவுகள் | 3 500 | |
| செயற்பாட்டுச் செலவுகள் | 1 200 | |
| இரந்திக்குச் செலுத்திய சம்பளம் | 480 | |
| 01.01.2016 இல் உதயனால் வழங்கப்பட்ட கடன் | | 2 000 |
| உதயனிற்கு செலுத்திய கடன் வட்டி | 30 | |
| 31.03.2016 இலுள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல் தொகை | 6 000 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு | 1 800 | |
| ஏனைய வருமானம் | | 100 |
| வங்கியிலுள்ள காசு | 290 | |
| 01.04.2015 இலுள்ளவாறான மூலதனக் கணக்குகள்: - ரங்கா | | 1 000 |
| - இரந்தி | | 1 000 |
| 01.04.2015 இலுள்ளவாறான நடைமுறைக் கணக்குகள்: - ரங்கா | | 200 |
| - இரந்தி | | 100 |
| உதயனால் கொண்டுவரப்பட்ட காசு | | 300 |
| | **13 300** | **13 300** |

**மேலதிக தகவல்கள்:**

(i) உதயன் பின்வருவனவற்றை மூலதனமாக கொண்டு வந்தார்:

| | ரூ.'000 |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 700 |
| காசு | 300 |

எனினும் உதயனால் கொண்டுவரப்பட்ட காசு மாத்திரமே கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டுள்ளது.

(ii) உதயனைச் சேர்க்கும்போது பங்குடைமையின் நன்மதிப்பு ரூ. 1 800 000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% கிரயத்தில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

(iv) 01.01.2016 இல் பங்குடைமையானது வாடிக்கையாளர் ஒருவருக்கு ஆலோசனைச் சேவைகளை மாதாந்தம் ரூ. 100 000 கட்டணத்தில் வழங்குவதற்கான உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளது. இத்தினத்தில் இவ்வாடிக்கையாளர் ரூ. 500 000 ஐ செலுத்தினார். இத்தொகை ஆலோசனை வழங்கல் வருமானமாக பதியப்பட்டுள்ளது.

(v) 31.03.2016 இல் பங்குடைமையின் வங்கிக் கணக்கு மீதியானது அத்தினத்திலுள்ள வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வருவன தெரியவந்தன.

- வங்கியில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ஆலோசனை வழங்கல் வருமானம் ரூ. 300 000 ஆனது கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை.
- ரங்காவின் மனைவியிடமிருந்து ஆலோசனை வழங்கல் சேவைக்காகப் பெறப்பட்ட ரூ. 50 000 காசோலையொன்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்டபோதும் அது இன்னும் வசூல் செய்யப்படவில்லை. அது ஏனைய வருமானம் எனப் பதியப்பட்டுள்ளது.
- வெளிவாரி ஆலோசனை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 250 000 காசோலைகள் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.
- நிலையான கட்டளையின்படி பங்குடைமையின் வங்கிக் கணக்கிலிருந்து செலுத்திய இரந்தியின் வீட்டுக்கடனுக்கான தவணைக் கட்டணம் ரூ. 50 000 ஆனது கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2016 இலுள்ளவாறான சீராக்கிய காசு மீதி மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(2) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடைமையின் (பகிர்வுகள் உட்பட) வருமானக் கூற்று

(3) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்குகள்

**(10 புள்ளிகள்)**

## விடை

**வினா இலக்கம் 02**

02. (அ) (1) சீராக்கிய காசு மீதி ரூ. 540 000 (02)

**செய்கை**

சீராக்கிய காசேடு ரூ.'000

| | | | |
|---|---|---|---|
| மீதி கீ.கொ.வ. | 290 | பற்றுக்கள் இரந்தி | 50 [01] |
| ஆலோசனை வழங்கல் வருமானம் | 300 [01] | மீதி. கீ.கொ.செ. | 540 |
| | 590 | | 540 |
| மீதி கீ.கொ.வ. | 540 | | |

2016.03.31 ல் உள்ளவாறான வங்கி இணக்கக் கூற்று (ரூபா '000)

| | | |
|---|---|---|
| 30.03.2016 ல் சீராக்கிய காசேட்டு வங்கி மீதி | (01) 540 | |
| கூட்டு - | | |
| மாற்றப்படாத காசோலை | 250 | (01) |
| | 790 | |
| கழி - | | |
| வசூலிக்கப்படாத காசோலை | (50) | (01) |
| 30.03.2016 ல் வங்கிக் கூற்று மீதி | 740 | |

**(05 புள்ளிகள்)**

(2) ரங்கா இரந்தி உதயன் பங்குடமையின்
2016.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான (பகிர்வுகள் உட்பட)
வருமானக் கூற்று

(ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| ஆலோசனை வழங்கல் வருமானம் | | 8 750 | (02) |
| ஆலோசனை வழங்கல் செலவு | | (3 500) | |
| மொத்தலாபம் | | 5 250 | |
| ஏனைய வருமானம் | | 50 | (01) |
| | | 5 300 | |
| செலவு | | | |
| செயற்பாட்டுச் செலவுகள் | 1 200 | | |
| ஆதனம் பொறி உபகரணச் பெறுமானத் தேய்வு | 1 870 (01) | | |
| உதயன் கடன் வட்டி | 40 (01) | (3 110) | |
| தேறிய இலாபம் | | 2 190 | |
| மூலதன வட்டி - ரங்கா | 118 | | |
| இரந்தி | 118 } (01) | | |
| உதயன் | 64 | (300) | |
| சம்பளம் - இரந்தி | 480 } (01) | | |
| உதயன் | 480 | (960) | |
| இலாபப்பகிர்வு - ரங்கா | 372 | | |
| இரந்தி | (01) { 372 | | |
| உதயன் | 186 | (930) | |

**(08 புள்ளிகள்)**

(2)

| செய்கை | ரூ.' 000 | |
|---|---|---|
| ஆலோசனை வருமானம் | 8 600 | |
| கணக்கில் பதியாத (நேரடி வைப்பு) வருமானம் | 300 | } **02** |
| முற்பண ஆலோசனை வருமானம் | (200) | |
| ஏனைய வருமானம் | 50 | |
| | 8 750 | |

**(07 புள்ளிகள்)**

(3)

பங்காளர் மூலதனக் கணக்கு

| | ரங்கா | இரந்தி | உதயன் | | ரங்கா | இரந்தி | உதயன் |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 720 | 720 (01) | 360 | மீதி | 1 000 | 1 000 | - |
| | | | | காசு | - | - | 300 } (01) |
| | | | | அலுவலக உபகரணம் | - | - | 700 |
| மீதி கீ.கொ.செ | 1 180 | 1 180 | 640 | நன்மதிப்பு | 900 | 900 (01) | - |
| | 1 900 | 1 900 | 1 000 | | 1 900 | 1 900 | 1 000 |

பங்காளர் நடைமுறைக் கணக்கு

| | ரங்கா | இரந்தி | உதயன் | | ரங்கா | இரந்தி | உதயன் |
|---|---|---|---|---|---|---|---|
| பற்றுகள் | - | 50 | (01) - | மீதி | 200 | 100 | - |
| கடன் வட்டி | - | - | 30 | கடன் வட்டி | - | - | (01) 40 |
| | | | | மூலதன வட்டி | (02) { 118 | 118 | 64 |
| சம்பளம் | - | 480 | - | சம்பளம் | - | 480 | 480 |
| மீ கீ.கொ.செ | 690 | 540 | 740 | இலாபம் | 372 | 372 | 186 |
| | 690 | 1 070 | 770 | | 690 | 1 070 | 770 |

**(07 புள்ளிகள்)**

**(ஆ)** பாதணிகளை உற்பத்திசெய்யும் டெல்வின் கம்பனியானது இரண்டு உற்பத்திப் பகுதிகளையும் பராமரிப்புச் செயற்பாடுகளிற்காக சேவைப் பகுதி ஒன்றையும் கொண்டுள்ளது. 5 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அடுத்த வருடத்திற்கான பாதிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விபரம் | மொத்தம் | உற்பத்திப் பகுதி - A | உற்பத்திப் பகுதி - B | பராமரித்தல் பகுதி |
|---|---|---|---|---|
| நேரில் கூலிகள் (ரூ.) | 75 000 | 46 000 | 13 000 | 16 000 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு (ரூ.) | 30 000 | 20 000 | 10 000 | – |
| வாடகை (ரூ.) | 90 000 | ? | ? | ? |
| பாதுகாப்புக் கட்டணங்கள் (ரூ.) | 45 000 | ? | ? | ? |
| மின்சாரம் (ரூ.) | 80 000 | ? | ? | ? |
| இயந்திர மணித்தியாலங்கள் | 15 000 | 10 000 | 5 000 | – |
| ஊழிய மணித்தியாலங்கள் | 14 000 | 2 000 | 12 000 | – |
| தளப்பரப்பு (சதுர மீற்றர்) | 9 000 | 3 800 | 3 600 | 1 600 |
| பாதுகாப்பு ஊழியர் எண்ணிக்கை | 15 | 7 | 7 | 1 |
| கிலோவாற் மணித்தியாலங்கள் | 1 600 | 1 000 | 500 | 100 |

**மேலதிக தகவல்கள்:**

(i) பராமரிப்புப் பகுதியின் மொத்த மேந்தலைக் கிரயமானது உற்பத்திப் பகுதி - **A,** உற்பத்திப் பகுதி - **B** ஆகியவற்றுக்கிடையில் முறையே 5:3 என்ற விகிதத்தில் மீள் பகிர்வுச் செய்யப்படல் வேண்டும்.

(ii) மேந்தலைகளை உறிஞ்சுவதற்கு உற்பத்திப் பகுதி - **A** ஆனது இயந்திர மணித்தியாலங்களையும் உற்பத்திப் பகுதி - **B** ஆனது ஊழிய மணித்தியாலங்களையும் பயன்படுத்துகிறது.

(iii) பாதணிச் சோடி ஒன்றை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திப் பகுதி - **A,** உற்பத்திப் பகுதி - **B** ஆகியவற்றில் முறையே 5 மணித்தியாலங்களும் 3 மணித்தியாலங்களும் செலவழிக்கப்படுகிறது.

(iv) பாதணிச் சோடியொன்றை உற்பத்தி செய்வதற்கான நேர்க் கிரயங்கள் :

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | சோடியொன்றுக்கு | ரூ. 30 |
| ஊழியம் | சோடியொன்றுக்கு | ரூ. 20 |

(v) உற்பத்தியல்லா மேந்தலைகள்:

| | | |
|---|---|---|
| மாறும் மேந்தலைகள் | சோடியொன்றுக்கு | ரூ. 25 |
| நிலையான மேந்தலைகள் | | ரூ. 105 000 |

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படைகளின் பெயர்களை உள்ளடக்கிய மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை
(2) ஒவ்வோர் உற்பத்திப் பகுதிக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்
(3) பாதணிச் சோடியொன்றுக்கான உற்பத்திக் கிரயம்
(4) 5 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்தக் கிரயம் **(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(ஆ) (1)** மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை (ரூ'000)

| கிரய உருப்படி | பகிர்வின் அடிப்படை | மொத்தம் | உற்பத்திப் பகுதி | | சேவை திணைக்களம் |
|---|---|---|---|---|---|
| | | | A | B | பராமரிப்பு பகுதி |
| நேரில் கூலிகள் | நேரடி ஒதுக்கீடு | 75 000 | 46 000 | 13 000 | 16 000 (01) |
| இயந்திர பெறுமானத் தேய்வு | நேரடி ஒதுக்கீடு | (01) 30 000 | 20 000 | 10 000 | - (01) |
| வாடகை | தளப்பரப்பு (38:36:16) | (01) 90 000 | 38 000 | 36 000 | 16 000 |
| பாதுகாப்புக் கட்டணம் | ஊழியர் எண்ணிக்கை (7:7:1) | (01) 45 000 | 21 000 | 21 000 | 3 000 (01) |
| மின்சாரம் | கிலோ வாட் (10:5:1) | 80 000 | 50 000 | 25 000 | 5 000 (01) |
| | | 320 000 | 175 000 | 105 000 | 40 000 |
| பராமரித்தல் பகுதி | (5:3) | (01) - | 25 000 | (01) 15 000 | (40 000) |
| | | 320 000 | 200 000 | 120 000 | - |

**(10 புள்ளிகள்)**

(2)

உற்பத்திப் பகுதி Aக்கான மேந்தலை உறிஞ்சுதல் வீதம் = ரூ. 20 **(02)**

உற்பத்திப் பகுதி Aக்கான மேந்தலை

உறிஞ்சுதல் வீதம் = $\dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம்}}{\text{பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள்}}$

= $\dfrac{\boxed{01}\ 200\ 000}{10\ 000\ \boxed{01}}$

= ரூ. 20

உற்பத்திப் பகுதி Bக்கான மேந்தலை உறிஞ்சுதல் வீதம் = ரூ. 10 **(02)**

உற்பத்திப் பகுதி Bக்கான மேந்தலை

உறிஞ்சுதல் வீதம் = $\dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம்}}{\text{பாதிடப்பட்ட ஊழிய மணித்தியாலங்கள்}}$

= $\dfrac{\boxed{01}\ 120\ 000}{12\ 000\ \boxed{01}}$

= ரூ. 10

**(04 புள்ளிகள்)**

(3) பாதணி சோடி ஒன்றிற்கான உற்பத்திக் கிரயம் ரூ. 180 (03)

| செய்கை | | ரூ. | |
|---|---|---|---|
| நேர் மூலப் பொருள் | | 30 | 01 |
| நேர் ஊழியம் | | 20 | |
| உறிஞ்சப்பட்ட மேந்தலை A - 20 × 5 | 01 | 100 | |
| B - 20 × 5 | 01 | 30 | |
| | | 180 | |

**(03 புள்ளிகள்)**

(4) 5000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்தக் கிரயம் ரூ. 1 130 000 (04)

| செய்கை | ரூ. | |
|---|---|---|
| உற்பத்திக் கிரயம் 5000 × 180 | 900 000 | 02 |
| உற்பத்தியல்லா மாறும் மேந்தலைகள் 5000 × 25 | 125 000 | 01 |
| நிலையான மேந்தலை | 105 000 | 01 |
| | 1 130 000 | |

**(04 புள்ளிகள்)**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**2 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்கு புள்ளிகள் பெற்ற விதம்**




இவ்வினாவிற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அளவு 20 x 2 = 40 ஆகும்.
2 ஆம் வினா கட்டாய வினாவாயினும் அதற்கு விண்ணப்பதாரிகளில் 99% மானோர் மாத்திரமே விடையளித்துள்ளனர்.
அதில் 00 - 10 புள்ளி வகுப்பாயிடையில் 22% ம்
11 - 20 புள்ளி வகுப்பாயிடையில் 19% ம்
21 - 30 புள்ளி வகுப்பாயிடையில் 28% ம்
31 - 40 புள்ளி வகுப்பாயிடையில் 31% ம்
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அதற்கேற்ப 31 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் விண்ணப்பதாரிகளில் 31% மானோர் பெற்றுள்ளதுடன், விண்ணப்பதாரிகளில் 22% மானோர் 10 அல்லது அதனையும் விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் 20 க்கு மேல் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் 59% மாகும்.

**வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை**




**2ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்**

முழுமையாக 7 உபபிரிவுகளைக் கொண்டுள்ள இவ்வினாவின் இலகுதன்மை கூடிய பெறுமதியினைக் கொண்டுள்ளது. இலகுதன்மை கூடிய உபபகுதியாக (ஆ) (1) காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 87% ஆகும். இலகுதன்மை குறைவான உபபிரிவு (அ) 2 ஆகும். அதன் இலகுதன்மை 42% ஆகும்.

2 ஆம் வினாவின் (அ) (1) பகுதியின் இலகுதன்மை 86% மாகும். இதில் சீராக்கப்பட்ட காசு மீதியினை கண்டுபிடித்தல் மற்றும் வங்கி இணக்கக் கூற்று தயாரித்தல் தொடர்பான விளக்கமே பரீட்சிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப கூடுதலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சிறப்பாக விடையளித்துள்ளனர் எனக் கூறமுடியும்.

(அ) 2 இப்பகுதியின் இலகுதன்மை 42% மாகும். இவ்வினாவினூடாக சேவை வழங்கும் வணிகமொன்றின் வருமானக் கூற்றினைத் தயாரிக்கும் அறிவும் விளக்கமுமே பரீட்சிக்கப்பட்டுள்ளது. சேவை வழங்கும் வணிகமொன்றின் வருமானக் கூற்றினைத் தயாரிப்பது தொடர்பிலான விளக்கம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமையும் ஆலோசனை வருமானத்தை சரியாக இனம் காணாமையுமே இப்குதியில் புள்ளிகள் குறைவதற்கு காரணமாகும். சேவை வழங்கும் வணிகங்களில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்களையும் உள்ளடக்கியதாக பிரயோக ரீதியிலான பயிற்சிகளைப் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை ஒழுங்கமைத்தல் முக்கியமானதாகும்.

(அ) 3 பகுதியின் இலகுதன்மை 62% மாகும். பங்காளர்களின் மூலதன நடைமுறைக் கணக்குகள் தயாரித்தல் தொடர்பான அறிவு மற்றும் விளக்கமே இங்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது. இவ்வினாவிற்கு பரீட்சார்த்திகள் விடையளிக்கும்போது செலுத்திய வங்கி வட்டி மற்றும் செலுத்திய சம்பளம் என்பவற்றை நடைமுறைக் கணக்கில் வரவு வைத்திருக்காமை போன்ற பலவீனங்களை இனம் கண்டுகொள்ள முடிந்தது.

(ஆ) 1 பகுதியின் இலகுதன்மை 87% மாகும். இதில் பொது மேந்தலைக் கிரய பகுப்பாய்வுப் பத்திரத்தை தயாரிப்பது தொடர்பான விளக்கமே பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளில் கூடுதலானோர் இதற்கு சிறப்பாக விடையளித்துள்ளனர் என்பதை எம்மால் அறிய முடிந்தது.

(ஆ) 2 இனது இலகுதன்மையும் 85% எனும் உயர் மட்டத்தில் காணப்பட்டதுடன் இதன்மூலம் பொது மேந்தலைக்கிரய உள்ளடக்க வீதத்தை கணிப்பிடல் தொடர்பான அறிவும் விளக்கமுமே பரீட்சிக்கப்பட்டது.

(ஆ) 3 இனது இலகுதன்மையும் 70%எனும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மட்டத்தில் காணப்பட்டதுடன், உற்பத்திப் பொருளொன்றின் மொத்த உற்பத்திக் கிரயத்தை கண்டு பிடிப்பது தொடர்பான அறிவே இதன் மூலம் பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளில் குறிப்பிட்ட ஒரு சிறு பிரிவினர் பாதணி சோடியொன்றின் உற்பத்திக் கிரயத்தைக் கணிக்கும்போது பொது மேந்தலைக் கிரய உள்ளடக்க வீதத்தை உண்மையான மணித்தியாலங்களின் எண்ணிக்கையினால் பெருக்கியிருக்காமை இதிலுள்ள பலவீனமொன்றாகும்.

(ஆ) 4 பகுதியின் இலகுதன்மை 53% மாக இருந்ததுடன், ஏதாவது குறித்த செயற்பாட்டு மட்டத்தில் மொத்த கிரயத்தை கண்டுபிடிக்கும் விளக்கமே இங்கு பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளில் குறிப்பிடத்தக்க பிரிவினர் மொத்தக் கிரயத்தை கணிக்கும்போது உற்பத்தியல்லாத மாறும் கிரயத்தையும் மற்றும் உற்பத்தியல்லாத நிலையான கிரயத்தையும் கவனத்தில் எடுக்காமல் இருந்ததை இங்கு காண முடிந்தது.

மொத்தக் கிரயத்தைக் கணிக்கும்போது உற்பத்திக் கிரயத்தைப் போன்றே உற்பத்தியல்லாத கிரயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது விளங்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை ஒழுங்கமைப்பது முக்கியமானதாகும்.

03 ஆம் வினா

**3.** சதீஸ் சில்லறை வியாபாரமொன்றை நடாத்தி வருகிறார். 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு செய்யப்பட்ட வருமானக் கூற்று ரூ. 600 000 இலாபமாகக் காட்டியது. 31.03.2016 இலுள்ளவாறான வரைபு செய்யப்பட்ட நிதிநிலைமைக் கூற்று ரூ. 50 000 காசு மீதியைக் காட்டியது. எனினும் இவர் கணக்குப் புத்தகங்களை சரியான முறையில் பேணிவருவதில்லை. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை எனப் பின்னர் தெரியவந்தது.

| **இல.** | **கொடுக்கல்வாங்கல்** |
|---|---|
| 1 | கடனுக்கு விற்பனை செய்த பொருட்கள் ரூ. 80 000 ஆகும். இப்பொருட்களின் கிரயம் ரூ. 60 000 ஆக இருந்தது. |
| 2 | கடனுக்கு விற்பனை செய்த ரூ. 36 000 இற்கான பொருட்கள் உட்திரும்பின. இப்பொருட்களின் கிரயம் ரூ. 30 000 ஆகும். |
| 3 | நன்கொடை செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் ரூ. 10 000. |
| 4 | வியாபாரத்தின் பராமரிப்புச் செலவுகள் ரூ. 10 000 ஆக இருந்தது. இதில் ரூ. 6 000 ஆனது தனிப்பட்ட முறையில் சதீஸினால் செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணம் வியாபாரத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. |
| 5 | 01.07.2015 இல் வருடாந்தம் 12% வட்டிக்கு ரூ. 300 000 வங்கிக் கடன் பெறப்பட்டது. வட்டி இன்னும் செலுத்தப்படவில்லை. |
| 6 | 31.03.2016 இல் முச்சக்கர வண்டியொன்று ரூ. 280 000 காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 7 | கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய ரூ. 30 000 ஆனது அதே நபருக்குக் கடன்கொடுத்தோர் என்ற வகையில் செலுத்த வேண்டிய ரூ. 50 000 இற்கு எதிராக தீர்க்கப்பட்டுள்ளது. மிகுதி காசாகச் செலுத்தப்பட்டது. |
| 8 | சதீஸின் ஆயுட்கால காப்புறுதிக் கட்டணக் கொடுப்பனவு ரூ. 12 000. |
| 9 | கொடுக்கல்வாங்கல் இல. 1 இல் வரவேண்டிய தொகை 5% கழிவை கழித்து பெறப்பட்டது. |
| 10 | கடந்த வருடத்தில் அறவிடமுடியாக்கடனாகப் பதிவழித்த ரூ. 15 000 ஆனது பெறப்பட்டது. |

**வேண்டப்படுவது:**

(1) கீழே தரப்பட்டுள்ள மாதிரியை ஒத்த மாதிரியைப் பயன்படுத்தி மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களை அவற்றின் பெறுமதியில் குறிப்பிட்டு, இவ் ஒவ்வொரு பெறுமதியினதும் முன்பாக அதிகரிப்பு எனின் (+) எனவும், குறைவு எனின் (–) எனவும் குறித்துக் காட்டுக.

**ரூ.'000**

| கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | சரக்கிருப்பு | வியாபார வருமதிகள் | காசு | நீண்ட காலக் கடன் | வியாபார கொடுக்குமதிகள் | ஏனைய கொடுக்குமதிகள் | |
| | | | | | | | | |

(2) 31.03.2016 இலுள்ளவாறான திருத்திய காசு மீதி

(3) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான திருத்திய இலாபம் (உரிமையாண்மையில் மேற்படி கொடுக்கல்வாங்கல்களின் தேறிய தாக்கத்தின் அடிப்படையில்) **(மொத்தம் 15 புள்ளிகள்)**

விடை

**வினா இலக்கம் 03**

**(3) (1)**

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் | | | பொறுப்புக்கள் | | | | உரிமை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி உபகரணம் | சரக்கிருப்புகள் | வியாபார வருமதிகள் | காசு | நீண்டகால கடன்கள் | வியாபார கொடுக்குமதிகள் | ஏனைய கொடுக்குமதிகள் | | |
| 1 | | -60 | +80 | | | | | +20 | (02) |
| 2 | | +30 | -36 | | | | | -6 | (02) |
| 3 | | -10 | | | | | | -10 | (01) |
| 4 | | | | -4 | | (01) | | +6<br>-10 | (03)<br>(02) |
| 5 | | | | +300 | +300 | | +27 | -27 | (01) |
| 6 | +280 | | | -280 | | | | | (03) |
| 7 | | | -30 | -20 | | -50 | | | (01) |
| 8 | | | | -12 | | | | -12 | |
| 9 | | | -80 | +76 | | | | -4 | (03) |
| 10 | | | | -15 | | | | -15 | (02) |
| | 280 | -40 | -66 | 75 | 300 | -50 | 27 | -28 | |

**(20 புள்ளிகள்)**

**(2)**

| செய்கை | ரூ. | |
|---|---|---|
| காசு மீதி | 50 | 01 |
| கூட்டு கொடுக்கல் வாங்கல்களின் பின் தேறிய அதிகரிப்பு | 75 | 03 |
| 31.12.2016 ல் காசு மீதி | 125 | |

**(04 புள்ளிகள்)**

**(3)**

மாற்று முறை

காசுக் கணக்கு (ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| மீதி. வ. | 50 | வியாபாரச் செலவு | 4 |
| வங்கிக் கடன் | 300 | முச்சக்கர வண்டி | 280 |
| கடன்பட்டோர் | 76 | கடன் கொடுநர் | 20 |
| மீளப்பெற்ற அ.மு.கடன் | 15 | பற்று | 12 |
| | | மீதி.செ. | 125 |
| | 441 | | 441 |

(ஏதாவது 02 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

**(3)** 31.12.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான திருத்திய இலாபம் ரூ. 578 (05)

| செய்கை : | ரூ. | |
|---|---|---|
| கணிப்பிட்ட இலாபம் | 600 | |
| (-) கொடுக்கல் வாங்கல்களின் பின் உரிமையில் தேறிய குறைவு [02] | (28) | |
| (+) பற்றுக்கள் | 12 | 01 |
| (-) மேலதிக மூலதனம் | (6) | 01 |
| திருத்திய இலாபம் | 578 | |

| மாற்று முறை : | | |
|---|---|---|
| முன்னர் கணிப்பிடப்பட்ட இலாபம் | (ரூ.'000) | |
| விற்பனை இலாபம் | 600 | |
| உட்திரும்பல் | 20 | 01 |
| செலவுகள் (10 000 + 10 000 + 27 000 + 4 000) | (6) | 01 |
| அறவிடமுடியாக்கடன் | (51) | 01 |
| | 15 | 01 |
| | 578 | |

**3 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்கு புள்ளிகள் பெற்ற விதம்**




இவ்வினாவிற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அளவு 15 x 2 = 30 ஆகும்.
3 ஆம் வினா விண்ணப்பதாரிகளுள் 93% மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்துள்ளனர்.
அதில் 00 - 07 புள்ளி வகுப்பாயிடையில் 17% ம்
08 - 15 புள்ளி வகுப்பாயிடையில் 28% ம்
16 - 23 புள்ளி வகுப்பாயிடையில் 31% ம்
24 - 30 புள்ளி வகுப்பாயிடையில் 25% ம்
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இதற்கமைய இவ்வினாவிற்காக புள்ளிகள் 24 அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 25% மாக இருந்த புள்ளிகள் 7 அல்லது அதிலும் குறைவாகப் புள்ளிகள் பெற்ற பிரிவினர் விண்ணப்பதாரிகளுள் 17% மாகும். விண்ணப்பதாரிகளில் 56% மானோர் இவ்வினாவிற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசிக்கும் கூடிய புள்ளிகளைப்பெற்றுள்ளனர்.




இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 3 இல் இலகுதன்மை கூடிய பகுதி (1) ஆக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 68% ஆகும். அதே போன்று இலகுதன்மை குறைவான பகுதி (3) ஆக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 34% ஆகும்.

(3) (1) பகுதியின் இலகுதன்மை 68% ம் எனும் உயர் மட்டத்தில் காணப்பட்டதுடன் இவ்வினாவினூடாக கணக்கீட்டுச் சமன்பாடு தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது கணக்கீட்டுச் சமன்பாட்டில் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களைக் காட்டும்போது வணிகத்தின் பராமரிப்புச் செலவினை உரிமையாளர் தனது தனிப்பட்ட செலவாக ஏற்று மேற்கொள்கின்றபோது பதிவு செய்யப்படவேண்டிய முறை தொடர்பில் சிறந்த விளக்கமின்மையும், வங்கிக் கடனுக்கான வட்டிக் கணிப்பீட்டின்போது பெற்ற திகதிகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளாமையும் பரீட்சகர்களிலுள்ள பலவீனங்களாகும்.

(2) வது பகுதியின் இலகுதன்மை 59% ம் என்பதுடன், அதன் மூலம் சீராக்கப்பட்ட காசு மீதியினைக் கண்டுபிடிப்பது தொடர்பான அறிவே பரீட்சிக்கப்பட்டது. எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளில் குறிப்பிடத்தக்க பிரிவினர் சீராக்கப்பட்ட காசு மீதியினைக் கணிக்கும்போது காசுப் பெறுவனவுகள், காசுக் கொடுப்பனவுகள் என்பன காசு மீதியில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சரியாக விளங்கியிருக்கவில்லை.

(3) இப்பிரிவின் இலகுதன்மை 34% எனும் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், இவ்வினாவின் மூலம் சீராக்கப்பட்ட இலாபக் கணிப்பீடு தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டுள்ளது. இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது பரீட்சகர்கள் காட்டியுள்ள பிரதான பலவீனமாக தேறிய இலாபக் (இலாபச் சீராக்கம்) கணிப்பீட்டின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் காட்டப்பட்டிருந்தாலும் அதனைச் சரியாக விளங்காது வேறு முறைகளில் இலாபத்தை கணிப்பதற்கு முயற்சி செய்துள்ளமையைக் குறிப்பிடலாம். இலாபம் / நட்டக் கணிப்பீட்டின்போதும், அதனை பூரணமற்ற அறிக்கைகளின் மூலம் சீராக்கும்போதும், இலாபச் சமன்பாட்டினை பயன்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் ஒழுங்கமைக்கப்படல் மிக முக்கியமானதாகும்.

04 **ஆம் வினா**

**4.** 01.04.2016 இல் ஆர்வின் என்பவர் தனது சொந்த சேமிப்பிலிருந்து ரூ. 900 000 முதலீடு செய்து உற்பத்தி வியாபாரமொன்றை ஆரம்பித்தார். 2016 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

(i) காசுப் பெறுவனவு மற்றும் காசுக் கொடுப்பனவு நாளேடுகளில் பதியப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்:

| | |
|---|---|
| **பெறுவனவுகள்:** | **ரூ.'000** |
| விற்பனைகள் | 6 000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவுகள் | 2 000 |
| **கொடுப்பனவுகள்:** | |
| மூலப்பொருட்கள் கொள்வனவுகள் | 1 200 |
| கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 800 |
| மூலப்பொருட்கள் கொள்வனவுக்கான முற்பணக் கொடுப்பனவு | 300 |
| இயந்திர இயக்குவிப்போருக்கான கூலிகள் | 400 |
| உற்பத்தி மேற்பார்வையாளர்களின் சம்பளங்கள் | 700 |
| தொழிற்சாலை மின்சாரம் | 60 |
| தொழிற்சாலை வாடகை | 600 |
| நிர்வாகச் செலவுகள் | 200 |
| இயந்திரக் கொள்வனவு (01.04.2016 இல்) | 4 000 |

(ii) ஏனைய ஆரம்பப் பதிவேடுகளின் மொத்தங்கள்:

| | **ரூ.'000** |
|---|---|
| விற்பனை நாளேடு | 12 000 |
| கொள்வனவு நாளேடு | 8 000 |
| விற்பனைத் திரும்பல் நாளேடு | 500 |

(iii) மூலப்பொருள் கொள்வனவுகளுக்கான முற்பண கொடுப்பனவுகளில் ரூ. 100 000 பெறுமதியான மூலப்பொருட்கள் மாத்திரமே 27.04.2016 இல் பெறப்பட்டுள்ளன. இது கணக்குப் புத்தகங்களில் இன்னும் பதியப்படவில்லை.

(iv) கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூ. 300 000 ஆனது திரும்பப் பெற முடியாதுள்ளது. இத்தொகை அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும்.

(v) மாதமொன்றுக்கான தொழிற்சாலை வாடகை ரூ. 200 000 ஆகும். முதல் காலாண்டுக்கான வாடகை செலுத்தப்பட்டுள்ளது.

(vi) 2016 ஏப்ரல் மாதத்திற்கான மின்சாரப் பட்டியல் ரூ. 50 000 ஆனது 10.05.2016 இல் பெறப்பட்டுள்ளது.

(vii) இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகும். இதன் எஞ்சிய பெறுமதி ரூ. 400 000 ஆகும். இயந்திரமானது நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

(viii) மாத முடிவில், சரக்கிருப்பு மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | **ரூ. '000** |
|---|---|
| மூலப்பொருட்கள் | 300 |
| நடைமுறை வேலை (உற்பத்திக் கிரயத்தில் பெறுமதியிடப்பட்டது) | 80 |
| முடிவடைந்த பொருட்கள் | 100 |

**வேண்டப்படுவது:**

(1) 2016 ஏப்ரல் மாதத்திற்கான பொதுப் பேரேட்டிலுள்ள பின்வரும் கணக்குகள் (T மாதிரியை பயன்படுத்துக):
- (i) விற்பனைகள்
- (ii) கடன்பட்டோர் கட்டுப்பாடு
- (iii) மூலப்பொருள் கொள்வனவுகள்
- (iv) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
- (v) முற்பணக் கொடுப்பனவுகள்

(2) 2016 ஏப்ரல் மாதத்திற்கான உற்பத்திக் கணக்கு

(3) 2016 ஏப்ரல் மாதத்திற்கான வருமானக் கூற்று

(4) 30.04.2016 இலுள்ளவாறான பின்வரும் உருப்படிகளுக்கான பெறுமதிகள்:
- (i) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
- (ii) முற்செலுத்திய செலவுகள்
- (iii) உரிமையாண்மை

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**விடை**
**வினா இலக்கம் 04**

04. (1) விற்பனைக் கணக்கு (ரூ. 000)

| | | | | |
|---|---|---|---|---|
| மீ.வ | 1 800 | காசு | 6 000 | (01) |
| | | கடன்பட்டோர் | 12 000 | (01) |
| | 1 800 | | 18 000 | |

(2) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| விற்பனை | 12 000 | காசு | 2 000 | (01) |
| | | விற்பனை திரும்பல் | 500 | (01) |
| | | அறவிடமுடியாக் கடன் | 300 | (01) |
| | | மீதி கீ.கொ.செ | 9 200 | |
| | 12 000 | | 12 000 | |

(3) மூலப்பொருள் கொள்வனவு கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| காசு | 1 200 | (01) | உற்பத்திக் கணக்கு | 9 300 |
| கடன்கொடுத்தோர் | 8 000 | (01) | | |
| முற்பணம் | 100 | (01) | | |
| | 9 300 | | | 9 300 |

(4) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| காசு | 800 | (01) | கொள்வனவு கணக்கு | 8 000 |
| மீதி கீ.கொ.செ | 7 200 | | | |
| | 8 000 | | | 8 000 |

(5) முற்பணக் கொடுப்பனவுக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| காசு | 300 | (01) | மூலப்பொருள் கொள்வனவு | 100 |
| | | | மீதி கீ.கொ.செ | 200 |
| | 300 | | | 300 |

(13 புள்ளிகள்)

(2)

### ஆர்வினின் 2016 ஏப்பிரல் மாதத்திற்கான உற்பத்திக் கணக்கு

(ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | | (01) 9 300 | |
| கழி மூலப்பொருள் இறுதி இருப்பு | | (300) | (01) |
| பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் | | 9 000 | |
| நேர் கூலி | | | |
| இயந்திர இயக்குநர் கூலி | | 400 | (01) |
| மூலக் கிரயம் | | 9 400 | |
| உற்பத்தி மேந்தலைகள் | | | |
| உற்பத்தி மேற்பார்வையாளர் சம்பளம் | 700 | (01) | |
| மின்சாரக் கட்டணம் | 50 | (01) | |
| தொழிற்சாலை வாடகை | 200 | (01) | |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | 30 | (01) 980 | |
| | | 10 380 | |
| கழி 2016.04.30 ல் குறைவேலை இருப்பு | | (80) | (01) |
| உற்பத்திக் கிரயம் | | 10 300 | |

**(08 புள்ளிகள்)**

(3)

### ஆர்வின் உற்பத்தி வியாபாரம்
### 2016 ஏப்பிரல் மாதத்திற்கான வருமானக் கூற்று

(ரூ.'000)

| | | |
|---|---|---|
| விற்பனை | 18 000 | (01) |
| கழி விற்பனைத் திரும்பல் | (500) | (01) 17 500 |
| கழி இறுதி முடிவுப் பொருள் இருப்பு | (01) 10 300 | |
| 2016.04.30இல் இறுதி முடிவுப் பொருள் | (100) | (01) (10 200) |
| | | 7 300 |
| மொத்த இலாபம் | | |
| செலவுகள் | | |
| நிர்வாகச் செலவுகள் | 200 | } (01) |
| கழி அறவிடமுடியாக்கடன் | 300 | |
| | | (500) |
| தேறிய இலாபம் | | 6 800 |

**(05 புள்ளிகள்)**

(ரூ.' 000)

(4) (i) 2016.04.30ல் உள்ளவாறான ஆதனம் பொறி, உபகரணங்கள் 3 970 (01)

| செய்கை | (ரூ.' 000) |
|---|---|
| ஆதனம் பொறி, உபகரணம் | 4 000 |
| பெறுமானத் தேய்வு | (30) 01 |
| | 3 970 |

(ரூ.' 000)

(ii) முற்செலுத்திய செலவுகள் மீதி 410

| செய்கை | (ரூ.' 000) |
|---|---|
| முற்பண தொழிற்சாலை செலவு | 400 01 |
| முற்பன மின்சாரம் | 10 01 |
| | 410 |

(ரூ.' 000)

(iii) உரிமையாண்மை = 7 700 (01)

| செய்கை | (ரூ.' 000) |
|---|---|
| மூலதனம் | 900 |
| தேறிய இலாபம் | 01 6 800 |
| | 7 700 |

**(04 புள்ளிகள்)**

**4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்கு புள்ளிகள் பெற்ற விதம்**




இவ்வினாவிற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அளவு 15 x 2 = 30 ஆகும்.

4 ஆம் வினாவினை விண்ணப்பதாரிகளுள் 64%மானோர் மட்டுமே தெரிவு செய்துள்ளனர்.

அதில் 00 - 07 புள்ளி வகுப்பாயிடையில் 26% ம்
08 - 15 புள்ளி வகுப்பாயிடையில் 28% ம்
16 - 23 புள்ளி வகுப்பாயிடையில் 24% ம்
24 - 30 புள்ளி வகுப்பாயிடையில் 22% ம்

என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அதற்கேற்ப இவ்வினாவிற்கு 24 புள்ளிகள் அல்லது அதனையும் விடக் கூடிய புள்ளிகளைப் பெற்றோர் 22%மாகக் காணப்படுவதுடன் விண்ணப்பதாரிகளில் 26%மானோர் 07 புள்ளிகள் அல்லது அதனையும்விடக் குறைவாகவே பெற்றுள்ளனர்.




இவ்வினாவிற்குரிய உபபகுதிகள் 6 இனதும் இலகுதன்மை 51% த்தை விடக் கூடியதாகும். இலகுதன்மை குறைந்த பகுதியாக 4(iii) காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 32% ஆகும்.

(4) (அ) (i) பகுதியின் இலகுதன்மை 96%மாகும். பரீட்சகர்கள் கணக்கீட்டுச் செயன்முறைகள் தொடர்பாக சரியாக விளங்கியிருந்தமையால் இவ்வாறு கூடிய சதவீதம் இதில் கிடைக்கப்பெற்றுள்ளது எனக் கூறமுடியும்.

(1) (ii) பகுதியின் இலகுதன்மை 72% மாகும். கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மற்றும் செலவிற்குரிய உருப்படிகளை சரியாக இனம் காணாமை இதிலுள்ள குறைபாடாகும். கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பான விளக்கத்தை மாணவர்களுக்கு அதிகரிக்கச் செய்வதன் மூலம் இச்சதவீதத்தை மேலும் கூட்ட முடியும் எனத் தெரிகின்றது.

(1) (iii) பகுதியின் இலகுதன்மை 58%மாகும். மூலப்பொருளைக் கொள்வனவு செய்வதற்குச் செலுத்திய மொத்த முற்பணத் தொகையையும் மூலப் பொருள் கொள்வனவுக் கணக்கில் வரவு வைத்தமையால் சரியான கொள்வனவுப் பெறுமதியினைக் கணிக்க முடியாமல் போயிருந்தது. அதேபோன்று முற்பணமாகச் செலுத்திய தொகையினை கணக்கு வைக்கும் முறைகள் தொடர்பிலான கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை ஒழுங்கமைப்பதன் மூலம் இச்சதவீதத்தைக் கூட்டிக்கொள்ள முடியும்.

(1) (iv) பகுதியின் இலகுதன்மை 71%மாகும். கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பான விளக்கம் குறைவாக இருந்தமை காரணமாக இவ்வினாவிற்கு விடையளிக்காமல் இருந்தமையை காணக்கூடியதாக இருந்தது. கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதன்மூலம் இந்நிலைமையினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

(1) (v) பகுதியின் இலகுதன்மை 64% மாகும். முற்பணங்களில் நிதியாண்டுக்குரிய அளவினை இனம் காணாதிருந்தமையைக் இங்கு காணக்கூடியதாக் இருந்தது. இது தொடர்பான சரியான அறிவு, விளக்கத்தைப் பெற்றால் இச் சதவீதத்தைக் கூட்டிக்கொள்ள முடியும்.

4.2 பகுதியின் இலகுதன்மை 49%மாகும். இதில் உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பது தொடர்பான விளக்கமே பரீட்சிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை வாடகை, மின்சாரம், இயந்திரத் தேய்வு போன்ற செலவுகளின் குறித்த நிதியாண்டுக்குரிய அளவினை வேறுபடுத்தி அறிந்து கொள்ளாமை, அட்டுறு எண்ணக்கருவின்படி கணக்கு வைத்தல் தொடர்பான அறிவு குறைவாக இருந்தமை என்பன இதற்கான காரணமாகவும் இருக்கலாம். கணக்கு வைப்பின்போது குறித்த நிதியாண்டுக்குரிய திகதிகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

4.3 பகுதியின் இலகுதன்மை 51% மாகும். வருமானக் கூற்றினைத் தயாரிப்பதற்கான அறிவும் விளக்கமுமே இதனூடாகப் பரீட்சிக்கப்பட்டது. உற்பத்திக் கணக்கு மற்றும் வருமானக் கூற்று என்பவற்றில் உள்ளடக்கவேண்டிய உருப்படிகளை வேறுபடுத்தி அறிந்துகொள்ளாமை மற்றும் உற்பத்திக் கிரயத்தை வருமானக் கூற்றிற்கு மாற்றுதல் தொடர்பான விளக்கம் காணப்படாமையே இவ்வீதம் குறைவதற்கு காரணமாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை ஒழுங்குபடுத்தும்போது உற்பத்திக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பவற்றை ஒரே முறையில் தயாரிக்கச் செய்வதன் மூலம் இந்நிலைமையினைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

4.i பகுதியின் இலகுதன்மை 41%மாகும். இயந்திரத் தேய்வினை ஒரு மாதத்திற்கு மாத்திரம் கணிப்பிடல் வேண்டும் என்பதை விளங்காமை இப்பகுதியின் இலகுதன்மை குறைவதற்கு காரணமாகும்.

4.ii பகுதியின் இலகுதன்மை 38% மாகும். நிதியாண்டில் எதிர்வரும் ஆண்டிற்கு செலுத்தப்பட்ட செலவினை இனம் காணாமை இதற்குக் காரணமாகும்.

4.iii பகுதியின் இலகுதன்மை 22% மாகும். 4 ஆம் வினாவினைத் தெரிவு செய்தவர்களும் இப்பகுதிக்கு விடையளிக்காமை இதற்குரிய காரணமாகும்.

நிதியாண்டுக்குரிய வருமானம் செலவுகளைக் கணிப்பிபடும்போது உரிய திகதியினைக் கவனத்தில் கொண்டு கணிப்பிடல் வேண்டும் என்பது விளங்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

05 ஆம் வினா

**5.** **(அ)** உற்பத்திக் கம்பனியொன்று தனது செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரமொன்றை பதிலீடு செய்ய எண்ணியுள்ளது. புதிய இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் இந்த இரண்டு இயந்திரங்களுடனும் தொடர்பானவை.

| **விபரம்** | **புதிய இயந்திரம் (ரூ.'000)** | **தற்போதைய இயந்திரம் (ரூ.'000)** |
|---|---|---|
| கிரயம் ........ | 1 000 | – |
| தற்போதைய சந்தைப் பெறுமதி ........ | – | 300 |
| எஞ்சிய பெறுமதி ........ | 200 | – |
| வருடாந்த செயற்பாட்டுக் கிரயம்: | | |
| வருடம் 1 ........ | 100 | 300 |
| வருடம் 2 ........ | 100 | 300 |
| வருடம் 3 ........ | 120 | 320 |
| வருடம் 4 ........ | 120 | 320 |
| வருடம் 5 ........ | 140 | 360 |

புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படுமாயின் மேலதிக தொழிற்படு மூலதனமாக ரூ. 280 000 ஆனது இச் செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் தேவைப்படும். இத் தொகையானது செயற்றிட்ட முடிவில் மீளப் பெற்றுக்கொள்ளப்படும். செயற்றிட்டத்தின் தேவைப்படும் திரும்பல் வீதம் 10% ஆகும்.

10% இல் கழிவீட்டுக் காரணி (முதல் இரண்டு தசம தானத்தில்) பின்வருமாறு:

| **வருடம்** | **1** | **2** | **3** | **4** | **5** |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக் காரணி | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் காசு வெளிப்பாய்ச்சல்களையும் உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கிய அட்டவணையொன்று

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதி அடிப்படையில் செயற்றிட்டத்தைத் தெரிவுசெய்வதற்கான சிபார்சு **(05 புள்ளிகள்)**

## விடை

## வினா இலக்கம் 05

05. (அ) காசுப்பாய்ச்சல்கள் (ரூ.'000)

| உருப்படி \ வருடம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | |
|---|---|---|---|---|---|---|---|
| காசு உட்பாய்ச்சல் : | | | | | | | |
| பழைய இயந்திர விற்பனை | 300 | (01) 02 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் | | | | (02) | |
| செயற்பாட்டு கிரய சேமிப்பு | - | 200 | 200 | 200 | 200 | 220 | (01) |
| தொழிற்படு மூலதனம் | | | | | | 280 | (01) |
| இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி | | | | | | 200 | |
| | 300 | 200 | 200 | 200 | 200 | 700 | |
| காசு வெளிப்பாய்ச்சல் : | | | | | | | |
| இயந்திரக் கிரயம் | (1 000) | (01) | | | | | |
| தொழிற்படு மூலதனம் | (280) | (01) | | | | - | |
| | (1 280) | - | - | - | - | - | |
| தேறிய காசுப்பாய்ச்சல் | (980) | 200 | 200 | 200 | 200 | 700 | |

**(07 புள்ளிகள்)**

(ரூ.' 000)

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி + ரூ. 88 000 (01)

**(02 புள்ளிகள்)**

செய்கை :

| வருடம் | தேறிய காசுப் பாய்ச்சல் | கழிவுக் காரணி | கழிவு செய்யப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் |
|---|---|---|---|
| 0 | (980) | 1.0 | (980) |
| 1 | 200 | 0.91 | 182 |
| 2 | 200 | 0.83 | 166 |
| 3 | 200 | 0.75 | 150 |
| 4 | 200 | 0.68 | 136 |
| 5 | 700 | 0.62 | 434 |
| | | தேறிய நிகழ்காலப் பெறுமதி | 88 |

(ஆண்டுகள் 1–5 தேறிய காசுப் பாய்ச்சல்: 01; கழிவு செய்யப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்: 01)

(3) இச் செயற்றிட்டத்தைத் தெரிவு செய்யலாம். (01)

காரணம் :- தேறிய நிகழ்காலப் பெறுமதி நேர்க் கணியமாகக் காணப்படுகின்றது.

**(01 புள்ளி)**

**(ஆ)** பாடசாலையொன்றின் ஆசிரியர் நலன்புரிச் சங்கமானது தமது அங்கத்தவர்களுக்காக ஒன்றுகூடல் ஒன்றை ஒழுங்குசெய்கிறது. இச்சங்கம் தற்போது சேவையிலுள்ள 120 ஆசிரியர்களையும் 30 இளைப்பாறிய ஆசிரியர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. இந் நிகழ்வுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் பின்வருமாறு:

| | | ரூ. |
|---|---|---|
| சிற்றுண்டி உணவுகள் | அங்கத்தவர் ஒருவருக்கு | 1 100 |
| நினைவுப்பொருள் | அங்கத்தவர் ஒருவருக்கு | 225 |
| அன்பளிப்புப் பொதி | அங்கத்தவர் ஒருவருக்கு | 775 |
| விடுதிக் கட்டணங்கள் | | 35 000 |
| மண்டப அலங்காரம் | | 5 000 |
| ஒலிபெருக்கி வாடகைக் கட்டணம் | | 2 000 |
| நிகழ்வு ஒழுங்கமைப்புச் செலவுகள் | | 3 000 |

இச்சங்கமானது இளைப்பாறிய ஆசிரியர்கள் உட்பட இந்நிகழ்வில் பங்குகொள்ளும் எல்லா ஆசிரியர்களுக்கும் நுழைவுச்சீட்டை விற்பனை செய்ய எண்ணியுள்ளது. நுழைவுச்சீட்டு ஒன்றின் விலை ரூ. 3 000 ஆகும். மேலதிகமாகப் பெறப்படும் பணம் சமூக நலத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும்.

**வேண்டப்படுவது:**

ஒன்றுகூடல் தொடர்பில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

(1) ஆசிரியர் ஒருவருக்கான பங்களிப்பு

(2) மொத்தச் செலவை ஈடுசெய்வதற்காக பங்குபற்ற வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை

(3) எல்லா ஆசிரியர்களும் பங்குபற்றுவார்களாயின் சமூக நலத் தேவைக்காக அன்பளிப்பு செய்யக்கூடிய பணத்தொகை

(4) ரூ. 27 000 ஐ சமூக நலத் தேவைக்காக அன்பளிப்பு செய்ய வேண்டுமாயின் பங்குபற்ற வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை

(5) எல்லா ஆசிரியர்களும் பங்குபற்றுவார்களாயின் நுழைவுச்சீட்டை விற்கக்கூடிய ஆகக் குறைந்த விலை

(6) இளைப்பாறிய ஆசிரியர்கள் நுழைவுச்சீட்டை வாங்கத் தேவையில்லையெனவும் இவர்களில் 24 பேர் இந்நிகழ்வில் பங்குபற்றுவர் எனவும் எதிர்பார்க்கப்படுமாயின், மொத்தச் செலவை ஈடுசெய்வதற்காக விற்க வேண்டிய நுழைவுச்சீட்டுகளின் எண்ணிக்கை

***(10 புள்ளிகள்)***

***(மொத்தம் 15 புள்ளிகள்)***

## விடை

05. (ஆ) (1) ஆசிரியர் ஒருவருக்கான பங்களிப்பு = ரூ.900 (04)

செய்கை

விற்பனை வருமானம் - மாறும் கிரயம்

3 000 [01] - 2 100 [03] = 900

மாறும் கிரயம் :

| | | |
|---|---|---|
| சிற்றுண்டி உணவுகள் | 1 100 | 01 |
| நினைவுப் பொருள் | 225 | 01 |
| அன்பளிப்புப் பொதி | 775 | 01 |
| | 2 100 | |

(2) மொத்த செலவை ஈடுசெய்வதற்காக பங்குபற்றவேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை = 50 (05)

செய்கை :

$$\frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகிற்கான பங்களிப்பு}} = \frac{45\,000 \;\boxed{04}}{\boxed{01}\; 900}$$

நிலையான கிரணம் :

| | | |
|---|---|---|
| விடுதிக்கட்டணம் | 35 500 | 01 |
| மண்டப அலங்காரம் | 5 000 | 01 |
| ஒலிபெருக்கி வாடகை | 2 000 | 01 |
| நிகழ்வு ஒருங்கிணைப்புச் செலவு | 3 000 | 01 |
| | 45 000 | |

(3) எல்லா ஆசிரியர்களும் பங்குபற்றுவார்களாயின் சமூகத்தேவைக்காக அன்பளிப்புச் செய்யக்கூடிய பணத் தொகை = ரூ. 90 000 (03)

செய்கை

| | | |
|---|---|---|
| மொத்த பங்களிப்பு | = [01] 900 × 150 [01] = | 135 000 |
| (-) நிலையான செலவு | = | 45 000 |
| | | 90 000 |

செய்கை

$\boxed{01}\; 900 \times (150 - 50)$ $\boxed{01}$ $\boxed{01}$

90 000

(4) ரூ. 27 000ஐ சமூக நலத் தேவைக்காக அன்பளிப்புச் செய்ய வேண்டுமாயின் பங்குபற்ற வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை = ரூ. 80 (03)

செய்கை

$$\frac{\text{நிலையான கிரயம் + எதிர்பார்த்த மிகை}}{\text{அலகிற்கான பங்களிப்பு}}$$

$$\frac{\boxed{01}\; 45\,000 + 27\,000 \;\boxed{01}}{\boxed{01}\; 900} = 80$$

(5) எல்லா ஆசிரியர்களும் பங்குபற்றுவார்களாயின் நுழைவுச்சீட்டை விற்கக்கூடிய ஆகக் குறைந்த விலை = ரூ. 2 400 (03)

செய்கை

$$= \frac{\text{மொத்த கிரயம்}}{\text{பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை}}$$

$$= \frac{\boxed{01}\ 315\ 000 + \boxed{01}\ 45\ 000}{150\ \boxed{01}}$$

= 2 400

அல்லது

150 [01] = [01] 45 000

விலை - 2 100 [01]

விலை = 300 + 2 100

= 2 400

(6) மொத்தச் செலவை ஈடுபடுத்துவதற்காக விற்கவேண்டிய நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை = 106 (02)

செய்கை

$$= \frac{\text{மீளப் பெறும் தொகை}}{\text{அலகிற்கான பங்களிப்பு}}$$

$$= \frac{45\ 000 + 50\ 400\ \boxed{01}}{\boxed{01}\ 900}$$

= 106

**(20 புள்ளிகள்)**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**5 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்கு புள்ளிகள் பெற்ற விதம்**




இவ்வினாவிற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அளவு 15 x 2 = 30 ஆகும்.
விண்ணப்பதாரிகளுள் 70% மானர்களே 5 ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 30 ஆகும்.
அதில் 00 - 07 புள்ளி வகுப்பாயிடையில் 23% ம்
08 - 15 புள்ளி வகுப்பாயிடையில் 21% ம்
16 - 23 புள்ளி வகுப்பாயிடையில் 24% ம்
24 - 30 புள்ளி வகுப்பாயிடையில் 32% ம்
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்காக புள்ளிகள் 24 அல்லது அதிலும் கூடுதலாகப் பெற்றவர்கள் 32%மாக இருப்பதுடன் விண்ணப்பதாரிகளுள் 07 அல்லது அதிலும் குறைவாகப் புள்ளிகள் பெற்றவர்களின் வீதம் 23% மாகும். இவ்வினாவிற்கு 16க்கு மேல் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் வீதம் 56% என்பது குறிப்பிடத்தக்க நிலமையாகும்.




இவ்வினாவிற்குரிய உப பிரிவுகள் 9 இன் 5 ஆம் பிரிவின் இலகுதன்மை 76% த்தை விட உயர்வாகக் காணப்படுகின்றது. அதிகூடிய இலகுதன்மை (அ)(3) இல் 89% மாகும். (ஆ) (1) இல் 85%மாகும். குறைவான இலகுதன்மை (அ) (1) இல் 66%மும் (ஆ)(6)இல் 27%மாகவும் காணப்படுகின்றது.

(5) (அ) (1) பகுதியின் இலகுதன்மை 66% ம் என்பதுடன், இதில் காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் தொடர்பான அறிவே பரீட்சிக்கப்பட்டுள்ளது. பழைய இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமையால் உருவான வருடாந்த காசுப் பாய்ச்சல்களின் எஞ்சியதை காசு உட்பாய்ச்சலாக இனம்காணாமை இதற்குக் காரணமாக இருக்கலாம். இது தொடர்பாக விளக்கம் கிடைக்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

(ஆ) (3) பகுதியின் இலகுதன்மை 68% மாகும். பங்களிப்பு மற்றும் நிலையான கிரயம் என்பவற்றைப் பயன்படுத்தி இலாபம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதையும் அந்த இலாபமானது புண்ணிய கருமமமொன்றிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் விளங்காமையே இதற்குரிய காரணமாக இருக்கலாம்.

(ஆ) (5) இன் இலகுதன்மை 58% மாகும். மொத்தக் கிரயத்தை பங்குபற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையினால் வகுத்து அனுமதிப்பத்திரத்தை விற்கக்கூடிய ஆகக் குறைந்த விலை தீர்மானிக்கப்படுகின்றது என்பது விளங்காமை இதற்குரிய காரணமாயிருக்கலாம்.

(ஆ) (6) இன் இலகுதன்மை 27%மாகும். ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அனுமதிப்பத்திரம் கொள்வனவு செய்தல் தேவையற்றது என்பது இவ்வினாவின் இலகுதன்மை குறைவதற்கு காரணமாயிருக்கலாம். அவர்களில் 24 பேரின் வருகையினை எதிர்பார்ப்பதற்குரிய கிரயத்தை நிலையான கிரையத்துடன் சேர்ப்பது தொடர்பிலான பரீட்சகர்களின் விளக்கம் போதாமை இதற்குரிய காரணமாயிருக்கலாம் எனக் கூற முடியும்.

**வினா இலக்கம் 06**

**6. (அ)** 01.03.2016 இல் ஸ்தாபிக்கப்பட்ட மயூரி கல்வி நிறுவனமானது பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை நடாத்துகிறது. இது இரண்டு நிரந்தர ஆசிரியர்களையும் தற்காலிக ஆசிரியர் ஒருவரையும் வேலைக்கு அமர்த்தியுள்ளது. ஒவ்வோர் ஆசிரியரும் மாதமொன்றுக்கு 120 மணித்தியாலங்கள் கற்பித்தல் வேண்டும்.

(i) ஆசிரியர்களின் மொத்தச் சம்பளமானது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| ● கற்பித்தலுக்கான கொடுப்பனவு (120 மணித்தியாலங்களுக்கு): | | | |
| நிரந்தர ஆசிரியர் | ஒருவருக்கு மாதமொன்றுக்கு | ரூ. | 75 000 |
| தற்காலிக ஆசிரியர் | மணித்தியாலமொன்றுக்கு | ரூ. | 500 |
| ● மேலதிக வகுப்புகளை நடாத்துவதற்கான கொடுப்பனவுகள் | மணித்தியாலமொன்றுக்கு | ரூ. | 750 |
| ● விடைத்தாள்கள் திருத்துதல் | விடைத்தாள் ஒன்றுக்கு | ரூ. | 100 |

(ii) 2016 மார்ச் மாதத்திற்கான கற்பித்தல் மணித்தியாலங்களினதும் திருத்தப்பட்ட விடைத்தாள்களினதும் எண்ணிக்கை பின்வருமாறு:

| **விபரம்** | **நிரந்தரம்:** | | **தற்காலிகம்:** |
|---|---|---|---|
| | **நந்தினி** | **சுரேஷ்** | **மஞ்சுளா** |
| இம்மாதத்தில் வேலை செய்த மணித்தியாலங்கள் | 140 | 160 | 180 |
| திருத்தப்பட்ட விடைத்தாள்களின் எண்ணிக்கை | 100 | 150 | 200 |

(iii) ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றுக்கான பங்களிப்பானது நிரந்தர, தற்காலிக ஆசிரியர்களினது மொத்தச் சம்பளத்தின் அடிப்படையிலானதாகும். ஊழியர் சேமலாப நிதிக்கான தொழில்தருனர், ஊழியர் பங்களிப்பு முறையே 15%, 10% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதிக்கான தொழில்தருனரின் பங்களிப்பு 3% ஆகும்.

**வேண்டப்படுவது:**

2016 மார்ச் மாதத்திற்கான:

(1) சம்பளப் பட்டியல்

(2) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு **(05 புள்ளிகள்)**

## விடை

**வினா இலக்கம் 06**

(அ) (1)

மயூரி கல்வி நிறுவனம்

2016 மார்ச் மாதத்திற்கான சம்பளப் பட்டியல்

| ஆசிரியர் பெயர் | அடிப்படை சம்பளம் | மேலதிக நேரக் கொடுப்பனவு | விடைத் தாள் திருத்துதல் | மொத்த சம்பளம் | EPF 10% | மொத்த கழிப்பனவு | தொழில் தருநர் EPF 15% | தொழில் தருநர் EPF 3% |
|---|---|---|---|---|---|---|---|---|
| நந்தினி | 75 000 | 15 000 | 10 000 | 10 000 | 10 000 | 10 000 | 15 000 | 3 000 |
| சுரேஷ் | 75 000 | 30 000 | 15 000 | 120 000 | 12 000 | 108 000 | 18 000 | 3 600 |
| மஞ்சுளா | 60 000 | 45 000 | 20 000 | 125 000 | 12 500 | 112 500 | 18 750 | 3 750 |
| | 210 000 | 90 000 | 45 000 | 345 000 | 34 500 | 310 500 | 51 750 | 10 350 |
| | (01) | (01) | (01) | (01) | (01) | (01) | (01) | (01) |

**(07 புள்ளிகள்)**

(2) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ.'000)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சென்மதி EPF | (01) | 34 500 | சம்பளம் | (01) | 345 000 |
| காசு/ சென்மதி சம்பளம் | (01) | 310 500 | | | |
| | | 345 000 | | | 345 000 |

**(03 புள்ளிகள்)**

**(ஆ)** பாடசாலையொன்றின் பழைய மாணவிகள் சங்கமொன்று 01.04.2013 இல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப அங்கத்தவர்கள் ரூ. 500 000 பங்களிப்புச் செய்து ஆயுட்கால அங்கத்தவர்களாக இணைந்துகொண்டனர். கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் இச்சங்கத்தின் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

| **விபரம்** | **31.03.2016 இலுள்ளபடி (ரூ.'000)** | **31.03.2015 இலுள்ளபடி (ரூ.'000)** |
|---|---|---|
| பெறவேண்டிய சந்தா | 20 | 15 |
| முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | 30 | 25 |
| திரண்ட நிதி | ? | 200 |
| ஆயுட்கால அங்கத்துவ நிதி | ? | 400 |
| ரீ-சேட்டுகளின் இருப்பு கிரயத்தில் | 40 | - |
| முற்பண மண்டப பதிவுக் கட்டணம் | - | 25 |
| இசைக் கச்சேரியிலிருந்து பெற வேண்டியவை | ? | - |
| காசு | ? | 50 |

**மேலதிக தகவல்கள்:**

(i) நபரொருவருக்கான வருடாந்தச் சந்தா ரூ. 500 ஆகும். 31.03.2016 இல் 600 அங்கத்தவர்கள் (ஆயுட்கால அங்கத்தவர்கள் நீங்கலாக) காணப்பட்டனர்.

(ii) ஆயுட்கால அங்கத்துவக் கட்டணமானது 10 வருட காலத்திற்கு வருமானமாக இனங்காணப்படும்.

(iii) பின்வரும் தகவல்கள் இச்சங்கத்தின் நிதியை அதிகரிப்பதற்கு 01.10.2015 இல் நடாத்தப்பட்ட இசைக் கச்சேரியுடன் தொடர்பாவையாகும்:

| **விபரம்** | **பெறப்பட்ட/செலுத்தப்பட்ட காசு (ரூ.'000)** |
|---|---|
| நுழைவுச்சீட்டு விற்பனைகள்: | |
| நுழைவுச்சீட்டொன்று ரூ. 1 000 படி 100 நுழைவுச்சீட்டுகள் | 100 |
| நுழைவுச்சீட்டொன்று ரூ. 500 படி 400 நுழைவுச்சீட்டுகள் (80% மட்டுமே பெறப்பட்டுள்ளது) | 160 |
| கச்சேரிக்கான அனுசரணைத் தொகை (75% மாத்திரமே பெறப்பட்டுள்ளது) | 375 |
| இசைக் கலைஞர்களுக்கான கொடுப்பனவுகள்: | |
| 5 பாடகர்களுக்கு ஒருவருக்கு ரூ. 40 000 படி | 200 |
| இசைக்குழு | 80 |
| மண்டப வாடகைக் கட்டணம் | 50 |
| சிற்றுண்டி உணவு வகை | 30 |

(iv) சங்கமானது ஒவ்வொன்றும் ரூ. 200 படி 500 ரீ–சேர்ட்டுகளைக் காசுக்குக் கொள்வனவு செய்தது. இவற்றுள் 300 ரீ–சேர்ட்டுகள் அங்கத்தவர்களுக்கிடையில் ஒவ்வொன்றும் ரூ. 250 படி காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.

(v) நிர்வாக உதவியாளருக்கு மாதாந்தச் சம்பளமாக ரூ. 30 000 செலுத்தப்படுகிறது.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுக் கணக்கு

(2) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வருவன:
  (i) சந்தா வருமானம்
  (ii) இசைக் கச்சேரியின் மிகை/பற்றாக்குறை
  (iii) ரீ–சேர்ட் விற்பனை மீதான மிகை/பற்றாக்குறை

(3) 31.03.2016 இலுள்ளவாறான பின்வருவனவற்றின் மீதி:
  (i) திரண்ட நிதி
  (ii) ஆயுட்கால அங்கத்துவ நிதி
  (iii) இசைக் கச்சேரியிலிருந்து பெற வேண்டியவை

**(10 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

(ஆ) (1) காசுக் கணக்கு (ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| மீதி கீ.கொ.வ | 50 | பாடகர் கொடுப்பனவு | 200 |
| நுழைவுச் சீட்டு விற்பனை | 260 | (01) இசைக்குழு கொடுப்பனவு | 80 } (02) |
| கச்சேரி அனுசரனை | 375 | (01) மண்டப வாடகை | 50 |
| சந்தா வருமானம் | 300 | (01) சிற்றுண்டி உணவுகள் | 30 |
| ரீ சேட் விற்பனை | 75 | (01) ரி சேட் கொள்வனவு | 100 (01) |
| | | நிர்வாக ஊழியர் சம்பளம் | 360 (01) |
| | | மீதி கீ.கொ.செ | 240 |
| | 1 060 | | 1 060 |

**(08 புள்ளிகள்)**

(ஆ) (2) (ரூ.'000)

(i) நசந்தா வருமானம் = ரூ. 350 (01)

செய்கை (ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| சந்தா வருமானம் = | 600 × 500 | = | 300 |
| ஆயுள் சந்தா | | = | 50 [01] |
| | | | 350 |

(ii) கச்சேரி வருமானக் கூற்று = ரூ. 415 (04)

செய்கை (ரூ.'000)

**இசைக் கச்சேரி வருமானக் கூற்று**

| | | | |
|---|---|---|---|
| இசைக் கலைஞர் கொடுப்பனவு | 200 } | நுழைவுச்சீட்டு விற்பனை | 300 [01] |
| இசைக் குழு | 80 } [01] | கச்சேரி அனுசரனை | 500 [01] |
| சிற்றுண்டி உணவு | 30 | | |
| மண்டப வாடகை | 75 [01] | | |
| மிகை | 415 | | |
| | 800 | | 800 |

(iii) ரீ சேட் விற்பனை மீதான மிகை = ரூ. 15 (02)

செய்கை (ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| ரீ சேட் விற்பனை | 300 × 250 | = | 75 [01] |
| ரீ சேட் கிரயம் | 300 × 200 | = | (60) [01] |
| மிகை | | | 15 |

**(07 புள்ளிகள்)**

(3) (i) 2016.03.21 இல் திரண்ட நிதி = ரூ. 620 (02)

| செய்கை | | (ரூ.'000) | |
|---|---|---|---|
| 2015.04.01 இல் திரண்ட நிதி | - | 200 | |
| கூட்டு வருமான மிகை | - | 420 | 02 |
| | | 620 | |

| வருமானச் செலவுக் கணக்கு | | | |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| அங்கத்தவர் சந்தா | 300 | | |
| ஆயல் சந்தா | 50 | | |
| இசைக்கச்சேரி மிகை | 415 | ஏதேனும் 4 விடயங்களுக்கு | 02 |
| ரீ சேட் விற்பனை மிகை | 15 | | |
| | 780 | | |
| செலவு | | | |
| நிர்வாக ஊழியர் சம்பளம் | (360) | | |
| வருமான மிகை | 420 | | |

(ரூ.'000)

(ii) ஆயுட்கால அங்கத்துவ நிதி 350 (01)

(ரூ.'000)

(iii) இசைக்கச்சேரியில் இருந்து பெறவேண்டியவை 165 (02)

| செய்கை | | (ரூ.'000) | |
|---|---|---|---|
| நுழைவுச் சீட்டு வருமானம் | = | 40 | 01 |
| கச்சேரி அனுசரணை | = | 125 | 01 |
| | | 165 | |

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**6 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்கு புள்ளிகள் பெற்ற விதம்**




இவ்வினாவிற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அளவு 15 x 2 = 30 ஆகும்.
விண்ணப்பதாரிகளுள் 52% மானோர் மட்டுமே 6 ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ளனர்.
அதில் 00 - 07 புள்ளி வகுப்பாயிடையில் 48% ம்
08 - 15 புள்ளி வகுப்பாயிடையில் 31% ம்
16 - 23 புள்ளி வகுப்பாயிடையில் 14% ம்
24 - 30 புள்ளி வகுப்பாயிடையில் 7% ம்
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்காக 24 புள்ளிகள் அல்லது அதிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் 7% மாகக் காணப்படுவதுடன் விண்ணப்பதாரிகளுள் 48% மானர்கள் 07 அல்லது அதிலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 16 அல்லது அதனையும் விடக் கூடிய புள்ளிகளை 21%மானோர் மாத்திரமே பெற்றுள்ளனர். இது குறிப்பிடத்தக்க பலவீனமொன்றாகும்.




இவ்வினாவிற்குரிய 02 உபபிரிவுகளில் (அ) பகுதியின் இலகுதன்மை 65%மாகும். (ஆ) பகுதியின் உபபிரிவுகள் (3) ஆகும். இப்பகுதிகள் சகலவற்றினதும் இலகுதன்மை 47%-13% த்திற்கும் இடைப்பட்டதாகும்.

(6) (அ) பகுதியின் உபபிரிவுகள் இரண்டினதும் இலகுதன்மை 65% மாகும். இதில் சம்பளப்பட்டியல் மற்றும் சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு தயாரிப்பது தொடர்பான விளக்கமே பரீட்சிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளினுள் மொத்தச் சம்பளத்தைக் கணிப்பது தொடர்பான விளக்கம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) பகுதியின் (1) இன் இலகுதன்மை 47% மாகும். காசுக்கணக்கைத் தயாரிக்கும்போது காணப்படுகின்ற மேலதிகத் தகவல்களை கவனத்தில் கொள்ளாமல் இருந்தமையை இங்கு காணக்கூடியதாகவுள்ளது.

(ஆ) (2) (1) பகுதியின் இலகுதன்மை 29%மாகும். நிதியாண்டுக்குரிய ஆயுற்கால அங்கத்தவர் சந்தாவை அங்கத்துவச் சந்தாக் கணக்கில் சரியாகச் சீராக்காமையை இங்கு காணக்கூடியதாயிருந்தது.

(ஆ) (2) (ii) இன் இலகுதன்மை 31% மாகும். அனுமதிச்சீட்டு விற்பனை வருமானத்தை கணிக்கும்போது அட்டுறு அடிப்படையினை கவனத்தில் கொள்ளாமை, அனுசரணைப் பங்களிப்பினை நிதியாண்டுக்குரியதாக சீராக்கியிருக்காமை, பொது மண்டப வாடகையினை ஒதுக்குவதற்கான முற்பணம், மற்றும் செலுத்திய மண்டப வாடகை போன்ற இரண்டையும் நிதியாண்டுக்குரிய மண்டப வாடகையாக இனம்கண்டிருக்கவில்லை.

ஆ (2) (iii) இன் இலகுதன்மை 42%மாகும். டீசேர்ட் விற்பனைக்கான கிரயத்தை சரியாகக் கணிக்காமையும் மற்றும்விடையளிக்காமையும் இதில் காணக்கூடியதாயிருந்தது.

(ஆ) (3) (i) இன் இலகுதன்மை 13% மாகும். திரண்டநிதியினை கட்டியெழுப்புவதற்கான அறிவு, பரீட்சார்த்திகளினுள் மிகக்குறைவாவே உள்ளது. சரியான மிகையினைக் கணிக்கும்போது நிதியாண்டுக்குரிய சரியான வருமானம் செலவுகளை கணிக்காமை என்பன இதிலுள்ள குறைபாடாகும். திரண்ட நிதியினைக் கட்டியெழுப்பும் முறையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

(ஆ) (3) (ii) இன் இலகுதன்மை 28%மாகும். ஆயுள் சந்தாக்கட்டணம் கிடைத்த திகதி கவனத்தில் கொள்ளாமையும் அதற்கேற்ப நிதியாண்டுக்குரிய ஆயுற்கால அங்கத்துவக் கட்டணத்தை இனம்காணாமை இதற்குரிய காரணமாகயிருக்கலாம்.

(ஆ) (3) (iii) இன் இலகுதன்மை 31% மாகும். அனுமதிப்பத்திரங்களிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை மற்றும் அனுசரணையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை என்பவற்றை இனம்காணாமையே இதற்கான காரணங்களாக இருக்கலாம்.

இந்த சகல உபபிரிவுகளுக்கு விடையளிக்கும்போது அட்டுறு அடிப்படை தொடர்பான விளக்கம் குறைவாகக் காணப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதனால் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பது தொடர்பான விளக்கம் கிடைக்கும் வகையில் கற்றல்-கற்பித்தல் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

**வினா இலக்கம் 07**

**7. (அ)** பின்வரும் தகவல்கள் வரையறுத்த உஷா பொதுக்கம்பனியின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

| | |
|---|---|
| மொத்த இலாப வீதம் | 20% |
| சொத்துப் புரள்வு விகிதம் | 0.5 தடவைகள் |
| சரக்கிருப்புப் புரள்வு விகிதம் | 8 தடவைகள் |
| மொத்த இலாபம் | ரூ. 400 000 |
| மொத்தச் செலவுகள் | ரூ. 160 000 |
| 31.03.2016 இலுள்ளவாறான மொத்தப் பொறுப்புக்கள் | ரூ. 1 600 000 |

**வேண்டப்படுவன:**

(1) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைகள்
(2) 2015/16 ஆம் வருடத்திற்கான சராசரிச் சரக்கிருப்பு
(3) 31.03.2016 இலுள்ளவாறான மொத்தச் சொத்துக்கள்
(4) உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம்
(5) உரிமையாண்மை விகிதம்

**(05 புள்ளிகள்)**

விடை

**வினா இலக்கம் 07**

(அ) (1) 31.03.2016இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைகள் ரூ. 2 000 000 (02)

செய்கை

உரிமையாண்மை திரும்பமொத்த இலாப வீதம் $= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{400\ 000\ \boxed{01}}{20\%\ \boxed{01}} \times 100$

விற்பனை = 2 000 000

(2) 2015/16 ஆம் வருடத்திற்கான சராசரிச் சரக்கிருப்பு ரூ. 200 000 (02)

செய்கை

சரக்கிருப்பு புரள்வு விகிதம் $= \frac{\text{விற்பனைக் கிரயம்}}{\text{சராசரிக் கையிருப்பு}}$

$= \frac{1\ 600\ 000\ \boxed{01}}{8\%\ \boxed{01}} = 200\ 000$

சராசரிக் கையிருப்பு = 2 000 000

(3) 31.03.2016 இலுள்ளவாறான மொத்தச் சொத்துக்கள் ரூ. 4 000 000 (02)

செய்கை

மொத்தச் சொத்து புரள்வு விகிதம் $= \dfrac{\text{மொத்த விற்பனை}}{\text{மொத்த சொத்துக்கள்}}$

$= \dfrac{2\ 000\ 000}{0.5\%}$ [01] [01]

மொத்த சொத்துக்கள் = 4 000 000

(4) உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் 10% (02)

செய்கை

உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் $= \dfrac{\text{வரிக்குப்பின் இலாபம்}}{\text{உரிமையாண்மை}} \times 100$

$= \dfrac{240\ 000}{2\ 400\ 000} \times 100 = 10\%$ [01] [01]

(5) உரிமையாண்மை விகிதம் 60% (02)

செய்கை

உரிமையாண்மை விகிதம் $= \dfrac{\text{உரிமை மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}}$

$= \dfrac{2\ 400\ 000}{4\ 000\ 000} \times 100 = 60\%$ [01] [01]

(ஆ) 31.03.2016 மற்றும் 31.03.2015 இலுள்ளவாறான வரையறுத்த அகிலன் பொதுக்கம்பனியின் சுருக்கிய நிதி நிலைமைக் கூற்றுகள் பின்வருமாறு.

| | 31.03.2016 இலுள்ளவாறு (ரூ.'000) | 31.03.2015 இலுள்ளவாறு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | | |
| - மீள் மதிப்பீட்டுத் தொகையில் ………………………… | 312 | 240 |
| திரண்ட பெறுமானத்தேய்வு | | |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்……………… | (72) | (40) |
| சரக்கிருப்புகள் ……………………………………………… | 184 | 104 |
| வியாபார வருமதிகள் ……………………………………… | 80 | 120 |
| ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு……………………………… | (32) | (16) |
| காசு ……………………………………………………… | 192 | – |
| **மொத்தச் சொத்துக்கள்** ……………………………… | **664** | **408** |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் ………………… | 280 | 40 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ……………………………… | 56 | 16 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் ………………………… | 32 | 96 |
| நீண்டகாலக் கடன்கள் ……………………………………… | 120 | – |
| வியாபாரக் கொடுக்குமதிகள் ……………………………… | 136 | 144 |
| செலுத்த வேண்டிய சம்பளங்கள் ……………………… | 40 | 32 |
| வங்கி மேலதிகப்பற்று ……………………………………… | – | 80 |
| **மொத்தப் பொறுப்புக்களும் உரிமையாண்மையும்** ………… | **664** | **408** |

**மேலதிக தகவல்கள்:**

(i) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் சுருக்கிய வருமானக் கூற்று பின்வருமாறு:

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| விற்பனைகள் ……………………………………………………………… | 120 |
| விற்பனைக் கிரயம் ……………………………………………………… | (80) |
| தரகு வருமானம் (வருட முடிவில் பெறவேண்டியவை எவையுமில்லை) ………. | 8 |
| தளபாட விற்பனை மீதான ஆதாயம் (இதன் கொண்டுசெல் தொகை ரூ. 40 000) …. | 16 |
| ஐயக்கடன்கள் ……………………………………………………………… | (16) |
| பெறுமானத்தேய்வு ………………………………………………………… | (40) |
| சம்பளங்கள் ……………………………………………………………… | (72) |
| வருடத்திற்கான நட்டம் …………………………………………………… | (64) |

(ii) இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.

(iii) இவ்வருடத்தில் பங்கு வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 31.03.2016 இல் 3 வருட கடனொன்று பெறப்பட்டது.

**வேண்டப்படுவது:**

LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுத்த அகிலன் பொதுக்கம்பனியின் காசுப் பாய்ச்சல் கூற்று

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**விடை**

(3) வரையறுக்கப்பட்ட அகிலன் கம்பனி

2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சற்கூற்று (01)

| | | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையில் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| வரி கழிக்கு முன் செயற்பாட்டு நட்டம் | (64) (01) | |
| பெறுமானத் தேய்வு | 40 (01) | |
| தளபாட விற்பனை இலாபம் | (16) (01) | |
| ஐயக்கடன் | 16 (01) | |
| தொழிற்படும் மூலதன அசைவுக்கு முன் காசுப்பாய்ச்சல் | (24) | |
| இருப்பு அதிகரிப்பு | (80) (01) | |
| வியாபார வருமதிகள் குறைவு | 40 (01) | |
| வியாபார கொடுக்குமதிகள் குறைவு | (8) (01) | |
| செலுத்தவேண்டிய சம்பளங்கள் அதிகரிப்பு | 8 (01) | |
| செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசு (01) | | (64) |
| **முதலீட்டு நடவடிக்கையில் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம் பொறி உபகரணம் கொள்வனவு | (80) (02) | |
| தளபாட விற்பனை | 56 (02) | |
| முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசு (01) | | (24) |
| **நிதியீட்டு நடவடிக்கையில் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| சாதாரண பங்கு வழங்கல் | 240 (01) | |
| நீண்ட காக் கடன் பெற்றது | 120 (01) | |
| நிதியீட்ட நடவடிக்கையில் உருவான தேறிய காசு (01) | | 360 |
| காசும் காசுக்கு சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு | | 272 |
| 2015.04.01 இல் காசும் காசுக்கு சமமானவை | | (80) (01) |
| 2016.03.31 இல் காசும் காசுக்கு சமமானவை | | 192 (01) |

**(20 புள்ளிகள்)**

**செய்கை** **ஆதனம் பொறி உபகரணக்கணக்கு** **ரூ'000**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 240 | தளபாட விற்பனை | 48 [01] |
| மீள்மதிப்பீடு | 40 [01] | மீதி கீ.கொ.செ | 312 |
| காசு | 80 | | |
| | 360 | | 360 |

**தளபாட விற்பனைக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| தளபாடம் | 48 [01] | பெ.தே. ஏற்பாடு | 8 [01] |
| இலாபம் | 16 | காசு | 56 |
| | 64 | | 64 |

**தளபாட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு ரூ'000**

| | | | |
|---|---|---|---|
| தளபாட விற்பனை | 08 | மீதி | 40 |
| மீதி கீ.கொ.செ | 72 | பெறுமானத் தேய்வு | 40 |
| | 80 | | 80 |

**(20 புள்ளிகள்)**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**7 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




இவ்வினாவிற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அளவு 15 x 2 = 30 ஆகும்.
விண்ணப்பதாரிகளுள் 66% மானர்கள் மட்டுமே 7 ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ளனர்.
அதில் 00 - 07 புள்ளி வகுப்பாயிடையில் 28% ம்
08 - 15 புள்ளி வகுப்பாயிடையில் 30% ம்
16 - 23 புள்ளி வகுப்பாயிடையில் 24% ம்
24 - 30 புள்ளி வகுப்பாயிடையில் 18% ம்
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அதற்கேற்ப இவ்வினாவிற்கு 24 புள்ளிகள் அல்லது அதனை விடக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் 18%மாகக் காணப்படுவதுடன் விண்ணப்பதாரிகளில் 28%மானோர் 07 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். இவ்வினாவில் 16ஐ விடக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ள சதவீதம் 42% மாகும்.




இவ்வினாவின் உபபிரிவுகள் 6 இல் 4 பிரிவுகளது இலகுதன்மை 55% இற்கு மேற்பட்டதாகும்

(7) (அ) (1) இன் இலகுதன்மை 80% மாகும். அடிப்படைக் கணித எண்ணக்கரு தொடர்பான விளக்கம் காணப்படாமை காரணமாக ஏறக்குறைய 20% மானோர் இதற்கு விடையளித்திருக்கவில்லை.

(7) (அ) (2) பகுதியின் இலகுதன்மை 66% மாகும். விற்பனைக் கிரயத்தைக் கணிக்க முடியாமை காரணமாக சராசரி இருப்பினைக் கணிக்க முடியாமல் போனதே இதற்கான காரணமாகும்.

(7) (அ) (3) பகுதியின் இலகுதன்மை 57% மாகும். புரள்வினைக் கணிக்க முடியாமை காரணமாக மொத்தச் சொத்தினைக் கணிக்க முடியாமல் போயிருந்தது.

(7) (அ) (4) பகுதியின் இலகுதன்மை 45% மொத்தச் சொத்துக்கள் - பொறுப்பு = உரிமையாண்மை என்பதை இனம்காணாமை மற்றும் மொத்த இலாபத்திலிருந்து செலவினைக் குறைத்து தேறிய இலாபம் எனப்படுகின்ற உழைப்பானது கிடைக்கப்பெறுகின்றது என்பதனை விளங்கியிருக்காமையே இதற்குரிய காரணம் என்பது தெரியவருகின்றது.

(7) (அ) (5) பகுதியின் இலகுதன்மை 26% மாகும். உரிமையாண்மைக் கணிப்பீடு மற்றும் மொத்த மூலதனக் கணிப்பீடு என்பன தொடர்பான விளக்கம் காணப்படாமையே இதற்குக் காரணமாகும்.

விகிதக் கணிப்பீட்டின்போது சூத்திரங்கள் தொடர்பான விளக்கம் கிடைக்கும் வகையில் பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ளச் செய்வது பொருத்தமானதாகும்.

(7) (ஆ) பகுதியின் இலகுதன்மை 55%மாகும். காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும்போது ஐயக்கடன் குறைவு ஏற்பாடானது காசுப்பாய்ச்சலில் தாக்கத்தை ஏற்படுத்தாத உருப்படி என்பதை பரீட்சார்த்திகள் இனம் கண்டிருக்கவில்லை.

வரிக்கு முன்னரான நட்டம் காட்டப்பட்டமையினால், அதற்கேற்ப காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பதற்கு பரீட்சார்த்திகள் பயிற்றப்பட்டிருக்கவில்லை.

காசேட்டில் வரவு செலவு வைக்கப்பட்ட எனினும் இலாப நட்டக் கணக்கில் வரவு செலவு வைக்கப்படாத உருப்படிகளை மீண்டும் சீராக்கல் வேண்டும் என்பதை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது விளக்குதல் வேண்டும்.

செயற்பாட்டு, முதலீட்டு, நிதிச் செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சலுக்குரிய பெறுமதிகள் காட்டப்படல் வேண்டும் என்பதை விளக்குதல் வேண்டும்.

2.2.3 **வினாத்தாள் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் :**




II ஆம் வினாப்பத்திரத்தில் 6 ஆம் வினா தவிர்ந்த ஏனைய வினாக்களின் இலகுதன்மை 55% அல்லது அதைவிடக் கூடியதாகும்.

II வினாப்பத்திரத்தின் வினாக்களில் 5 ஆம் வினாவிற்கு கூடிய இலகுதன்மையாக 72%ம் காட்டப்பட்டுள்ளதுடன், குறைந்த இலகுதன்மை 48% வீதம் 6 ஆம் வினாவிற்கு காட்டப்பட்டுள்ளது.

முதலாம் இரண்டாம் வினாக்கள் கட்டாய வினாக்களாகும். இவ்விரு வினாக்களில் கூடிய இலகுதன்மை 2 ஆம் வினாவிற்கு காட்டப்பட்டுள்ளதுடன் அதன் இலகுதன்மை 69% மாகும்.

3 ஆம் வினாவிலிருந்து 7 ஆம் வினா வரையான வினாக்கள் தெரிவு வினாக்கள் எனப்படுவதுடன் அதில் கூடுதலான இலகுதன்மை 5 ம் வினாவிற்கு காட்டப்பட்டுள்ளது. அதன் இலகுதன்மை 72% மாகும். வினாக்களைத் தெரிவு செய்யும்போது கூடுதலானோர் 3 ஆவது வினாவினையே தெரிவுசெய்துள்ளனர். இதன் விகிதம் 93% மாகும். 2 ஆம் வினாப்பத்திரத்தில் தெரிவு செய்த வினாக்களில் குறைந்த தொகையினர் தெரிவு செய்துள்ள வினா 6 ஆம் வினா என்பதுடன் அதன் இலகுதன்மை 52% ஆகும்.

தெரிவு வினாக்களில் இரண்டாவதாக கூடுதலானோர் 5 ஆம் வினாவினை தெரிவு செய்துள்ளதுடன், அதன் தெரிவு 79% மாகும்.

## பகுதி III

**3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும் :**

**3.1. விடையளிக்கும் போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் :**

**பொதுவான அறிவுருத்தல்கள்**

* வினாப்பத்திரத்திலுள்ள பிரதான அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு காலம் வழங்கப்பட்டுள்ளது, எவ்வளவு புள்ளிகள் கிடைக்கப்பெறும் என்பன தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.
* வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கி வினாக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் வினாவைத் தெரிவு செய்யும்போதும், விடையளிக்கும்போதும் அதனைப் பயன்படுத்துதல் வேண்டும்.
* விடைகள் தெளிவான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.
* பரீட்சார்த்திகள் விடைத்தாளின் எல்லாப் பக்கங்களிலும் உரிய இடங்களில் தமது சுட்டெண்ணை எழுதுதல் வேண்டும்.
* வினாத்தாள் I இல் 1 - 30 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான விடையினை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.
* வினாத்தாள் I இல் 31 - 50 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது நீண்ட விளக்கங்களை உள்ளடக்கத் தேவையில்லை.
* வினாத்தாள் II இற்கு விடையளிக்கும்போது எல்லா பிரதான வினாக்களையும் புதிய தாளில் எழுதத் தொடங்க வேண்டும்.
* விடைத்தாள் இணைக்கப்படுமாயின் சரியாக இலக்கமிடப்பட்டு தாள்கள் சரியாகக் கட்டப்படல் வேண்டும்.
* வினா இலக்கம், உபபிரிவுகளின் இலக்கங்கள் சரியாக எழுதப்பட வேண்டும்.
* வினாவில் கேட்கப்பட்டுள்ளவாறு விடைகள் தர்க்கரீதியாகவும், பகுப்பாய்வு முறையிலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
* ஒவ்வொரு உபபகுதிகளையும் சரியாக வாசித்து ஒவ்வொரு பகுதிகளையும் இலக்கமிட்டு அதற்குரிய விடையினை மட்டும் எழுதுதல் வேண்டும்.
* வினாக்களுக்கு விடையளிக்கும்போது வழங்கப்பட்டுள்ள நேரத்தினை சரியான முறையில் முகாமைத்துவம் செய்துகொள்ள வேண்டும்.
* விடையெழுதும்போது சிவப்பு, பச்சை நிற மை பேனாக்களை பாவித்தலைத் தவிர்க்கவும்.

**விசேட அறிவுருத்தல்கள் :**

1. வினாவுக்கான விடைகள் படிப்படியாக முன்வைக்கப்படல் வேண்டும்.
2. விடையளிக்கும் போது ஆயிரங்களில் முன்வைப்பதாயின் சகல தொகைகளும் ஆயிரங்களில் என்பதைக் குறிப்பிட வேண்டும். (அதாவது 'ரூபா 000' என)
3. ஒவ்வொரு வினாவுக்குமான முற்செய்கைகள் அந்தந்த வினாக்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும்.
4. வினாவின் உபபகுதிகள் காணப்படுமாயின், விடைக்குரிய உபபகுதி இலக்கத்தினை சரியாக குறிப்பிட்டு முன்வைத்தல் வேண்டும். வினாவின் உபபகுதிகள் காணப்படுமாயின், அதன் விடை-களை எல்லா இடங்களிலும் பரவலாக எழுதக் கூடாது.
5. இலக்கங்களைத் தெளிவாக எழுதுதல் வேண்டும். நேர், மறை இலக்கங்கள், உண்மை, பொய், பொருத்தமானது, பொருத்தமற்றது என்பவற்றை தெளிவாக எழுதுதல் வேண்டும்.
6. தான் பெற்ற விடையினைப் பயன்படுத்தி முழுமையான விடையினை வழங்குதல். அதாவது தான் எழுதிய விடை பிழையானது எனக்கருதி எஞ்சிய பகுதிகளுக்கு விடையளிக்காதிருத்தலையும் தவிர்த்தல் வேண்டும்.
7. கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கணக்கீட்டுக் குறிப்புகள், செய்கை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை சரியாக இனங்கண்டு விடையளித்தல் வேண்டும்.
8. வருமானம் மற்றும் செலவுகளை அட்டுறு அடிப்படையில் சீராக்குவதில் காணப்படுகின்ற குறைபாடு பெரும்பாலான விடைகளில் பொதுவாகக் காணப்படுகின்ற பலவீனம் என்பதனால் அது தொடர்பில் கூடுதலாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
9. அடிப்படைக் கணித எண்ணக்கரு தொடர்பான விளக்கம் குறைவாகக் காணப்படுகின்றமையானது சரியான விடையினைப் பெற்றுக் கொள்வதற்கு தடையாக இருப்பதனால் அதனை மேம்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## 3.2. கற்றல் - கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும் :

* பாடத்திட்டம், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, 1995 ஆம் 15 ஆம் இலக்கம் கொண்ட கணக்கீட்டு, கணக்காய்வு நியமச் சட்டம், 2007 ஆம் 07 ஆம் இலக்கம் கம்பனிச் சட்டம், உயர் தரத்திற்கு விதந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் தொடர்பில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ள,

  (1) கணக்கீட்டு நியமங்களும், கம்பனிக் கணக்குகளும்
  (2) கிரய, முகாமைத்துவக் கணக்கீடு.

  என்பவை தொடர்பில் ஆசிரியர்களைப் போன்றே மாணவர்களும் அறிந்து கொள்வதுடன், அவற்றைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

* கணக்கீட்டு வினாப்பத்திரத்திற்கு சிறப்பாக விடையளிப்பதாயின் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் கருமங்களின் போது வணிக உலகில் நடைமுறை ரீதியிலான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகளை தயாரித்து வழங்கள் மிக முக்கியமாகும்.

* அச்சுப்பதிக்கப்பட்ட பயிற்சிகளை வழங்க முடியுமாயின் கூடுதலாக பயிற்சிகளை வழங்கி விடைகளை எழுதும் சந்தர்ப்பங்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

* வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் காணப்படும் குறைபாடு காரணமாக வினாக்களை விளங்கிக் கொள்வதிலும் வெளிப்படுத்தும் திறனிலும் காணப்படும் பிரச்சினைகளை இழிவு படுத்திக் கொள்வதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

* நடைமுறை வணிக உலகில் பயன்படுத்தப்படுகின்ற முதன்மை ஆவணங்கள், கணக்கீட்டறிக்கைகள் என்பவற்றை வகுப்பறைக் கற்பித்தல் துணைச் சாதனங்களாக பயன்படுத்தி பாடத்தினை விருத்தி செய்வதற்குத் தேவையான அனுபவங்களை உறுதி செய்வதற்கு வழிகாட்டுதல் அவசியம்.

  உதாரணம் - மூல ஆவணங்கள்
  - வங்கிக் கூற்று
  - சம்பளப் பட்டியல்
  - இருப்பு அறிக்கை (இன்வென்றி அறிக்கை)
  - கம்பனி வருடாந்த அறிக்கை

* இப்பாடம் தனக்கு மாத்திரமன்றி சமூகத்திற்கும் சம அளவில் முக்கியத்துவமுடைய பாடமொன்றாகையால் சகல வேளைகளிலும் கற்றல் செயலொழுங்குகளை நல்ல விளக்கத்துடனும், தர்க்க ரீதியாகவும், மனதை ஈர்க்கும் வகையிலும் கற்றல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு அலகினையும் ஏன் கற்க வேண்டும் என்பது தொடர்பில் மாணவர்களின் மனதில் பதியும் வகையிலும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

* இப்பாடமானது தீர்மானமெடுத்தலுக்கு முக்கியமான பாடமொன்றாக இருப்பதனால் ஒவ்வொரு பாட அலகுகளையும் கற்பிக்கும் போது கற்றல் உபகரணங்களையும், கருவிகளையும் பாவிப்பதனூடாக மகிழ்ச்சியான கற்றற் சூழலொன்றைக் கட்டியெழுப்புவதற்கும், திறன்களை விருத்தி செய்வதற்குமான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல் பொருத்தமானது.

* பாடத்திட்டத்தில் இறுதிப் பாடப்பகுதியினை அடிப்படையாகக் கொண்டு உள்ளடக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும் போக்கானது குறைந்த மட்டத்தில் இருப்பதுடன், அப்பகுதிகளுக்கு விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளிகளும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதற்கேற்ப கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளின்போது அப்பாடப்பகுதியை பூரணப்படுத்துதற்கு கூடிய கவனம் எடுக்கப்படல் வேண்டும்.

* நவீன பாட அறிவினை விருத்தி செய்து கொள்வதற்கும், இற்றைப்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக செயற்படும் ஆசிரியர்கள், திறன்கள் நிறைந்த ஆக்கச்சக்தியுள்ள நபர்கள் என்பதுடன் அவர்கள் மாணவர் சமுதாயத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்குபவர்களுமாவர்.